கல்கி

KALKI
7-3-82
ரூ. 1.20



கலை உலகு களிக்கிறது



பெண்கள் தங்கள் மனோபாவங்களை
அநேக அழகான வழிகளில்
வெளிப்படுத்துகிறார்கள்.
விமல் அவற்றில் ஒன்று.
VIMAL®
A RELIANCE PRODUCT
100% பாலியெஸ்டர் புடவைகள்
இந்தப் புடவைதான்: ஸில்க்கி பரீஸ்
100% பாலியெஸ்டர் டெக்கரைஸ்டு
ட்விஸ்டட் புடவை.
® is the registered trademark of Reliance Textile Industries Ltd.



தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா -பாரதியார்

1982 மார்ச் 7
துன்மதி மாசி 23
மலர்: 40 இதழ்: 32

கல்கி



கலை உலகம் களிக்கிறது!

அமிதாப் பச்சனா? சிவாஜி கணேசனா? — விடை கிடைத்து விட்டது.

தமிழகம் பெருமிதத்துடன் நடிகர் திலகத்தை வாழ்த்தும் போதே அமிதாப் பச்சனுக்கு ''பெட்டர் லக் நெக்ஸ்ட் டைம்'' கூறித் தட்டிக் கொடுக்கிறது. மகிழ்ச்சிக் கிடையில் பண்பாடு மறப்பவரில்லை நாம்.

பிருத்விராஜ் கபூர் வகித்த பதவி; வாசன் கௌரவித்த நாற்காலி; நர்கீஸ் அலங்கரித்த இடம் — அங்கே சிவாஜி அமரப் போகிறார். கலை உலகம் களிக்கிறது. நம்மைப் பொறுத்த மட்டில் அவர் என்றோ எம். பி. ஆகிவிட்டவர் — மாஸ்டர் ஆஃப் பர்ஃபார்மன்ஸ்!

'பராசக்தி' தொடங்கி 'வா, கண்ணா வா' வரை அவருடைய வளர்ச்சியைக் கவனித்து வந்திருப்பவர்களுக்கு இந்தப் பெருமை அவருக்குக் கிட்டியதில் வியப்பில்லை; கிட்டாமல் போயிருந்தால் தான் ஆச்சரியம். வசனங்களைப் பொழிந்தே ரசிகர்களைக் கவர்ந்த காலம், பிறகு உணர்ச்சிகளைக்கொட்டிப் பெயர் பெற்ற காலம்; இன்று அமைதி காத்தே உள்ளங்களை அள்ளிச் செல்கின்ற காலம்! கால மாறுபாடுகளுக்கு அனுசரணையாகத் தம்மை மாற்றிக்கொண்டு பேராற்றலுடன் வெற்றிகளைக் குவிக்கிறவர் சிவாஜி.

சில நேரங்களில் சில தயாரிப்பாளர்கள் — டைரக்டர்கள் அவருக்கு ஏற்ற கதாபாத்திரத்தை அளிக்காமல் கடுமையான விமர்சனத்துக்கு உள்ளாக்கியது அவர் குற்றமல்ல. நடிப்புக்கு இலக்கணம் வகுத்தவர்; கலை உலகின் சிகரத்தில் இருப்பவர்; கலைஞர்களின் பெருமதிப்புக்கு உரியவர் —


இன்று ராஜ்ய சபைக்குச் செல்கிறார். தமிழகத்தின் சார்பில் அல்ல; அனைத்து இந்தியாவின் சார்பில். இந்திரா காங்கிரஸ் சார்பில் அல்ல; கலை உலகின் சார்பில் — இதைத்தான் சிவாஜி கவனத்தில் கொள்ள வேண்டும்.


இந்திரா காந்தி தம்மைக் கௌரவப்படுத்தியிருப்பதாக அவர் நன்றி தெரிவிக்கிறார்; தவறில்லை. ஆனால் அவர் நாடாளுமன்றத்தில் பாடுபட வேண்டியது கட்சிக்காக அல்ல, கலை உலகுக்காக. வாதாட வேண்டியது அரசியல்வாதிகளுக்காக அல்ல, . கலைஞர்களுக்காக. எவ்வளவோ இருக்கிறது செய்ய, வாதாட, சாதிக்க.

சிவாஜி போல எல்லாருமே சகாப்தம் சமைக்க முடியுமா? பல கலைஞர்களின் கலை உலக வாழ்வு நாலைந்து ஆண்டுகளோடு சரி. இந்த ஆண்டுகளில் சம்பாதிப்பதுதான் அவர்களுக்கு வாழ் நாளைக்கும் கைகொடுக்க வேண்டும். எனவே கலைஞர்களின் ஓராண்டு வருமானத்தை ஐந்தாண்டு வருமானமாகக் கருதி அதற்கேற்பவே வருமான வரி விதிக்க வேண்டும். இப்படி மேனாடுகளில் நடிகர்கள், எழுத்தாளர்கள், ஓவியர்கள் போன்றோருக்குச் சலுகை உண்டு. இதைச் செய்தால் கறுப்புப் பண பேரமும் திரை உலகில் குறையும்.

எந்த வங்கியும் சினிமா எடுக்கக் கடன் தராது. எனவே நாற்பது சதம்வரை வட்டி கொடுத்துக் கடன் வாங்க நேர்கிறது. அடி விழுந்தால் பலமாக விழுகிறது; கொட்டினாலும் கூரையைப் பிய்த்துக் கொண்டு கொட்டுகிறது. திரைப் படத் தொழிலில் ஓர் ஆரோக்கியமான பொருளாதாரம் நிலவ, கறுப்புப் பண முதலைகள் வளையவரும் தொழில் என்ற அபகீர்த்தி நீங்க, ஸெக்ஸும் வன்முறையும் ஒழிந்து சினிமாவுக்கு ஒரு சமுதாயப் பிரக்ஞை உருவாக, அந்த உலகில் அன்றாடம் காய்ச்சிகளாக வாழும் பல்லாயிரக் கணக்கானோருக்கு ஒரு நிரந்தர வேலைவாய்ப்பு ஏற்பட, சிவாஜி உழைத்தால் அவருக்கு மட்டுமின்றித் திரைப்படத் தொழிலுக்கே கௌரவம் சேரும்.

மேலட்டை வண்ணப்படம்: கே. ஆர். வி. பக்தா


உங்கள் வசதிக்காக முக்கட தொண்டருக்கு அருகிலேயே நமது சேட்ஜியின் அடகுக் கடையை திறந்து வைப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்!
குலாப் லால் ஹல்வாசந்த் அடகு வியாபாரம்
சேத்தி
ரயில் பயணங்கள் இலவசமாக
நடந்தறியாக் கால்களே, நடந்தாய் வாழி! உடன்பிறப்புகளுக்கு உற்சாகமூட்டினாய், வாழி! முதல்வரின் பாதயாத்திரையை முறியடித்தாய், வாழி! வாழி!
சத்துணவு திட்டம்.. சத்துணவு திட்டம்!
கொண்டாந்துட்டோம்! கொண்டாந்துட்டோம்!
நூறு கோடி ரூபாயில் ஏழைக் குழந்தைகளுக்கு இலவச சத்துணவு திட்டம்



இளைஞர் காங்கிரஸ் அலுவலகத்தில்:

ரௌடிகள் படையெடுப்பு!

● 20–2–82 சனிக்கிழமை இரவு எட்டே முக்கால் மணி. தேனாம்பேட்டை காங்கிரஸ் மாளிகையில் முதல் மாடியில் இருக்கும் இளைஞர் காங்கிரஸ் அலுவலகத்தில் பத்துப் பேர் திபுதிபுவென்று நுழைகிறார்கள். கையில் கொண்டு வந்திருந்த பாட்டிலிலிருந்து மண்ணெண்ணெயை ஐந்து அம்சத் திட்ட போஸ்டர் கட்டுக்கள் மீது தெளிக்கிறார்கள். எரிந்து கொண்டிருக்கும் சிகரெட்டை ஒருவர் அதில் போட போஸ்டர்கள் தீப்பிடித்து எரிகின்றன. இதைத் தடுக்க முனையும் மானேஜர் ராஜகோபாலும் அவரது நண்பர் ஒருவரும் தாக்கப்படுகிறார்கள். இரண்டு டெலிபோன்கள் ஒரு தமிழ் டைப்ரைட்டர் நாற்காலி, மேஜைகள் உடைக்கப்படுகின்றன. பத்து நிமிடத்தில் ரவுடிகள் அங்கிருந்து கிளம்பி விட்டார்கள். எதிரேயே தீயணைப்பு நிலையம் இருந்ததால் பெரிய அளவில் தீ விபத்து ஏற்படாமல் தடுக்கப்பட்டது.

''இளைஞர் காங்கிரஸ் வளர்ச்சியை விரும்பாத சிலர்தான் இந்த வேலையைச் செய்திருக்கிறார்கள். சமீபத்தில் மந்திரி காளிமுத்து உணர்ச்சிகளைத் தூண்டிவிடும்படி பல அறிக்கைகளை வெளியிட்டுள்ளார். ஐ. ஜி.க்கும் உள்துறை மந்திரிக்கும் இது பற்றித் தகவல் கொடுத்துள்ளோம். அடிதடி, தீவைத்தல் போன்றவைகள் எல்லாம் கழகங்களுக்கே உரித்தான செயல்'' என்கிறார்கள் இளைஞர் காங்கிரஸ் தலைவர்கள்.

கட்சிக்குள்உட்பூசல்காரணமாகத்தான்தாக்குதல் நடந்தது என்று மறுநாள் பத்திரிகைகளில் வந்திருந்ததே?

''சம்பவம் நடந்த முதல் நாள் வட சென்னை மாவட்டக் காங்கிரஸ் தலைவரை நீக்கும் உத்தரவை வெளியிட்டது உண்மைதான். ஆனால் நாங்கள் பொதுச் செயலாளராக இருந்த ஒருவரையே வெளியேற்றியுள்ளோம். அப்போது கூட இது மாதிரி நடக்கவில்லை. மேலும் ஐந்து அம்சத் திட்டப் போஸ்டர்கள் கொளுத்தப்பட்டு இருப்பதால் இது நிச்சயமாக காங்கிரஸ்காரர்கள் செய்த வேலையாக இருக்காது'' என்கிறார் இளைஞர் காங்கிரஸ் அலுவலக செயலாளர் கிருஷ்ணமூர்த்தி.

நீக்கப்பட்ட வட சென்னை மாவட்ட இளைஞர் காங்கிரஸ் தலைவரைச் சந்திக்க முடியவில்லை. ஆனால் அவரைச் சேர்ந்தவர்கள் ''தமிழ்நாடு இளைஞர் காங்கிரஸுக்கு மாவட்டத் தலைவரை நீக்கும் அதிகாரம் இல்லை. தாக்குதலுக்கும் கோவிந்தசாமிக்கும் எந்தத்தொடர்புமில்லை''என்று கூறினார்கள். ஆனால் இளைஞர் காங்கிரஸ் வட்டாரத்தில் விசாரித்தபோது முறைப்படி மேலிடத்தில் அனுமதி பெற்றுத்தான் அவர் நீக்கப்பட்டார் என்றார்கள்.

''தங்கபாலுவுக்கும் அவரது நண்பர் ஒருவருக்கும் ஏற்பட்ட தகராறே தாக்குதலுக்குக் காரணம்'' என்றும் பேசப்படுகிறது.

பொதுவாகவே நியமனத் தலைவர்கள் இருக்கும்வரை தொந்தரவுதான். கட்சித் தேர்தல்களை நடத்தி ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் இருந்தால் உட்கட்சிப் பூசல்களுக்கும் அனாவசிய மோதல்களுக்கும் இடம் இருக்காதே!

—நமது நிருபர்



வடக்கே வீசிய விளம்பரப் புயல்

அந்த நாளில் ஜெமினி ஸ்டுடியோவில் விளம்பர இலாகா நிர்வாகியாக இருந்தார் சாரி. அவருக்குக் கீழ் ஆறு ஓவியர்கள் பணி புரிந்தனர்!

ஹிந்தி சந்திரலேகா திரையிடப்பட்ட போதுதான் இவர் ஆற்றலுக்குப் பெரும் சோதனை!

அகில இந்தியாவில் ஒரே சமயத்தில் ஒரே தேதியில் விளம்பரங்களை வெளியிட வேண்டியிருந்தது. அதுவும் பல பாஷைகளில் பல விதங்களில்! இவருக்கு ஹிந்தி பாஷை தெரியாவிட்டாலும் அந்தப் பணியைச் சகாக்கள் உதவியுடன் வெற்றிகரமாய் முடித்தார்.

விளம்பரம் ஆரம்பித்தும் தியேட்டர்கள் நிர்ணயம் செய்யவில்லை. படம் தமிழ்நாட்டில் டப் செய்யப்பட்டது. இது எப்படி நன்றாயிருக்கும் என்று சந்தேகப்பட்டார்கள். ஆனால் தியேட்டரும் தேதியும் வெளியிடாமல் விளம்பரங்கள் இரண்டு வாரங்கள் வந்தன! பத்திரிகைகள், பானர்கள், டிராம், பஸ் எல்லா இடங்களிலும் 'ஜெமினி' பெயர் பெரிது பெரிதாகத் தெரியவே தியேட்டர்காரர்களுக்கு மலைப்பு! இவ்வளவு விளம்பரம் செய்யப்படும் படம் சோடையாய் இருக்காது என்ற தீர்மானத்தில் படத்தை ஏற்றார்கள். முதல் நாள் வசூல் முழுதும் ஜாதவ்பூர் டி. பி. மருத்துவ மனைக்கு நன்கொடை என்றார் வாசன்.

காஷ்மீரிலிருந்து கன்னியாகுமரிவரை விஜயம் செய்து எந்த எந்த ஊரில் எப்படி விளம்பரங்கள் செய்யவேண்டும் என்று நிர்ணயித்தார் சாரி.

டில்லியில் அப்போது இந்தோனேசியா பற்றிய ஆசிய மகாநாடு நடந்து கொண்டிருந்தது. சிவராவிடம் கோரிய மாத்திரத்தில் இப்படத்தை அவர்களுக்குப் பொழுதுபோக்காக ஜவாஹர்லாலிடம் சொல்லி ஏற்பாடு செய்து விட்டார். அவ்வளவு பிரதிநிதிகளும் கண்டு களித்தனர். இது பத்திரிகைச் செய்தியாக வந்து படத்துக்கு விளம்பரமானது.

இப்படிப் பல விளம்பர உத்திகள் கையாளப்பட்டன. வியாபார ரீதியில் பெரிய வெற்றி பெற்றதற்கு அதற்குச் செய்யப்பட்ட விளம்பரமும் முக்கிய காரணம் என்கிறார் சாரி.

தமிழ் 'சம்சாரம்' படம் தயாரானதும் விளம்பரத்துக்குப் புது உத்தியைக் கையாண்டார் சாரி.


''அப்பொழுது தேர்தல் வாக்காளர் பட்டியல் தயாராகிக் கொண்டிருந்தது. அந்த விலாசங்களுக்கு அப்போதிருந்த 3 பைசா தபால் கார்டுகள் மூலமாய்ச் சொல்ல வேண்டியஅம்சங்களை இருபக்கங்களிலும் சொல்லி, சுமார் இருபது லட்சம் கார்டுகளை விலாசதார்களுக்கு அந்தந்த ஊரில் தபால் மூலமாய்ச் சேர்த்தோம். படம் பார்க்க வந்தவர்கள் அந்தத் தபால் கார்டுகளைக் கையிலேயே கொண்டு வந்தார்கள்'' என்கிறார்!

பேட்டி : **சலன்**

தோழி: ''அவுட்ஹவுஸில் ஏழெட்டு கிழவர்களை வச்சு மூணு வேளையும் சோறுபோட்டுக் காப்பாத்தறியே... ஏன்?''


நடிகை: ''நன்றி உணர்ச்சி! அவங்கள்ளாம் என்னை ஹீரோயினாப்போட்டுப் படமெடுத்துப் போண்டியானவங்க!''

-உ. ராஜாஜி



ஆங்கிலத்தில்

பேசக் கற்றுக்கொள்ளுங்கள்



Big Size
384 Pages
Price 21/-
Postage
Rs. 4/-


RAPIDEX
ENGLISH SPEAKING COURSE

தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், ஹிந்தி, மராட்டி, வங்காளம், பஞ்சாபி மற்றும் குஜராத்தி மொழிகளில் தனித்தனியாகக் கிடைக்கும்.

- எளிய நடையில் பயனுற அமைந்த 'ரெபிடெக்ஸ் இங்கிலீஷ் கோர்ஸி'னைத் தாமே பயின்று ஆங்கில மொழி வட்டாரங்களில் வெற்றி நடை போடுங்கள்.
- மொழியியல் அடிப்படையில் இதன் புதுமுறை அமைப்பும், தெளிவான மொழி நடையும் படித்த மாத்திரத்திலேயே மனதிற் பதியவைக்க வல்லது.
- இதுவரை 80 லட்சம் பேர் படித்துப் பயன் பெற்றது.
- ஆசிரியர்கள், அறிஞர்கள் மற்றும் கல்வியாளர்களால் பரிந்துரைக்கப் பட்டது.
- பெயர் பெற்ற பத்திரிகைகளின் விமரிசனக் குழுவினரால் புகழாரம் சூட்டப்பட்டது.

மொழியைக் குறிப்பிட்டு ஆர்டர் அனுப்புக.

கடிதம் எழுதக் கற்றுக்கொள்ளுங்கள்



Big Size
394 Pages
Price 21/-
Postage
Rs. 4/-

கடிதங்கள் வரைவது விளையாட்டல்ல. ஆனால் உங்களுக்காக இக் கலையை விளையாட்டைப் போலச் செய்து தந்துள்ளோம். நண்பருக்குக் கடிதம் எழுதுங்கள் அல்லது நிறுவனத்துக்கு எழுதுங்கள்—எந்தச் சூழ்நிலையிலும் உங்களுக்கு உதவுவது

Rapidex
Self Letter Drafting Course

இதன் சிறப்பியல்புகள்—

- விதவிதமான வாக்கியங்கள், பல்வேறு சொற்றொடர்கள்.
- ஒரே சூழலில் விதவிதமான வாக்கியங்கள், பல்வேறு சொற்றொடர்கள்.
- விரும்பும் வாக்கியங்களை நீங்களே தேர்ந்தெடுக்கலாம்.
- வேண்டியபடி கோர்வையாக அமைத்துக்கொள்ளலாம்.
- நீங்கள் விரும்பிய கடிதம் இதோ தயார்.

மன உளைச்சலின்றி முதற்தரமான கடிதங்கள் வரைய அற்புத சாதனம்.

மூன்று பகுதிகளாக அமைந்த இப் புத்தகம் சொந்த, சமூக, வணிகக் கடிதங்கள் வரையவும், வேலைக்கான விண்ணப்பங்கள் எழுதவும் நம்பகமான வழிகாட்டி.

AVAILABLE AT leading book shops, A. H. Wheeler's and Higginbotham's Railway Book Stalls throughout India.

or ask by V.P.P. from


PUSTAK MAHAL KHARI BAOLI DELHI-6

New Show Room : 10-B, Netaji Subhash Marg, Darya Ganj, New Delhi-2

VANDANA/PM/Tam.1

சிறுவன் சீனிவாசனுக்கு ஏற்பட்ட துர்மரணம் ஒரு பெரும் துயர் என்பதோடு நமது அமைச்சர்கள், அதிகாரிகள், அரசு ஊழியர்கள் அனைவரிடமும் உள்ள பொறுப்பின்மையை உணர்த்துகிறது.

பொறுப்பின்மைக்குப் பலி!



✖ விடுமுறையின்போது உதகையில் பெற்றோருடன் சீனிவாசன்

பன்னிரண்டு வயது மாணவன்; படுசுட்டி; சென்னை பத்மா சேஷாத்திரி பள்ளியில் படித்து வந்தான்; பெயர் சீனிவாசன். சென்ற மாதம் 20ம் தேதி மெரினாவுக்கு உறவினர், நண்பர்களுடன் சென்றான். கண்ணாமூச்சி ஆடத் தொடங்கினர் சிறுவர்கள். அடர்த்தியான புதர்கள் மண்டிக் கிடந்த பகுதிக்கு ஒளிந்துகொள்ளச் சென்றான் சீனிவாசன். அங்கேதான் எமன் காத்திருந்தான்!

ஆழமான கிணறு. அதன் மேல் பகுதி மூடப்பட்டிருந்தது. ஆனால் நீர் இறைக்க ஓர் ஆள் நுழையக் கூடிய துவாரம் உண்டு. (மேன் ஹோல்.)இந்த மேன் ஹோலுக்கும் மூடி உண்டு. ஆனால் இப்போது அது மூடப் பட்டிருக்க வில்லை. கிணறு — மேன் ஹோல் அனைத்தையும் அடர்ந்த புதர்கள் மறைத்தது. இருள் கவிந்து வந்த நேரம். பையன் உள்ளே விழ அவன் கதை முடிந்து விட்டது.

மெரினா தோட்டத்தைப் பராமரிப்பவர்களின் அஜாக்கிரதையால் ஒரு சிறுவன் உயிர் பலிவாங்கப் பட்டு விட்டது. தேவையற்ற புதர்களை வெட்டியிருந்தாலும் மேன்ஹோலைச் சரியான படி மூடியிருந்தாலும் சிறுவனுக்கு இந்தக் கதி நேர்ந்திராது.

இதை விடப் பரிதாபம் ஒன்று உண்டெனில் அது சிறுவனை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லவும் பிறகு அங்கிருந்து உடலைப் பெறவும் சம்பந்தப்பட்டவர்கள் பட்ட பாடுதான்.

சம்பவத்தின்போது அருகில் இருக்க நேர்ந்து, உதவவும் முயன்ற இராம அரங்கண்ணல் தமது அனுபவங்களை மனக் கசப்புடன் விவரிக்கிறார்:

"ஒரு பையனைக் காணவில்லை என்று தேடிக்கொண்டிருந்த சிலர் அவன் விளையாடிய இடத்தையும் காண்பித்தார்கள். நான் அடர்த்தியான செடிகள் உள்ள பகுதிக்குச் சென்று தேடினேன். வெளிப் பார்வைக்குப் புதர்கள் போல் இருந்தாலும் உள்ளே ஒரு மான் ஹோல் திறந்திருப்பது தெரிந்தது. சந்தேகப்பட்டு நொச்சிக் குப்பம் மீனவர்களின் உதவி பெற்று உள்ளே பார்த்தோம். பிறகு ஐ. ஜி. அலுவலகத்தில் உள்ள தீயணைக்கும் படையினர் கொடுத்த ஏணியின்

உதவியாலும், அவர்கள் ஒத்துழைப்புடனும் உன்னே பார்த்தபோது உடல் தெரிந்தது.

எனக்கு நம்பிக்கை இல்லை என்றாலும் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்ல வேண்டும் என்று மனிதாபிமானம் உந்தியது. ஒரு வேளை பிழைக்க வாய்ப்பிருந்தால்? எனவே சீனிவாசனின் உறவினர்களிடம் பையனுக்கு முதலுதவி அளிக்க வேண்டும் என்று கூறி ராயப்பேட்டை மருத்துவமனைக்குக் கொண்டு போனேன். டாக்டர்கள் கைவிரித்து விட்டனர். உடலை உறவினர்களிடம் சேர்க்கலாம் என்றால் போலீஸ் சடலத்தைத் தர மறுத்தது. கமிஷனர் ஸ்ரீபாலுக்கு அங்கிருந்து போன் செய்து சடலத்தைத் தரக் கேட்டேன். போலீஸ் மற்றும் ஆஸ்பத்திரி சட்டத்தின்படி இரவில் சடலங்களைக் கொடுப்பதில்லை எனத் தெரிய வந்தது. எனக்குத் தலை சுற்றியது. வீட்டுக்கு வந்தேன். மந்திரி நெடுஞ்செழியனுக்கு போன்செய்து நிலைமையை விளக்கினேன்.

மறுபடியும் இரவு பதினொரு மணிக்கு நான ஆஸ்பத்திரி செல்வதற்குள் பையனின் பெரியப்பா நடராஜன் மற்றும் எல்லா உறவினர்களுக்கும் விஷயம் தெரிந்து விட்டது. போலீஸ் சடலத்தைத் தர ஒப்புக் கொண்டாலும், ஆஸ்பத்திரி ஆர் எம். ஓ., அல்லது உதவி ஆர். எம். ஓ. ஒப்புதல் வேண்டும் என்றார்கள். இவ்விருவரும் ஒருவர் மாற்றி ஒருவர் 24 மணி நேரமும் ஆஸ்பத்திரியில் இருக்க வேண்டும். இப்போது இருவருமே இல்லை. சூப்பரிண்டெண்டெண்டுக்குப் போன் செய்ய அவர் மறுநாள்தான் தர முடியும் என்றார். வீட்டுக்கு வந்து கடைசி முயற்சியாக நண்பர் ஹாண்டேக்குப் போன் செய்தேன். அவருக்கு டெலிஃபோன் தொடர்பு தர மறுத்துவிட்டார்கள். ராயப்பேட்டை மருத்துவமனையில் காத்திருக்கும் பையனின் பெரியப்பா நடராஜனுக்கு இதைச் சொல்ல போன் செய்தபோது 24 மணி நேரமும் இயங்க வேண்டிய தொலை பேசி, இயங்கவே இல்லை! மறுநாள் தான் சடலத்தைக் கொடுத்தார்கள்.

உலகிலேயே நீளமான கடற்கரை என்று போற்றப்படும் மெரினாவின் அழகைப் பாதுகாக்க ஒரு கமிட்டியே இருக்கிறது. பொதுப் பணித் துறை, மற்றும் மாநகராட்சியைச் சேர்ந்த ஒரு என்ஜினியர், அவருக்கு உதவியாக வாட்ச்மென்கள் இருக்கிறார்கள். சம்பவத்தன்று யாருமே அங்கு காணப்படவில்லை. மின் விளக்குகள்எரியவில்லை. வேர்க்கடலைக் காரர் கொடுத்த விளக்குத்தான் உதவியது.''


அரங்கண்ணல் கூறியவற்றைக் கேட்டுக் கொண்டு பிறகு கடற் கரையில் பேல் பூரி, கடலை முதலியன விற்போரிடம் பேசியபோது வாட்சுமேன்களுக்குத் தினமும் பத்துப் பைசா மாமூல் தந்துவிட்டால், தங்கள் வியாபாரம் தடையின்றி நடக்க அனுமதிப்பார்கள் என்றும், இணற்றையும், தோட்டத்தையும் யார் கவனிக்கிறார்கள் என்றும் அலுத்துக் கொண்டார்கள்.

பேட்டி: **''சித்தி''**

✖ இராம அரங்கண்ணல்

ஆழ்ந்த துயரம்; மனக்கசப்பு





பூமிக்கடியில் மின் நிலையம்

● அணைக்கட்டில் நீர் மட்டம் குறைந்தால் மின் உற்பத்தியும் பாதிக்கப்படுவது நம் நாட்டில்.

மேற்கு ஜெர்மனியில் ஒரு புதுவித நீர் மின் நிலையம். மலைப் பிரதேசத்தில் மேல் மட்டத்தில் ஒரு ஏரி. கீழ்ப் பகுதியில் ஒரு நீர்த்தேக்கம். ஏரியிலிருந்து பூமியைக் குடைந்து வந்து சுரங்கப் பாதை மூலம் நீர்த் தேக்கத்தை இணைக்கிறார்கள். கனத்த எஃகினால் ஆன சுரங்கப் பாதை வழியாக அதிவேகமாய்க் கீழ் நோக்கி இறங்கும் நீர், மின் நிலையத்தில் மின் உற்பத்தி செய்யும் டர்பைன்களை இயக்கிவிட்டு நீர்த்தேக்கத்தினைச் சென்றடைகிறது.

மியூனிக் நகரில் இரவில் மின்சாரத் தேவை குறைவாக இருக்கும் சமயங்களில் நீர்த் தேக்கத்திலிருந்து நீர், அதே சுரங்கப் பாதை வழியாக மின் பம்புகள் உதவியால் ஏரிக்கு மேல் நோக்கி அனுப்பப்படுகிறது. மீண்டும் அதே நீர் மின் உற்பத்திக்குக் கீழ் நோக்கிப் பாய்கிறது!

இந்த ஏற்பாட்டில் மின் நிலையம் பூமிக்கு அடியில் 24 மீட்டர் கீழே உள்ளது!

நன்றி: **ஸ்காலா**

8

வெள்ளிக்கிழமை மாலை கடைசி வகுப்பு முடிந்ததும் அவளுக்குப் பள்ளிக்கூடத்தில் வேலை எதுவும் இருக்கவில்லை. அதனால் சீக்கிரம் பஸ்ஸைப் பிடித்துக் கிளம்ப அவள் ஆயத்தம் செய்து கொண்டிருந்தாள். மேஜை இழுப்பறையிலிருந்த டிபன் சம்புடத்தை எடுத்துப் பைக்குள் போட்டுக் கொண்டாள். அடுத்த வாரம் ஆரம்பத்தில் வகுப்புக்களுக்குப் போதிக்கவேண்டிய பாடங்களுக்குக் குறிப்புத்தயாரிக்கப் பள்ளி நூல் நிலையத்திலிருந்து அவள் எடுத்து வந்த தடிமனான இரு புத்தகங்கள் மேஜை மேல் தயாராக இருந்தன. பவுடர் காம்பாக்டின் கண்ணாடியில் முகத்தைப் பார்த்து வியர்வையில் சிறிது கலந்துபோன பொட்டை விரலால் சரி செய்து காம்பாக்டை மூடிப் பையில் போட்டுத்தோளில் மாட்டிக் கொண்டாள். வழக்கமான பஸ்ஸைத் தவற விட்டால் அடுத்ததிற்கு அரை மணிக்கு மேல் கால் கடுக்க நிலையத்தில் நிற்க வேண்டும் என்ற அவசரத்தில் புத்தகங்களை எடுக்கக் கையை நீட்டியவள் பின்னால் காலடி ஓசை கேட்டுத் திரும்பினாள்.

''உங்க கூடப் பேசணும் டீச்சர் ஒரு அஞ்சு நிமிஷம் ஒதுக்க முடியுமா எனக்காக?''


சுருட்டை முடி நெற்றியில் புரள, கண்கள் பளபளக்கப் பள்ளிச் சீருடையில் செக்கச் செவேலென்று துடைத்து விட்ட பொம்மை போல வாயிற்படி அருகே அன்று வகுப்பில் மயங்கி விழுந்த மாணவி ராதிகா நின்று கொண்டிருந்தாள்.

பள்ளித் தலைவி அவளைக் கூப்பிட்டு அதட்டி அறிவு போதிக்கச் சொன்னதைச் சந்தியா இன்னமும் தொடங்கவில்லை. மற்றொரு ஆசிரியைக்கு இது மாதிரிச் சந்தர்ப்பத்தில் கிடைத்த மரியாதை அவளை மிகவும் அச்சுறுத்தியிருந்தது. தலைவி உத்தரவிட்டாள் என்று தன் வகுப்பு மாணவி ஒருத்தியை அவளுடைய சீருடை அழுக்காக இருப்பது பற்றிக் கண்டித்துப் பேச மறுநாளே மாணவியின் தந்தை – மேல் மட்டத்துவாசி –தமது காரில் வந்து இறங்கினார். தலைவியிடம் உத்தரவு வாங்கிக்கொண்டு நேரே . ஆசிரியைகள் ஓய்வாக இருக்கும் அறைக்குள் புயலாக வந்து விட்டார்.

''சீதாவின் கிளாஸ் டீச்சர் மிஸ் பகவதி இங்கே தானே இருக்காங்க?'' அதிகாரமாக அவர் கேட்டபோது அத்தனை பேரும் பகவதியைப் பார்க்க, அவள்



பூனைக் குட்டி போல உடலைச் சுருக்கிக் கொண்டு மெல்ல எழுந்து நின்றாள்.



''என் பெண் சீதாவின் சீருடை ரொம்ப அழுக்காக இருக்குன்னு கோவிச்சுக்கொண் டீங்களாம். குழந்தை ராத்திரி முழுதும் அழுது தூங்கவேயில்லை. என் மனைவி சில மாதங்களுக்கு முன் காலமாகிவிட்டாள். வீட்டிலே உதவிக்கு இருக்கிற என் தாயாருக்கு வயசாயிடுச்சு. அவங்களாலே எதையுமே சமாளிக்க முடியலை. அதனாலே குழந்தை அழுக்குச் சீருடையோட வந்திருக்கா. அதுக்காக எல்லாக் குழந்தைகள் முன்னாலே என் பெண்ணை நீங்க அவமானப்படுத்தி யிருக்கீங்க.'' கோபத்தில் அகங்காரமாக அதட்டினார்.

''ஸாரி ஸார்... விவரம் தெரியாது... சாதாரணமாக நான் எல்லாக் குழந்தைகளுக்கும் சொல்ற புத்திமதியை உங்க பெண்ணுக்கும் சொன்னேன்...''

''இது ஒரு பிரச்னையாக இருந்தால் அதுக்கு நீங்களே ஒரு வழி சொல்லலாமே?'' ஏளனமாகக் கேட்டுவிட்டு வாயடைத்துநின்ற அவளை உறுத்துப் பார்த்துவிட்டுப் போய் விட்டார்.

கலீர் என்ற சிரிப்பில் ஆசிரியைகளின் அறை அதிர்ந்து போனது.

''அவர் என்ன சொன்னார் தெரியுமா? நீயே என்னைக் கல்யாணம் பண்ணிக்கொண்டு என் குழந்தைக்கு இளைய தாயாக வந்து அவளது பள்ளிக்கூடப் பிரச்னைகளைக் கவனிச்சுக்கறதுதானேன்னு சொல்லாமல் சொன்னார்.... பகவதி... பெரிய புளியங் கொம்பு— விட்டுடாதே.''

கோபத்துடன் உதட்டைக் கடித்துக் கொண்டு நின்ற அவளை அவர்கள் எல்லோரும் அன்று வேடிக்கை செய்து வம்புக்கு இழுத்து விமரிசித்ததை எப்படி சந்தியா மறக்க முடியும்?

சாதாரண மனிதன்

'லக்ஷ்மி'

ராதிகாவின் தாத்தா துண்டை உதறிப்போட்டுக் கொண்டு முரட்டுக் காளை போல அவனிடம் சண்டைக்கு வந்து விட்டால்? ஊகூம் அவனால் அவமானப் பட முடியாது.

''என்னம்மா ராதிகா... இப்போ உடம்பு நல்லாத்தானே இருக்கு?'' அன்போடு விசாரித்தான்.

''உடம்பு நல்லாத்தான் இருக்கு டீச்சர். மனத்தில் தான்ரொம்பக் குழப்பம். பாட்டி தாத்தா ரெண்டு பேர் கிட்டேயும் பேசப்

பயமாயிருக்கு. நீங்க தப்பா எடுத்துக்க மாட்டீங்கன்னு....'' சொல்லிக் கொண்டே தன் கையிலிருந்த ஒரு பொட்டலத்தை மேஜை மீது வைத்தாள்.

''என்ன இது?'' வியப்புடன் அதட்டினுள் சந்தியா.

''பாட்டி சுட்ட நெய் முறுக்கு. பகல் உணவு அனுப்பின டிபன் செட்டின் அடியிலே பிளாஸ்டிக் பைக்குள்ளே பாட்டி எனக்குத் தின்றதுக்கு அனுப்பி வச்சிருந்தாங்க.... அதை உங்களுக்குன்னு பத்திரமா எடுத்து வச்சிருந்தேன்..''

''உனக்குச் சாப்பிட வச்சிருந்ததை எனக்கேன் தரணும்? இது மாதிரி குழந்தைகள் கிட்ட நாங்கள் எதுவும் எடுத்துக்கிறது தப்பாச்சே.''

''இப்பப் பள்ளிக்கூடம் முடிவடைஞ்ச நேரம். உங்களைப் பார்த்தா எனக்கு இறந்து போன என் அக்கா நினைவு வருகிறது. அவங்களைப் போல நீங்க ரொம்ப அன்பாப் பேசறீங்க...''

'பரவாயில்லை! பெண் படுசுட்டி... நல்லாவே காக்கா பிடிக்கிறாள்...' தன்னுள்ளே எண்ணிச் சந்தியா புன்னகைத்தாள்.

- நீண்ட காலமாக ஓடாதிருந்த திருவாரூர் தேர் வீதிவலம் வர, திருச்சி பி. எச். இ. எல். நிறுவனத்தில் அன்றையத் தலைவராயிருந்த வி. கிருஷ்ணமூர்த்தி உதவியுடன் சாதனை புரிந்த அறங்காவலர்.
- விவசாய நில உச்சவரம்புச் சட்டங்களை யொட்டி தொழிலதிபராய் மாறியவர்.
- விவசாயத்தைத் தொழில் துறையுடன் இணைத்து ஆரூரான் சர்க்கரை ஆலை நிறுவிய வழிகாட்டி.
- கூட்டுறவுத் துறையில் முன்னோடி.
- வள்ளல். நற்பணிக்கு உதவக் கடிதம் எழுதினால் போதும்; காசோலை வந்து விடும்! இது பலர் அனுபவம்.
- சங்கீத மும்மூர்த்திகளுக்குத் திருவாரூரில் நினைவு இல்லங்கள் அமைய உறு துணையாய் இருந்தவர்.
- நமது அஞ்சலி.



ஜி.எஸ்.மூ.

''ராதிகா! இது மாதிரி நீ எனக்குச் சாப்பிடவோ வேறு உபயோகத்துக்கோ எதுவும் கொண்டு வந்து கொடுக்கக் கூடாது. இதுவே கடைசித் தடவைன்னு ஞாபகத்திலே வெச்சுக்கோ... உனக்காக ஒரு முறுக்கு எடுத்துக்கறேன். மீதியை நீ சாப்பிடணும். சரியா?'' என்றாள்.

ராதிகா தலையை ஆட்டிவிட்டு ஒரு முறுக்கை பிளாஸ்டிக் பையில் போட்டுச் சுற்றி மேஜை மீது வைத்துவிட்டு மீதியைக் காகிதத்தில் வைத்து மடித்து எடுத்துக்-கொண்டாள். சுற்று முற்றும் பார்த்தாள். யாரும் அருகில் இருக்கவில்லை என்று தெரிந்தது.

''டீச்சர்.... நீங்கள் காதலைப் பத்தி என்ன நினைக்கிறீங்க?''

தூக்கி வாரிப் போட்டது சந்தியாவுக்கு. ''காதலா? அதைப் பத்தி நீ என்ன நினைக்கிறேன்னு முதல்லே சொல்லு...'' மெல்லிய குரலில் அதட்டினாள்.

''காலமுச்சூடும் அவரோடயே கழிக்கணும் — பேசிக்கொண்டே இருக்கணும். பிரிவே கூடாதுன்னு மனத்திலே ஏற்படும் ஒரு வேகமான உணர்வு அப்படின்னுதான் சொல்ல முடியும்.''

''சஞ்சீவி காலேஜ் வாசல்ல இருக்கிற ஆலமரத்தடியிலே உன்னை நான் பல தடவை ஒரு பையனோட பார்த்திருக்கேன். ஆமாம், அவன் யார்?''

ராதிகா முகம் சிவந்து போனாள். ''அவர் எங்க தூரத்து உறவு முறைப் பையன். ஆனால் தாத்தாவுக்கு அத்தனை பிடித்தமில்லை. அவங்க எங்களைப் போல் வசதியானவங்க இல்லேங்கிற காரணம். அதனாலே...'' ராதிகாவின் உதடுகள் உணர்ச்சி வசத்தில் துடித்தன.

''உனக்கு இன்னும் பதினைஞ்சு வயசு நிரம்பலை. அதுக்குள்ளே காதலா?''

''காதலுக்கு வயசுன்னு அவசியம் உண்டா டீச்சர்?''

''பேஷ்! நல்ல கேள்வி. இந்த வயசிலே நீ படிக்கணும். பிறகு ஏதாவது ஒரு தொழிற் கல்வி கத்துக்கணும். பிறகு இருக்கவே இருக்கு காதல்.... கண்ட கதைப் புத்தகங்களைப் படிக்கிற விளைவு இதுன்னு எனக்கு நல்லாப் புரிகிறது.... என்கிட்ட பேசினப்பல இதை வேற யார் கிட்டேயும் பேசாதே... தெரிஞ்சுதா?'' அதட்டினாள்.

''இப்போ அமெரிக்காவிலே கூட சின்ன வயசிலே கல்யாணம் செஞ்சுக்கறது நாகரிகமாயிட்டதாமே....''

''நாம அமெரிக்காவிலே வசிக்கலை. அதனால அவங்க செய்யறதை யெல்லாம் நாம செய்யணும்னு அவசியம் இல்லே. ராதிகா நான் உன் அக்கா போல இருக்கிறது உண்மைன்னு உன் அக்கா சொல்றதைக் கேட்பியா?''

''கட்டாயம் கேட்பேன் டீச்சர். என்ன செய்யணும் சொல்லுங்க....''

''இந்த பிளஸ்-டூ வகுப்பு வரையிலாவது உன் காதலை நீ ஒத்திப் போட்டுட்டு நல்ல குழந்தையா படிப்பியாம்மா... அந்தப் பையனுக்கும் உன்மேலே உண்மையான அன்பு

இருந்தா — பொறுமையாக் காத்திருந்து உன்னைக் கல்யாணம் பண்ணிப்பான். இனமும் நீ அந்தக் காலேஜ் வாசலில் நின்னு அவனோட பேசறது பார்க்கறவங்களுக்குத் தப்பாப் படும். புரியுதா?''

கண்களில் புரண்ட நீரை விரலால் சுண்டி விட்டுக் கொண்டாள் ராதிகா.

''எங்கக்கா போல் நீங்க அன்பாக் கேட்டுக்கறீங்க. அக்கா ஞாபகத்துக்காக நான் உங்க பேச்சுக்குக் கட்டுப்படறேன்.''

''உண்மையா கட்டுப்படுவியா?''

''சத்தியமாக் கட்டுப்படுவேன் டீச்சர்.'' சட்டென்று அவளது கையைப் பற்றித் தன் கையால் ஓங்கிஅடித்தாள்.''அந்த முறுக்கைத் தூக்கி எறிஞ்சுடாதீங்க. எனக்காகச் சாப்பிடுங்க... டீச்சர்... ரொம்ப நன்றி'' — கூறி விட்டு ஒரு கணம் கலங்கிய கண்களுடன் அவளைப் பார்த்து விட்டு ஒரே ஓட்டமாகப் பாவாடை குடையாக விரிந்து பறக்க அவள் வாயிலை நோக்கி ஓடிவிட்டாள்.

மனம் நெகிழ்ந்து போனாள் சந்தியா. தலைவி அவளுக்கு இட்டிருந்த கட்டளை இப்படிச் சுலபமாக — அன்பாக — நல்லபடியாக முடியுமென்று அவள் சிறிதும் எதிர் பார்க்கவில்லை.

அன்று வழக்கமாக அவள் பிடிக்கும் பஸ் போய்விட்டிருந்தது. அதைப் பற்றிக் கவலைப் படவில்லை. ஒரு பெரிய பிரச்னைக்குத் தீர்வு கண்டு விட்டோமென்றதொரு மன நிறைவுடன் அவள் நிலையத்துக்கு வந்தாள்.

பஸ் நிலையத்தின் எதிர்ச் சாரியில் ஒரு பெரிய மருந்துக் கடைக்குப் பக்கத்தில் வெள்ளை வண்ணம் பூசிய கட்டிடத்தில்தான் ஸ்ரீதரனின் பாலி கிளினிக் இயங்கிக் கொண்டிருந்தது. அவள் அந்தப் பக்கமே பார்த்து நின்று கொண்டிருந்தாள்.

அது சமயம் கொஞ்சம் வயதான ஒரு தம்பதியர் பஸ்ஸைப் பிடிக்க— நிலையத்துக்கு வந்து அவள் அருகே நின்றனர்.

''பீஸ் ரொம்பக் கொடுத்தீங்களா? இப்பல்லாம் எல்லா டாக்டர்களும் பீசை உசத்திட்டாங்க....''


''இல்லை. நியாயமானதைத்தான் வாங்கிகிட்டாரு. வாலிப வயசென்றாலும் வார்த்தைகளில் ரொம்ப மரியாதை. எனக்கு அவரை ரொம்பப் பிடிச்சுப் போச்சு.''

''கைராசி கூட நிறைய இருக்குன்னுதான் நினைக்கிறேன். போன வாட்டி எழுதிக் கொடுத்த மருந்து நாலு நாள் கூடச் சாப்பிடலை. வயிற்று வலி போக்குன்னு நின்னு போச்சு. பட்டணத்து டாக்டர் ஒருத்தரு எழுதித் தந்தாப்பலே மளிகைக் கடை சாமான் ஜாபிதா போல் இந்தப் பையன் பெரிசா ஒண்ணும் எழுதித் தரலை. இரண்டு நிறுக மாத்திரைகள் போதும். மறுபடி வயிற்று வலின்னு வாங்க... பத்தியமா இருங்கோன்னு பச்சைப் புள்ளைக்குச் சொல்றாப் பல சொல்லி அனுப்பினார். அவர்கிட்டே பேசிக்கிட்டிருந்ததிலே பாதிநோய் போயிட்ட மாதிரி தெம்பா இருக்கு. ஆமா அவர் பேர் என்ன சொன்னீங்க?''

'' 'ஸ்ரீதரன்!''

இரு கோடுகள் ஒரு படம்

இதே முதல் கட்டத்தில் இரு கோடுகள் உள்ளன. இரண்டாவது கட்டத்தில் நமது ஓவியர் அந்த இரு கோடுகளைப்பயன்படுத்தி ஒரு படம் வரைந்து காட்டியிருக்கிறார். இதேபோல உங்கள் கற்பனையைப் பயன்படுத்தி மூன்றாவது கட்டத்தில் இதே இரு கோடுகளை வைத்து ஒரு படம் வரையுங்கள் பார்க்கலாம்! பிரசுரமானால் பரிசு ரூ. 10 உறையின் மேல் 'இரு கோடுகள்' என்று குறிப்பிடவும். முடிவு தேதி 20-3-82.



என் பெயர்: ____________________

விலாசம்: ____________________

□□

மெலி லேசாகச் சிரித்துவிட்டு ''அவருக்கு இன்னும் கல்யாணம் ஆகலையாமே! அவரைக் கட்டிக்கப் போறவ கொடுத்து வச்சவளா இருக்கணும். பொண் சாதியையும் நல்லாவே கவனிச்சுப்பார்...'' என்றாள்.

காது மடல்களில் விளம்பிய சூடு கன்னங்களில் பரவிக் கழுத்தில் இறங்கி உடல் முழுவதையும் தகிப்பதை சந்தியா உணர்ந்தாள்.

மார்பு தடதடவென்று வேகமாகத்துடிக்க, மூச்சு முட்டிய ஒரு இறுக்கத்திலே ஒரு கணம் தவித்துப் போனாள்.

'காதலைப் பற்றி நீங்க என்ன நினைக்கிறீங்க டீச்சர்?' — ராதிகாவின் குழந்தைக் குரல்... காதுகளில் பலதடவை ஒலிப்பது போன்ற பிரமிப்பில் அவள் மெய் மறந்து போனாள்.

அது சமயம் விரைவாக எதிர்த் திசையிலிருந்து வந்த ஒரு பச்சை வண்ண பியட் அந்த பாலி கிளினிக்கின் வாயிலில் வந்து நின்றது. அதை ஓட்டி வந்தவர் தமது தோளில் தொங்கிய சரிகை அங்கவஸ்திரத்தைச் சரிசெய்து கொண்டு திரும்பியபோது சந்தியா பார்த்துத் திடுக்கிட்டுப் போனாள்.

(தொடரும்)

ஃ

உடல் நோய் போக்கி

உயர் செல்வம் தந்திடும்

ஆழ்நிலை தியானம்

(தபால் வழி போதனு முறைப் பயிற்சி)

ஏற்ற கடமையை செய்து முடிக்கின்ற இதயவலு, எண்ண எழுச்சி இணக்கமான ஆரோக்கியம் இவற்றைத் தருகின்ற ஒரே கலை இதுதான். தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற தேனினுமினிய இக்கலை எத்தகைய இடையூறுகளையும் களைய வல்லது. படிப்பில் முதன்மை பெற, வேலை வாய்ப்படைய, விவாக நலனடைய, நோய் களைய, நொந்த திரேகம் தேற, செல்வ சுகமடைய, சீரான வாழ்வு பெற அத்தனைக்கும் இக்கலை துணை நிற்கும். கற்ற குறுகிய காலத்திலேயே — கற்றவர்கள் நலம் பெற்று வளம் கண்டதாக எழுதுகின்றார்கள். இது காறும் இக்கலையை தபால் வழியில் கற்பிக்க எவரும் வந்ததில்லை — பாடங்கள் தந்ததில்லை. கற்கண்டு வாய்ப்பு இது — கற்றிடுவீர் — கனி வாழ்வு பெற்றிடுவீர். சேரும் முறை செலுத்தும் கட்டணம் அறிய சுய விலாசமிட்ட 50 ந.பை. தபால்தலை ஒட்டிய கவர் இணைத்து **20-3-82** தேதிக்குள் மனுச் செய்து கொள்க. 'என்' பிரிவில் மாணவர்கள் சேர்க்கப்படுகின்றனர்.

குறிப்பு: அயல் நாட்டவர்கள் பதிலுக்காக இண்டர்நேஷனல் கூப்பன் வாங்கி வைத்து அனுப்புக. வெளி நாட்டோரும் பயிலலாம். சித்திரை மாத முதலாக பாடத்துடன் மாணவர்களின் 41 கேள்விகளுக்குப் பதிலும், மாதமொரு பூஜை விபர தொகுப்பும் (சித்திரையில் செல்வத்திற்குரிய 'லக்ஷ்மி பூஜை' முறைகள், சுலோகங்கள், அபிஷேக, ஆராதனை அடங்கிய தொகுப்பு) தரப்பட விருக்கின்றது. கற்று வரும் மாணவர்கள் கவனத்திற்கு — இம்மாதப் பாடங்கள் தயாராக இருக்கின்றபடியால் கட்டணம் அனுப்பி பெற்றுக் கொள்க.

பிரபல ஜோதிடர். ஜோதிட ஆசிரியர்

ஸ்ரீமத் ஜெயவீரதேவா

யோகி, ராஜயோகப் பயிற்சியாளர்

பிளாட் நெ. 204, கதவு எண் 5

அண்ணா நகர், மதுரை - 625 020

சந்திப்பு: திருமதி. ஜெயந்தி



அதிகார மமதை இல்லாத அதிகாரி; அழகான தோற்றமுடையவர் நீலகிரி மாவட்டத்தின் கலெக்டர் திருமதி பி. ஜெயந்தி. மலைகளின் ராணியான நீலகிரியின் முதல் பெண் கலெக்டர். இளம் வயதில் சென்னை, பம்பாய், டெல்லி மற்றும் வெளி நாடுகளில் வாழ்ந்தவர். ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன், இந்தி, தமிழ் ஆகிய மொழிகளில் தேர்ச்சி பெற்றவர்.

''நீலகிரியை விரும்புகிறீர்களா?''

கண்களை அகல விரித்தபடி, ''ஐ லவ் நீல்கிரீஸ்'' என்கிறார் ஜெயந்தி.

கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் பதவி ஏற்றபோது, சீதோஷ்ண நிலையைக் கண்டு சற்றுப் பயந்தாராம். பிறகு சமாளித்துக் கொண்டாராம்.

''மக்கள் மிகவும் நல்லவர்கள், பொய், பித்தலாட்டம் தெரியாதவர்கள்'' என்று மேலும் சொல்கிறார்.

பதவி ஏற்ற சில மாதங்களுக்குள் ஜெயந்தி சாதித்தவை:

இரண்டு வருட காலமாகத் தூர் எடுக்காமல் செடியும், கொடியுமாக இருந்த ஊட்டி ஏரியை இரண்டே மாதங்களில் சுத்தப்படுத்தியது. மலைப் பள்ளத்தாக்கிலுள்ள தாம்பட்டி என்ற ஊருக்கு ஒன்றரை லட்சம் செலவில் தார் ரோடும், இரண்டரை லட்சம் செலவில் தண்ணீர் வசதியும் செய்து கொடுத்தது போன்றவை.


ஊட்டி ஏரியைச் சுற்றி ரயில் விடுவது, மேலும், எண்பத்தைந்து லட்சம் செலவில் ரோடுகள் போடுவது போன்ற திட்டங்கள் உள்ளனவாம்.

இவருக்கு நேரம் கிடைத்தால் விரும்பிக் கேட்பது மேற்கத்திய சங்கீதம். இதுவரை எந்தக் கலெக்டருமே செல்லாத ஊர்களுக்கு ஜெயந்தி சென்று வந்திருக்கிறார். மாதத்தில் இரண்டாவது வெள்ளிக் கிழமை பெண்களிடம் மட்டும் மனுக்களைப் பெற்றுக் கொள்கிறார். ஏராளமான விதவைகளுக்குத் தையல் மிஷின், ஊனமுற்ற குழந்தைகளுக்குப் பல வித வசதிகள் என்று செய்து கொடுத்திருக்கும் திருமதி ஜெயந்திக்குப் பிடிக்காதது பாராட்டு.

''நான் என் கடமையைத்தான் செய்கிறேன். அதற்கேன் பாராட்டு?'' என்று கேட்கும் முப்பத்தைந்து வயதான ஜெயந்தி ஊட்டியின் 94வது கலெக்டர்.

-ப்ரியன்

படம்: ஜெய்மோகன்



ராஜாவின் இருமண நாளன்றுதான் இந்த வேடிக்கையான கதை ஆரம்பித்தது.

—நிறையப் பிள்ளை குட்டிகள் பெற்று நீண்ட நாள் வாழுங்கள் என்று ராஜா தம்பதியை வாழ்த்துகிறோம்! ஆனால் நம் பிரம்மச்சாரிகள் கோட்டை இப்படிக் கொஞ்சம் கொஞ்சமாகச் சரிகிறதை நினைத்தால் வருத்தமாயிருக்கிறது. நம் ஐந்து பேரில் பாக்கி இருப்பது இதோ மூர்த்தி மட்டுமே! என்று ஒரு குட்டிப் பிரசங்கம் செய்தான் ரமணி.

அனைவரும் என்னை நோக்கினர்.

-என்ன மூர்த்தி? எப்போது உனக்குக் கால் கட்டு?

—எனக்கு வேண்டவே வேண்டாம்டா சாமி.

—ஏன், குடும்ப வாழ்க்கை அத்தனை அசௌகரியமானதா? என்றாள் மிஸஸ் ரமணி. ஒரே சிரிப்பு.

—சரியான மனைவியைத் தேடிக் கொண்டிருக்கிறான் அவன்: குமார்.

—இந்த நடு இரவிலா? மறுபடியும் கொல்லென்ற சிரிப்பு.

—ஏன்? தேடிக் கண்டு பிடித்தால் என்ன? எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. டெலிபோனிலேயே ஒரு பெண்ணைக் கண்டுபிடித்தால் என்ன மூர்த்திக்கு?

—செய்யுங்கள். நல்ல ஐடியா! என்றேன். எல்லோரும் டெலிபோனை நெருங்கினோம்.

—ஆளுக்கு ஒரு நெம்பர் சொல்லுவோம் மிஸ்டர் மூர்த்தி ஒவ்வொரு எண்ணாகச் சுற்றட்டும். போனில் அகப்படுகிறது பெண்ணாயிருந்தால் பிடித்துக் கொள்ளட்டும்!

மிஸஸ் ரமணிக்கு யோசனைகள் இலாகா என்று பெயர் வைக்கலாம். ரமணிக்கோ மனைவி தெரிவிக்கிற யோசனை என்றும் வேத வாக்குத்தான். இரண்டு என்றாள் மிஸஸ் ரமணி. எண்ணைச் சுற்றினேன். ஒன்பது என்றான் ராஜா. ஸீரோ என்றான் குமார். நாலு என்றாள் செந்திலின் மனைவி உமா. ஐந்து என்று முடித்தான் செந்தில்.

மணி அடித்துக் கொண்டே இருந்தது. யாரும் எடுக்கிற வழியாயில்லை. சலித்துப் போய் நான் ரிஸீவரை வைத்துவிட, எல்லோரும் சரியான பயந்தாங்கொள்ளி என்று கூச்சலிட்டனர்.

நடுநிசியில் எல்லோரும் கல்யாண வீட்டிலிருந்து கலைந்து, அவரவர் வீட்டுக்குப் போய்விட்டோம். எனக்கு என்னவோ உறக்கம் வரவில்லை. இரவு இரண்டு மணி. அருகிலிருந்த டெலிபோன் கூண்டுக்குப் போய் ஒவ்வொருவராகச் சொன்ன எண்ணை ஞாபகமாய்ச் சுற்றினேன்.

என்ன ஆச்சரியம்! ஒரு பெண் குரல் பதில் சொல்லியது. களைத்துப்போன குரல். இரவு அல்லவா?

—ஹலோ, சௌக்கியமா?

—சௌக்கியம்தான். யாரு?

—நான்தான். உங்கள் நட்புக்குக் காத்திருக்கிறேன்!

முகத்தில் அறைகிற மாதிரி பதில் வந்தாலும் பரவாயில்லை. ஆனால்—

நள்ளிரவில் ஒரு போன்கால்

—வேடிக்கையாக இருக்கிறது! நல்ல நேரம் பார்த்தீர்கள் நட்புக்கு! என்றது குரல் சாவதானமாக.

—சற்று முன்புதான் என் கடைசி பிரம்மச்சாரி நண்பனின் கல்யாணத்தில் கலந்து கொண்டு விட்டு வந்தேன். என்ன சொல்வது போங்கள். சவ ஊர்வலத்துக்குப் போன மாதிரி இருக்கிறது!

—நீங்கள் அப்படிச் சொல்லக் கூடாது. உங்களுக்கு இன்னும் கல்யாணம் ஆக வில்லையா?

—இல்லை. உங்களுக்கு?

சிரிப்பு. —நட்புக் கிடைத்த சில நிமிஷங்களிலேயே நீங்கள் எப்படி இந்தக் கேள்வியைக் கேட்கலாம்? இப்போது போய்ப் படுத்துத் தூங்குங்கள். நீங்கள் 'நல்ல மூடி'ல் இருக்கிறபோது மறுபடி போன் செய்யுங்கள். நம்பர் நினைவிருக்கிறதா?

—நீங்கள் சொல்வதும் சரிதான். குட்நைட்!

அன்று அந்த நம்பருக்கு டயல் செய்து ஹலோ என்றேன்.

—ஹலோ, யார் அது?

—என்னை மறந்து விட்டீர்களா? சிலநாள் முன்பு கூப்பிட்டேனே பாதி ராத்திரியிலே?

—அட, உங்கள் குரல் அன்று வேறு மாதிரியாய் இருந்தது. பிரம்மச்சாரி நண்பர்களை இழந்த சோகம் போலிருக்கிறது. இன்றைக்கு எப்படி 'மூட்'?

—பிரமாதமா யிருக்கிறது.

—நீங்கள் கூப்பிடுவதைக் கேட்கச் சந்தோஷமாக இருக்கிறது. என் ரேடியோ ரிப்பேர் ஆன கவலையைக் கூட மறக்க அடித்து விட்டது.

—இரவு இத்தனை நேரமாகியும் படுக்கப் போக மாட்டீர்களா?

—ஊஹூம் ரேடியோ கேட்டுக்கொண்டிருப்பேன்.

-என் கதையைக் கேளுங்கள்! என்று ஆரம்பித்து. குமார் அடிக்கிற லூட்டி. ஆபீசில் அகவுண்ட்ஸ் பகுதிக்காரர் அடிக்கிற போர் எல்லாம் சொல்லித் தீர்த்தேன். ஏதோ வெகு நாளையத் தோழியிடம் சொல்வது போல். அவளுக்கு ரமா என்று பேராம். தனியே இருக்கிறாளாம்.

—உங்களுக்கு எத்தனை வயதாகிறது?

—நான் வயசான கிழவி. பேரன் பேத்தி எல்லாம் இருக்கிறார்கள். உங்கள் பெயர் என்ன சொன்னீர்கள்?

இளமை குரலில் துல்லியமாகத் தெரிகிறது. ரமா என் காலை வாருகிறாள் என்று நன்றாகத் தெரிந்தது. ஒருவேளை ரமா என்கிறதுகூட அவள் உண்மைப் பெயராக இருக்காது. நானும் என் பெயரைச் சொல்வானேன்?

—என் பெயர் ரவி. சரி, நாம் எப்போது சந்திப்பது?

—பார்க்காமலே இத்தனை சந்தோஷமாகப் பேசிக் கொண்டிருக்கிறோமே! பார்க்காமல் இருக்கிறவரை எத்தனை மகிழ்ச்சி அளிக்கிறது. இந்தப் புதுமையான டெலிபோன் சம்பாஷணை! பார்த்துவிட்டால் ஏமாற்றமாயிருக்குமோ என்னவோ? என்ன, பதிலே இல்லை?

—ஒன்றுமே பிடிக்கவில்லை. வேலையை விட்டுவிடலாம் போல் இருக்கிறது.

அவளிடமிருந்து பதிலே இல்லை. தூங்கிப் போயிருப்பாளோ?

புது வருஷம் பிறந்தது. புத்தாண்டு வாழ்த்துத் தெரிவிக்க அந்த நடு நிசியில் போன் செய்தேன், செந்தில் வீட்டில் பார்ட்டி முடிந்த கையோடு.

—புத்தாண்டு வாழ்த்துக்கள்!

-வாழ்த்துக்கள். என்ன சமாசாரம்?

—ஒரு முக்கியமான விஷயம். நான் உங்களை மனசார நேசிக்கிறேன். ஐ மீன், காதலிக்கிறேன்.!

—புது வருஷமும் அதுவுமாய் எத்தனை மகிழ்ச்சியான செய்தி சொல்கிறீர்கள்!

—எப்போது உங்களைப் பார்க்கலாம்? சொல்லுங்கள், ஓடோடி வருகிறேன்!

—இந்த மாதிரி யெல்லாம் எல்லாரையும் போல் பேசினால் இந்த டெலிபோன் சம்பாஷணையையே நிறுத்த வேண்டியதுதான். ஆனால் உங்களிடம் எனக்கு ஒரு பிடிப்பு ஏற்பட்டு விட்டது!

இரண்டு நாட்களுக்குப்பிறகு என் பழைய வேலையை விட்டு விட்டு ஒரு பத்திரிகை ஆபீசில் சேர்ந்தேன். ஒரு முக்கிய கட்டுரையை நான் எழுதிக் கொடுக்க, ஆசிரியர் அதைப் பார்த்துவிட்டு, இரவே டைப்பிஸ்ட்டுகள் யாரிடமாவது கொடுத்து டைப்

சாருகேசி



செய்து, மறு நாள் காலை தயாராக இருக்க வேண்டும் என்று கட்டளையிட்டுவிட்டுப்போய் விட்டார். டைப்பிஸ்டுகள் பகுதியை ஒட்டித் தொங்க விட்டிருந்த டைப்பிஸ்ட்டுகளின் பெயர்களையும் அவர்கள் வீட்டு டெலிபோன் நம்பர்களையும் வரிசையாகப் பார்த்துக் கொண்டே வந்தேன்.

தூக்கி வாரிப் போட்டது. பெரிய கூட்டத்தில் ஒரு தெரிந்த முகம் தென்பட்ட மாதிரி இருந்தது. அவள் டெலிபோன் எண்! எண்ணுக்கு நேரே — ராதிகா!

—யார் ராதிகா? உதவி ஆசிரியர் ஒருவரைக் கேட்டேன்.

—எடிட்டோரியல் டைப்பிஸ்ட். அதோ போகிறாளே அவள்தான்!

ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தேன். கருங் கூந்தல் சாட்டையாகச் சுழல, அசைந்து அசைந்து ஒயிலாய்ப் போய்க் கொண்டிருந்தாள் ராதிகா!

என்ன வேடிக்கை! இரண்டு பேரும் ஒரே அலுவலகத்தில் வேலை பார்க்கிறோம்!

அன்று இரவும் அவளுக்கு டெலிபோன் செய்தேன். வழக்கம் போல, எடுக்கவில்லை.

இரண்டு மணி நேரம் பொறுத்து மறுபடியும் டயல் செய்தேன். ஹலோ என்றாள்.

—இரண்டு மணி முன்னால் பண்ணினேன். ஏன் போனை எடுக்கவில்லை?

—ஒரு தோழியின் வீட்டில் ஆபீஸ் வேலை செய்து கொண்டிருந்தேன்.

—அப்படி என்ன வேலை?

—ஆசிரியர் குழுவில் ஒருவர் புதிதாகச் சேர்ந்திருக்கிறார். எதாவது வேலை கொடுத்துக் கொண்டேயிருக்கிறார் கடைசி நிமிஷத்தில்.

தூக்கி வாரிப் போட்டது. என்னைத்தான் சொல்கிறாள்!



கிரிக்கெட் டெஸ்ட் போட்டி சிறப்புப் பரிசு!

ஐந்து போட்டிகளுள் ஒன்றில் மட்டுமே மற்றவர்கள் பரிசு பெற பெங்களூர் திரு கே. எஸ். ராஜு மட்டுமே இரண்டு போட்டிகளில் பரிசு பெற்றுள்ளார்.

எனவே இவருக்குச் சிறப்புப் பரிசாக ரூ. 25 அனுப்பப்படுகிறது.

-ஆசிரியர்

—ஆள் எப்படி?

கொஞ்சம் வாயைக் கிண்டி. வேடிக்கை பார்க்கிற கேள்வி கேட்டேன்.

—பரவாயில்லை. நல்ல மாதிரிதான். ஆனால் பார்வைக்குக் கொஞ்சம் சிடுமூஞ்சி மாதிரி தெரிகிறார். சிலசமயம் மிரட்டுகிற மாதிரி அதட்டல் குரலில் பேசுகிறார்.

மறு நாள் ராதிகாவைக் கூட்டத்தில் பார்த்தேன். அழகி. சாதாரணமாக எல்லாப் பெண்களையும் போலத்தான் முதல் பார்வைக்குத் தெரிந்தாலும் சற்று வித்தியாசமான அழகி. சந்தேகமில்லை.

அன்று இரவு மறுபடியும் அவளைக் கூப்பிட்டேன் டெலிபோனில்.

—அந்தப் புதிய ஆள் எப்படி? முதல் தடவை பார்ப்பதை வைத்துக் கொண்டு எடை போடக் கூடாது இல்லையா?

—நான் சொன்னது தப்புத்தான். ஆள் முரடர் இல்லை.

—இரண்டாவது அபிப்பிராயமும் தவறாகப் போக வாய்ப்புண்டு. கவனமாகப் பழகுங்கள்!

பகலில், ஆபீசில் அவளுடன் வேடிக்கையாகப் பேசக் கொடுக்கலானேன்.

ஆபீசில் அவளுக்கு நான் மூர்த்திதான். ஆபீஸ் மூர்த்தியும், இரவு நேர டெலிபோன் ரவியும் அவளுக்கு வெவ்வேறு நபர்கள்தான்.

மூர்த்தி — நான்தான் — அவளை ஆபீசிலிருந்து நேரமாகிவிட்ட மாலை வேளைகளில் வீட்டுக்குக் கூட்டிக் கொண்டு போய் விட்டு விட்டு வந்தால், அன்று இரவு ரவியாக நான் பேசுகிறபோது அந்தச் செய்தி அன்று பேச்சில் நிச்சயம் அடிபடும்!

மாலை சில நாட்கள் அதிக வேலையிருந்தால் இருந்து முடித்துவிட்டு அவள் வீட்டுக்குப் புறப்படும்போது என்ன செய்வது என்று எனக்குத் தெரியும். தனியாக வீதியில் நாங்கள் இருவரும் நடக்கிறபோது, 'மூர்த்தி கேள், கேட்டுவிடு!' என்று என் உள் மனசு தூண்டும்.

—நீ தனியாக இருக்கும்போது என்ன செய்வாய் ராதிகா?

—ஏன்? ரேடியோ கேட்பேன். புத்தகம் படிப்பேன்.

—தெரு இருட்டாக இருக்கிறது. வீட்டு வாசல் வரை வருகிறேன்!

—தேங்க்ஸ் மிஸ்டர் மூர்த்தி. குட் நைட்!

ஏன் இந்தப் பரபரப்பு? நேரமாகிற ராத்திரிகளில் அவளுக்கு என்ன இத்தனை அவசரம், கைக் கடிகாரத்தையே பார்த்துக் கொண்டு? ஆங்... டெலிபோன் காலை எதிர் பார்த்துக்கொண்டு ஓடுகிறாள்!

ஒரு நாள் பதிப்பாளர் ஏதோ உளறிக் கொட்ட, நான் அவரைக் கிழிகிழி என்று கிழித்து விட்டு ஆசிரியரிடம் சொல்லிக் கொண்டு விருட்டென்று வெளியேறினேன்.

இரவு.

—ரவி! இன்றைக்கு ஆபீஸில் மிஸ்டர் மூர்த்தி பதிப்பாளரை ஒரு வாங்கு வாங்கி விட்டார் போங்கள்!

—ஆகா! தெரியாதா இது மாதிரி ஆட்களை! வெளியே எல்லோருக்கும் எதிரே பிரமாதமாகக் கத்திவிட்டு ஹீரோ பட்டம் வாங்கிக் கொண்டு, தனியே பதிப்பாளரை அவர்

உங்கள் புதிய ஜான்ஸன் மிக்சர் கிரைண்டர் வேலை செய்யும் பொழுதே சூடான இலவச டிகாக்ஷன் காபி!

JOHNSON®

மிக்ஸர் கிரைண்டர்

இதோ! இப்பொழுது

ரூ. 85 மதிப்புள்ள இலவச பரிசுகள்



முன்னதாகவே
வாங்கிடுவீர் இந்தச் சலுகை
ஸ்டாக் இருக்கும் வரை மட்டும்.

Kashyap

இன்ஸ்டன்ட் காபி
பர்கொலேட்டர்



Parade/BE/6211

JOHNSON® தென் இந்திய சமையலுக்கும் ஏற்ப மிக உறுதியானது

அறையில் போய்ப் பார்த்து மன்னிப்புக் கேட்டிருப்பார் உங்கள் மூர்த்தி!

—ஓ, நோ. மூர்த்தி அப்படிப்பட்டவர் இல்லை. உங்களுக்கு என்ன மிஸ்டர் மூர்த்தி மேல் அப்படி வெறுப்பு?

—ஏன் என்றால் நீங்கள் அவரை நேசிக்கிறீர்கள். ஏன் என்றால் நான் உங்களைக் காதலிக்கிறேன்.!

—பிரமாதம்! ஒருவரை யொருவர் நேசித்தால் உலகம் எவ்வளவு சுவாரஸ்யமாய் இருக்கு!

சில நாட்களுக்குப் பிறகு மறுபடியும் அவளைப் போனில் கூப்பிட்டு, உங்களைக் கனவில் அடிக்கடி பார்க்கிறேன்; உங்கள் குரலைக் கேட்கிறேன் என்றேன்.

—என்னையா? என்னை நேரில் நீங்கள் பார்த்தது கூட இல்லை. நான்தான் என்று எப்படித் தெரியும்?

—அழகி. நீண்ட கூந்தலை உடையவள். பெரிய கருவிழிகள் உங்களுக்கு.

மறு முனையில் மலர்ச்சியான சிரிப்புக் கேட்டது.

—அப்புறம்... இதைக் கேளுங்கள். உங்களுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வராதே?

—சொல்லுங்கள் சீக்கிரம். என்னால் சஸ்பென்ஸைத் தாங்கிக்க முடியாது.

—மிஸ்டர் மூர்த்தி என்னைக் கல்யாணம் செய்துகொள்கிறாயா என்று கேட்டார்.... என்ன? பேச்சு மூச்சுக் காணோம்? மயக்கமடித்து விழுந்துவிட்டீர்களா என்ன?

—இல்லை. நீங்கள் என்ன பதில் சொன்னீர்கள் அவருக்கு?

—ஒன்றும் சொல்லவில்லை. உங்களைக் கேட்டுவிட்டுச் சொல்லலாம் என்றிருக்கிறேன். நீங்கள் என் ஆருயிர் நண்பரல்லவா?

என்ன மனசு இந்தப் பெண்கள் மனசு! யாரையாவது காதலிக்க ஆரம்பித்தால் உடனே நாம் ஆருயிர் நண்பராக மாறி யோசனைகளைமட்டும் வாரி வழங்க வேண்டும்.

—கல்யாணம் மட்டும் செய்து கொள்ளாதீர்கள். அப்படியே பண்ணிக்கொள்வதானாலும் என்னைப் பண்ணிகொள்ளுங்கள்! டெலிபோனிலேயே ஒரு ரெஜிஸ்டர் கல்யாணம் செய்துகொள்ள முடிந்தால் எத்தனை சௌகரியமாக இருக்கும்!

கொஞ்ச நேரத்துக்கு அவள் சிரிப்புக் கேட்டது டெலிபோனில்.

-சிரிக்காதீர்கள் ரமா! நீங்கள் அவரைக் கல்யாணம் செய்து கொண்டால் இந்த மாதிரி இரவு இரண்டு மணிக்கு என்னால் உங்களை எழுப்பி டெலிபோனில் பேசிக் கொண்டிருக்க முடியுமா?

—ஏதேனும் சால்ஜாப்புச் சொல்லிக் கொள்ளலாம். டெலிபோனில் பிற ஆடவருடன் இரவில் பேசினால் ஒன்றும் பத்தினித்தனம் போய்விடாது! அதற்குள் உங்களுக்கே வீட்டில் ஒரு போன் வந்துவிடக் கூடும். வெளியே டெலிபோன் கூண்டுக்குப் போக வேண்டியிருக்காது!

அன்று ஆபீசில் வேலை முடிந்ததும் ராதிகாவுடன் அவள் வீட்டுக்குப் போனேன்.

The following particulars regarding the ownership of 'KALKI' the Tamil weekly newspaper, are published, as called for by Rule 8 of the Registration of Newspapers (Central) Rules 1956.

FORM IV

1. *Place of Publication*: Madras
2. *Periodicity of publication*: Weekly
3. *Name of Printer*: V. Murali
   Nationality: Indian
   Address: AA-117, Shanthi Colony
   Anna Nagar
   Madras-600 040
4. *Name of Publisher*: V. Vaidyanathan
   Nationality: Indian
   Address: 6-A, Warren Road,
   Madras-600 004
5. *Name of Editor*: K. Rajendran
   Nationality: Indian
   Address: 1, Purushothama Mudaliar Rd.
   Lake Area
   Nungambakkam
   Madras-600 034
6. *Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one per cent of the total capital*:
   Bharathan Publications Private Limited
   84/1-C, Race Course Road, Guindy,
   Madras-600 032

V. Vaidyanathan
Publisher

1-3-1982

—ரேடியோ கேட்டுக் கொண்டிருங்கள். காப்பி கலந்து கொண்டு வருகிறேன்.!

அவளை மெல்ல அணைத்து இதழ்களில் முத்தமிட்டேன். அவளை இறுக அணைக்க அணைக்க அவள் பெண்மை கிளர்ந்துஎழுவதை என்னால் உணர முடிந்தது.

அவள் ஏதோ ஒலியைக் கேட்டு என்னிடமிருந்து திமிறிக் கொண்டு உள்ளே ஓட முயன்றாள் — டெலிபோனை நோக்கி.

அது இரவு. நான் வழக்கமாக ரவியாக மாறி அவளுக்குப் போன் செய்யும் நேரம்.

இனி, 'ரவி' போன் செய்ய மாட்டான் என்று எனக்கு நிச்சயமாகத் தெரிந்தாலும் ஏதோ ஓர் அதிசயம் நிகழ்ந்து, 'ரமா'வுக்காக அந்த டெலிபோன் மணி அடிக்கப் போகிறதோ என்று நானே கூட எதிர் பார்த்தேன்.

மணி அடிக்கக் காத்திருந்தேன்.

டெலிபோன் அமைதியாகவே இருந்தது.

—'அஜுர்' எழுதிய ரஷ்யக்கதை ஒன்றைத் தழுவியது. நன்றி: சோவியத்லாண்ட்

அன்னமே வா!

சாத்திரிக்கும் கதவைத் தாண்டி, மாடியிலிருந்து சலசலப்பு சன்னக் குரலில் வெளி வந்தது. மிருணாவின் மெல்லிய தொனி அழுகை கலந்த கேவலாக, வீட்டு எஜமானரின் பிடிவாதம் ஓங்கிய குரலாக, வீட்டு எஜமானியின் எரிச்சல் கிறல் விழுந்த கிராம போன் பிளேட்டாக ஒலித்தது. என்ன நடக்கிறதோ என்ற பதைபதைப்பில் மாடிப் படியின் கீழ் நின்றாள் அன்னம்மா.

மிருணா மூன்று மாதக் குழந்தையாக இருந்த சமயம் அந்த வீட்டுக்குச் சமையல் காரியாக வந்து நுழைந்தாள் அன்னம்மா.

பத்தொன்பது வருடம் ஓடிவிட்டதே! சமையலறைக்குள் வளைய வந்து, குனிந்து, குனிந்து வேலை செய்து முதுகுகூடக் கூனிவிட்டது. வீட்டு எஜமானி சுகந்தாவை விட இரண்டு வயது சின்னவள் என்றால் யாராவது நம்புவார்களா?

சுகந்தாவின் நாகரீக நடையும், அலங்காரமும், நுனி நாக்கின் உச்சரிப்பும், கலகல வென்று கை கொட்டும் சிரிப்பும் மிருணாவைத் தங்கையாகக் காட்டும் தோற்றத்தை யல்லவா கொடுத்திருக்கிறது? ஆனால் அன்னம்மா எதைப் பற்றிக் கவலைப்பட்டிருக்கிறாள்? சுகந்தாவின் இயந்திர ஓட்டத்தில் அவள் தானாகவே மிருணாவின் பக்கம் நகர்த்தி விடப்பட்டதில் கிடைத்த சுகம்!

காலை முதல் இரவு பால் தந்து போர்வையைப் போர்த்தி விடும் வரை செய்யும் உபசரணைகள்—

''அன்னம், மிருணாவுக்கு ஒண்ணும் இல்லையே? தூங்கி விட்டாளா?'' கணவனுடன் பார்ட்டிக்கு ஓடிவிட்டு வந்து சுகந்தா ஒப்புக்கு விசாரித்து விட்டுப் பதிலை எதிர்பார்க்காமல் போய்விடுவாள்.

போர்த்திப் போர்த்தி வளர்த்த மிருணாவை இன்று ராமனும், சுகந்தாவும் குதறி எறிகிறார்கள். அவர்கள் பார்த்திருக்கும் பையனுக்குத்தான் மிருணா தலையை நீட்ட வேண்டுமாம்! மிருணாள் மனம் அன்னத்துக்குத் தெரியுமே!

வீட்டில் ஒருவரும் இல்லாத மாலை வேளை.

''அன்னம்மா, இங்கே வாயேன். உங்கிட்ட ஒண்ணு சொல்லணும்.''

புடவைத் தலைப்பில் கையைத் துடைத்துக் கொண்டு வந்தாள் அவள். ''என்னடா கண்ணு, ஏதாவது பிரைஸ் வாங்கினியா?'' என்று சிரித்துக் கொண்டே கேட்டாள்.

''இதோ பாரேன். உனக்கு இவரைப் பிடிச்சிருக்கா?''

புகைப்படத்தில் ஜம்மென்று இருந்தான் ரகு. அன்னம்மாவின் வயிற்றில் ஒரு சிறு ஜ்வாலை கிளம்பித் தணிந்தது. ''இதெல்லாம் என்னம்மா?''

''நான் இவரைத்தான் கல்யாணம் செய்துக்கப் போறேன்'' — மிருணாவின் கண்களில் உறுதி மின்னிற்று.

''உன் அம்மா, அப்பா விடுவாங்களா?''

''இவங்களுக்கு நான் ஒரே பெண்தானே? என் கல்யாணத்துக்கு என் விருப்பம்தானே அன்னம்மா முக்கியம்?''

''பையனுக்கு அப்பா, அம்மா....''— இழுத்தாள் அன்னம்மா. குழந்தைப் பெண் மிருணாவின் ஆசை நிறைவேற வேண்டும். பையன் பெரிய இடமாக இருக்க வேண்டும் என்றெல்லாம் அவள் உள்ளம் விரும்பியது.



''அம்மா இருக்கா, அப்பா இல்லே. ரொம்ப ஏழைக் குடும்பம்தான் அன்னம்மா.''

மிருணாவின் உற்சாகத்தை அவள் தடுக்க விரும்பவில்லே. அந்த வேலேயைக் காலே முதல் ராமனும் சுகந்தியும் செய்கிறார்கள். வீட்டு எஜமானனும் எஜமானியும் கூடிப் பேசும் இடத்தில் அவள் செல்வது நியாயமில்லே.

மாடியிலிருந்து ராமன் தடதடவென்று இறங்கி வந்தார். முகம் சிவந்திருந்தது. சட்டென்று பக்கத்து அறை வாசலில் நகர்ந்து கொண்டாள் அன்னம். அவளேக் கண்டதும் ''அன்னம்மா, மிருணாவை வெளியே போகாமல் பாதுகாப்பது உன் பொறுப்பு. அவளே இனிமேல் காலேஜுக்கு அனுப்பப் போறதில்லே'' என்றார் ராமன்.

அன்னம்மா தலேயைக் குனிந்து கொண்டாள். அவர் போய் விட்டார்.

டிபன் சாப்பிட உட்கார்ந்த சுகந்தியின் முகத்திலும் இருட்டடிப்பு.

''இந்த வீட்டுக்கு ஒரே பெண். வரவன் ஏழையா இருந்தா என்ன? கல்யாணம் ஆனு பணக்காரனு ஆகிவிட மாட்டானே?''

இட்லி மீது சட்னியை ஊற்றிய அன்னம்மா பேசிவிட்டாள்.

சுகந்தி விழிகள் பூக்கப் பார்த்தாள். பத்தொன்பது ஆண்டுகளாக இந்த வீட்டுச் சுவரைப் போல் நலுங்காமல் நிற்பவள் என்ற பாசம் பொங்கியது. தாழ்ந்த குரலில் பேசினாள்.

''அன்னம்! கொஞ்ச நாளா நிலேமை சரியில்லே. எஜமானரோட பிஸினஸ் ரொம்ப சரிஞ்சு போச்சு. மிருணா விகளைக் கல்யாணம் பண்ணிண்டா எல்லாம் சரியாப் போகும். என்னு, அவன் கிட்டக் கையை நீட்டிட்டோம் பாரு.''

மேலே சுகந்தி பேசியதெல்லாம் அன்னத்தின் காதுகளில் விழவில்லே. அந்தப் பையனுக்கா மிருணா? கிளியை வளர்த்துப் பூனே கையிலா கொடுப்பார்கள்? அவன் பச்சைப் பார்வையும், வெற்றிலே போட்ட முகத்தின் சுருக்கமும், அவளுக்கே பிடிக்கவில்லேயே? அவன் அடிக்கடி வந்து போகும் இரகசியம் இதுதானு?

ஒரு வாரம் போல வீட்டில் அமைதி நிலவியது. ஆனுல் ஒரு தினம் சுப்பு ஐயர் வந்து பஞ்சாங்கத்தைப் பார்த்து நாள் குறிக்கத் தொடங்கியதும் மிருணா பதறினாள்.

''அன்னம்மா நான் என்ன செய்வேன்?'' என்று அவள் மடியில் முகம் புதைத்து அழுதாள்.

''நீ கவலேப்படாதே மிருணா'' என்றாள் அன்னம். சும்மா இருப்பதில் பயனில்லே என்று உணர்ந்தாள். மிருணாவை விட்டுப் போன் பண்ணச் சொல்லி ரகுவை ஒருவரும் இல்லாத வேளேயில் வரவழைத்தாள். கண்ணியமான பார்வையும், மனம் திறந்து பேசிய பேச்சும்–ரகுவை அன்னம்மாவுக்குப் பிடித்து விட்டது.

''குழந்தையைக் கண் கலங்காம வச்சுக் காப்பாத்தணும்'' என்றாள் கண் கலங்கி.

''என்னே நம்புங்கம்மா'' என்ற ரகு அவள் காலில் விழுந்து வணங்கினான்.

மூவரும் கடைசியில் கல்கத்தாவில் உள்ள ரகுவின் வீட்டுக்கு மிருணாவை ரகு அழைத்துச் செல்வதாக ஏற்பாடு செய்தார்கள். வெளி உலகம் அறியாத அன்னம் தான் கண்கலங்க ரயிலடிக்குப் போய் ஒரு நாள் முன்னிரவில் வழியனுப்பினாள். தட்டுத் தடுமாறி வீட்டு வாசல்படி ஏறும் சமயம்–

''நில் அங்கேயே'' ராமன்தான் இடியாக இடித்தார்.

''பாவி, உனக்கு நாங்க என்னடி செய்தோம்? இந்த வீட்டில ஒருத்தியா வச்சதின் பலன் பாலூத்தினவளேயே கடிக்கிற பாம்பா ஆயிட்டியேடி'' என்று கத்தினாள் சுகந்தி.

யார் சொல்லியிருப்பார்கள்? அன்னத்துக்குப் புரியவில்லே.

''கல்லுளிமங்கி மாதிரி நிக்கிறு பார்.''

''இப்பவே போலீஸுக்குப் போன்பண்ணி அடுத்த நிறுத்தத்திலேயே வண்டியை விட்டு

லட்சுமிராஜரத்னம்



அவர்களைக் கீழே இறக்குகிறேன் பார்'' என்று போனுக்குப்பக்கத்தில் ஓடினார் ராமன்.

அன்னம்மா நிதானமாக அவரருகில் வந்தாள்.

''நிறுத்தினா?'' என்று கேட்டுப் புருவத்தைத் தூக்கினாள்.

தன் புருஷன் எதிரில் நின்று பேசாதவள் இன்று இப்படிக் கேட்டதும் எரிச்சலடைந்தாள் சுகந்தி.

''இன்னிக்குக் காலையில் அவர்கள் வட பழனியில் கல்யாணம் பண்ணிக் கொண்டாச்சு. நீங்கதான் அதிகாலையில் வேறு கல்யாணம் ஒன்றுக்குப் போயாச்சு. இனிமே அவர்கள் புருஷன் – மனைவி.''

''ஏய், யார் கிட்டேப் பேசறேன்னு யோசிச்சுப் பேசு'' என்று அதட்டினாள் சுகந்தி.

''சுகந்தி, நீ பேசாம இரு'' என்று அன்னம்மா அதட்டல் போட்டதும் சுகந்தி ஸ்தம்பித்துப் போனாள். தன் நிலை ஒரு சமையல்காரி அதட்டும் அளவுக்கா போய் விட்டது!

''என்ன இதைக் கேட்டுண்டு பேசாம இருந்தா எப்படி டியர்? ஒரு சமையற்காரி என்னைப் பேர் சொல்லிக் கூப்பிடறா. அவ வாயைப்பாத்து ரெண்டு போடாமல் பேசாம நிக்கறேனே?'' என்று சுகந்தி அலறினாள்.

''அவ பெண் மேலே அவளுக்கு உரிமை உண்டு சுகந்தி. பார்த்துப் பார்த்து வளர்த்தோம். பன்னீரால் குளிப்பாட்டி, பாதாம் பால் கொடுத்து வளர்த்தோம். பலி ஆடாக மகள் வெட்டப்படுவதைக் கண்டு பெத்தவளால் சும்மா இருக்க முடியுமா? அதான் சீறிப் பாய்ஞ்சுட்டா.''

ராமன் கண்களைத் துடைத்துக்கொண்டார்.

இருபது ஆண்டுகளுக்கு முன்பு–

அவர் பெங்களூர் போய் நண்பர் வீட்டில் தங்கியபொழுது அன்னம்மாவின் இளமையை விருந்தாக்கிக் கொண்டார். அடுத்த தடவை சென்ற சமயம் அன்னம்மா சொன்ன செய்தியோ?

''உங்க குழந்தைக்கு என் வயிற்றில் நாலு மாசம். இந்த வீட்டினர் என்னைச் சந்தேகமாகப் பார்க்க ஆரம்பிச்சுட்டாங்க.'' என்று அழுதாள்.

அவர் அவளைத் தனி விடுதியில் வைத்தார். செலவுக்குப் பணம் அனுப்பினார். அந்தச் சமயத்தில் சுகந்தியும் கருவுற்றிருந்தாள். வளைகாப்பு, சீமந்தம் என்று தடபுடலாக நடந்தது. அந்த மாதிரிச் சமயங்களில் ராமன் அன்னத்தை நினைத்துக் குமைவார். ஆனால் சுகந்தியின் நிலையோ? கருவென்று நினைத்த குழந்தை கட்டி என்று அறிந்தபொழுது– வளைகாப்பு, சீமந்தம் நடந்துவிட்ட அவமானத்தை எண்ணி எண்ணி அழுதாள்.

''சீ, அசடே, அழாதே. பெங்களூர் போவோம். கட்டியை அகற்றிவிடுவோம். அங்கே குழந்தை பிறந்தது என்று ஏதாவது ஒரு குழந்தையை வாங்கி நாம் வளர்ப்போம் என்ன?''

அவர் சுலபமாக இந்தப் பிரச்னையைத் தீர்த்து விட்டார். சுகந்தியின் ஆபரேஷன் வெற்றிகரமாக நடந்தது. அன்னம்மாவின் குழந்தை மிருணாவை – இரண்டு மூன்று மாதங்களான குழந்தையை–அனாதை என்று சொல்லி மனைவியிடம் கொடுத்துவிட்டார்.

பெற்றவளால் குழந்தையைப் பார்க்காமல் இருக்க முடியவில்லை. அன்னம்மா தனிமையில் வந்து அவரிடம் அழுதாள். ''பணத்தால் என் குறை தீராது. என் குழந்தைதான் வேண்டும்'' என்று கதறினாள்.

''வீட்டில் உனக்கு மனைவி ஸ்தானம் தர முடியாது அன்னம்'' என்று அவர் தடுத்தார்.

யாரோ அனுப்பியது போல் ஒரு சமையற்காரியாக, ஓர் ஆயாவாக அவள் ஒண்டிக் கொண்டாள் அந்த வீட்டில்.

இவ்வளவு நடந்திருக்கிறதா தன் வீட்டில்? பிரமை பிடித்துப் போனாள் சுகந்தி.

மளமளவென்று உள்ளே போன அன்னம் தன் சிறு பெட்டியைக் கொண்டு வந்தாள்.

''எங்கே போறே அன்னம்?''

''நானும் என் குழந்தை கூடவே போய் இருக்கப் போறேன்'' என்றவள், படியை விட்டு இறங்கினாள்.

சுகந்தி வீட்டைப் பார்த்தாள். மிருணா இந்த வீட்டில் இல்லை என்ற உணர்வு ஆட்டிப் படைத்தது. தாயாக அவள் என்ன செய்தாள்? ஓவென்று அழுதாள்.

''வீடு வெறிச்சுன்னு போச்சுன்னு அழறே நீ! சுமந்த வயத்தை வெறிச்சுனு வெச்சுண்டு தன் குழந்தையை அன்னம் உனக்குக் கொடுத்ததை நினைச்சுப் பார். நான் தான் முரடன் விகவுக்குத் தரேன்னு சொன்னால், நீயும் தலையாட்டினியே! பெத்த தாயாரால் அது முடிஞ்சுதா?''

''நானும் அவளை மனசுலே சுமந்த தாயார்தான். வாங்க, நாமும் போய்க் குழந்தையைக் கூட்டிண்டு வருவோம்.'' கண்களைத் துடைத்தபடி கிளம்பினாள் சுகந்தி.

அன்னத்தைத் திரும்பக் கூப்பிட்டார் ராமன்.


''வா, அன்னம் மூணு பேருமாவே விமானத்தில் போய்க் குழந்தைகளைக் கூட்டிண்டு வருவோம்.''

சுகந்தி அன்னத்தின் கரத்தைப் பற்றினாள்.

நண்பர்: ''நீங்கள் ஆசிரியர், உங்கள் தம்பி துணை ஆசிரியர்; உங்கள் மகன் பொறுப்பாசிரியர்—போதுமே? இன்னும் வேறு எதற்கு ஆள் பார்க்கிறீர்கள்?''

ஆசிரியர்: ''மறுப்பாசிரியர் ஒருத்தர் வேணுமே—எதை எழுதினாலும் அதை மறுத்து எழுத வதற்கு!''

-பெ. கஸாசாமி





ஆரோக்கியம், ஆனந்தம், ஒன்றுக்கொன்று ஆதாரம்!
Bournvita
Bournvita
போர்ன்விடா பருகுங்கள்.
உங்கள் குடும்பத்தினருக்கு இன்சுவைமிக்க போர்ன்விடா வழங்குங்கள். போர்ன்விடாவில் கோகோ, மால்ட், பால் மற்றும் சர்க்கரையின் நற்பண்புகள் நிறைந்துள்ளன. நூறு ஆண்டுகளுக்கும் மேலாக உணவுப்பான நிபுணர்கள் — காட்பரி தயாரித்து அளிப்பது.
காட்பரிஸ் போர்ன்விடா
உங்களோடு வளரும் நன்மை
Cadbury's
Bournvita
Cadbury's
Bournvita
OBM-7538 TM

தங்கம், மிக உயர்ந்த பொருளாகக் கருதப் படுவது. உயர்வுடைய பொருளைப் 'பொன்' என்று கூறுவது மரபு. இந்திரலோகத்தையும் 'பொன்னுலகு' என்றுதானே கூறுகிறோம்.

பொன்னணிகளைப் பூண்டு கொள்வதில் நமக்குத் தனி விருப்பம். ஏன்? அழகுக்காகவா? ஆம்: அழகுக்காகவும்தான்! அதனால்தான் தமிழில் 'பொன்' என்ற சொல்லுக்கு மற்றொரு பொருள் 'அழகு' என்று வழங்குகிறது. ஆனால் பொன்னணிகள் அழகுக்கு மட்டுமல்ல: அவசியத்துக்காகவும் இதனை நடுத்தரக் குடும்பங்கள் அணியும்.

பொன்னால் நமக்குப் பயன் இருக்கிறது. ஆனால் நம்மால் நாம் அணிந்து கொள்ளும் பொன்னுக்கு என்ன பயன்? இந்தச் சிந்தனை பட்டினத்தாருக்குத் தோன்றியது. உடனே சிந்தனையை ஆன்மீகச் செய்தியாக்கி அழகாகப் பாடிவிட்டார்.

''இறைவா! தங்கத்தை அணிந்துகொள்கிறவருக்கு அத்தங்கத்தால் பயனுண்டு: ஆனால் அந்தப்பொன்னை அணிந்து கொள்கிறவர்களால் அப்பொன்னுக்கு ஒரு பயனுமில்லை. அதுபோல உன்னால் எனக்குக் கணக்கற்ற பயன்கள் உண்டு. ஆனால் என்னைப் பக்தனாகப் பெற்றதனால் உனக்கு என்ன பயன்?'' என்று கருத்தமைத்துப் பாடினார்.

''பொன்னால் பிரயோசனம் பொன்
படைத்தார்க்கு உண்டு பொன் படைத்
தோன்
தன்னால் பிரயோசனம் பொன்னுக்
கங்கு ஏதுண்டுஅத் தன்மையைப்போல்
உன்னால் பிரயோசனம் வேணதெல்லாம்
உண்டு; உனைப் பணியும்
என்னால் பிரயோசனம் ஏதுண்டு
காளத்தி ஈச்சுரனே''

இறைவனைப் பொன்னாகவும், தன்னைப் பொன்னணி பூண்டவனாகவும் வைத்துப் பட்டினத்தார் பாடியது போலவே பொன்னே ஆன இறைவனைப் பாடிய பெரியாழ்வார் ஓர் அருமையான கருத்தைத்தெரிவித்தார்.

இறைவனுடைய திருநாமத்தைப் பயின்ற நாக்கே உயர்வுடையது; இல்லாத நாக்கால் பயனில்லை என்பது அவர் கருத்து.

நாம் நடந்து போகிறபோது எத்தனையோ சிறியதும் பெரியதுமான கற்கள் நம் கால்களில் தட்டுப்படுகின்றன. அவற்றை நாம் மதிப்பதில்லை: மிதிக்கிறோம்.

ஆனால் நகைக் கடையில் பொன்னை உரைத்துப் பார்க்க வைத்திருக்கும் உரைகல்லும் கல்தானே! பொன் உரைக்கப்பட்ட கல்லை யாராவது தூக்கி எறிவார்களா? அது வெறும் கல்லாக இருந்தால் தூக்கி எறிகிறோம். பொன்–உரைக்கப்பட்ட கல்லானால் அது தனித்த மதிப்பைப் பெறுகிறது. அதுபோல இறைவன் நாமம் உரைக்கப்பட்ட நாக்கு, பொன்னுரைக்கப்பட்ட உரைகல் போன்றது. இல்லாத நாக்கு வெறும் கல்.

பொன் உரைக்கப்படும் உரை கல்லையும் ஒரு முறை இருமுறை தேய்க்கும்வரை தராசு, படிக்கல் ஆகியவற்றை வைத்திருக்கும் பெட்டியில் வைக்கிறோம். கொஞ்சம் அதிகமாகத் தேய்க்கத் தேய்க்க அந்தஉரைகல்லையும் பொன்னணிகளை–வைக்கும் பெட்டியிலேயே வைத்து விடுகிறோம். அப்படியே இறைவன் நாமத்தை அடிக்கடி உரைக்கும் நாக்கும் இறைவனுடனேயே கலந்த நாக்காகிவிடுகிறது.

பொன்னைப் பெறுகின்றவர் உரைகல்லில் கொஞ்சம் அழுத்தமாகத் தேய்த்துவிட்டால் விற்கிறவருக்குக் கோபம் வரும். ஆனால் இறைவன் நாமத்தை மாற்றின்றி, எல்லையின்றி உரைத்துக் கொள்ளலாம்.' யார் தடை விதிக்க முடியும்?

தன் நாவில் இறைவன் நாமம் பலமுறை உரைக்கப்பட்டதால் தன் நாக்கு வெறும் கல் அல்ல, உரைகல் என்று மகிழ்ந்து பாடுகிறார் பெரியாழ்வார்.


இலக்கியத்தில் இறையுணர்வு


''பொன்னைக் கொண்டு உரைகல் மீதே
நிறமெழ உரைத்தாற்போல்
உன்னைக் கொண்டுஎன் நாவகம்பால்
மாற்றின்றி உரைத்துக் கொண்டேன்
உன்னைக் கொண்டுஎன் உள்வைத்தேன்
என்னையும் உன்னில் இட்டேன்
என்னப்பா! என் இருடீகேசா!
என்னுயிர்க் காவலனே!''

நெல்லை மாவட்டம் கோவில் பட்டி ''செண்பக வல்லி அம்மன்'' திருக்கோவிலில் 64 நாயன்மார்கள் சிலைகளுக்கு இடையே அமைந்த கண்ணப்ப நாயனார் சிலையின் அமைப்பு வித்தியாசமாய்க் காணப்படுகிறது!

சிவபெருமானின்கண்ணில்கால்வைத்துத் தன் கண்ணைப்பிடுங்கும் சில அமைப்பை பலஇடங்களில் காணலாம். ஆனால் இங்கு, லிங்கத்தின் மத்தியிலிருந்து (சிவனின்) கரம் ஒன்று நீண்டு வந்து நாயனாரின் செய்கையைத் தடை செய்யும் வித்தியாசமான அம்சமும் உண்டு.

- கே. வி. கோபால்




உரைகல்
கீரன்

'இருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற உத்தமர் தம் உறவு வேண்டும்'

குறுக்குத்துறை முருகன் சந்நிதியில் கை கூப்பித் தன்னை மறந்து ஜான்சன் முணு முணுத்துக் கொண்டிருந்தான். மணியும் சந்திராவும் பிராகாரம் சுற்றி மும்முறை வலம் வந்து விட்டனர். குமரனோடு ஒன்றி மோன நிலையில் நின்ற அவன் தவத்தைக் கலைக்க அவர்கள் விரும்பவில்லை. ஆற்று மணலில் அமர்ந்து அவனுக்காகக் காத்திருந்தனர்.

மணியும் ஜான்சனும் இந்துக் கல்லூரியில் ஒன்றாய்ப் படித்த உயிர் சிநேகிதர்கள். ஜான்சனுக்குத் தற்காலிக வேலை இங்கேகிடைத்து விட்டதால் தன் நண்பனைத் தன்வீட்டிலேயே சாப்பாடு, தங்கலை வைத்துக் கொள்ளச் செய்திருந்தான் மணி.

மணிக்குக் கல்யாணம் முடிந்த புதிதில் சுவாமி தரிசனம் செய்யச்சந்திராவுடன் திருச்செந்தூர் புறப்பட்டான்.

''மணி, நானும் கூட வரேன்'' என்று ஜான்சனும் உடன் புறப்பட்டுவிட்டான்.

கோவிலுக்கு வந்ததும் ''ஜான்சன், நீ ஒரு மணி நேரம் வெயிட் பண்ணிக்கிட்டு இரு. சுவாமி தரிசனத்தை முடிச்சுட்டு வந்துடறோம்'' என்றான் மணி.

''நானும் கோவிலுக்குள் வருகிறேன்'' என்றான் ஜான்சன்

''நீ எங்கள் கோயிலுக்குள் வரலாமா?'' என்று மணி தயங்கினான்.

''நீ எங்கள் ஊருக்கு வந்தபோது சர்ச்சுக்கு உன்னைக் கூட்டிப் போகலியா? யாரும் உன்னைத் தடுத்தாங்களா?''

''ஜான்சன் கோவிலுக்குள் வரணும்னு சட்டை யெல்லாம் கழற்றணும். திறந்த உடம்போடுதான் உள்ளே போகலாம்.''

''சரி.''


ஜான்சன் சட்டையைக் கழற்றினான். ஒரு பெரியவர் சுவாமி தரிசனத்தை முடித்து விட்டுத் திரும்பி வந்து கொண்டிருந்தார். பஸ்ஸில் வரும்போது ஜான்சன் பக்கத்திலிருந்து பிரியமாய்ப் பேசிக் கொண்டிருந்தவர்.

''தம்பி, சாமி தரிசனம் செய்யப் போறீங்களா? இந்தாங்க விபூதி.''

இலை விபூதியை ஜான்சனிடம் நீட்டினார். தயங்காமல் வாங்கி நெற்றியில் பூசிக்கொண்டான். அவனையறியாமல் 'முருகா' என்றான்.

கங்கமானவனை

— எம்.கே.சங்கரன் —



இந்து மதத்தவர்களோடு அவன் அதிகம் பழகியிருந்ததால் அவனுக்கு ஒரு கவர்ச்சி ஏற்பட்டிருந்தது.

விபூதி தந்த பெரியவர் எதிர்ப்பட்டார்.

''தம்பி, சுவாமி தரிசனம் கிடைச்சுதா?''

''நீங்க விபூதி தந்ததுமே முருகன் அருள் எனக்குக் கிடைச்சுட்டுது. முதன் முதலில் பார்த்ததுமே முருகன் எனக்குள் ஐக்கியமாகி விட்டார்.''

''செந்திலாண்டவன் கோயிலுக்கு இதற்கு முன் நீங்கள் வந்ததில்லையா?''

''இந்துக் கோயில்களுக்கே நான் போனதில்லே. நான் ஒரு கிறிஸ்தவன்.''

''அடடா! உங்களுக்கு விபூதி தந்துவிட்டேனே!''

''விபூதியை நீங்க தந்ததாகவா நினைக்கிறீங்க? என்னை ஆட்கொண்ட முருகன் உங்கள் மூலமாகத் தந்த பிரசாதம் அது.''

மணியையும் சந்திராவையும் வீடுதிக்கு அனுப்பிவிட்டுப் பெரியவரிடம் பேசிக்கொண்டிருந்தான் ஜான்சன். அவர் முருகனின் மகிமைகளை அவனிடம் சுவாரஸ்யமாக எடுத்துச் சொன்னார்.

விடுதிக்கு அவன் திரும்பி வந்தபோது, மணி அவனைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தான். தலை மொட்டை போட்டு, சந்தனம் பூசி, பட்டை பட்டையாய்த் திருநீறணிந்த கழுத்தில் ருத்ராட்ச மாலையோடு.....

''ஜான்சன், இதென்ன கோலம்?''

''என்னை முருகனுக்கு அர்ப்பணித்து விட்டேன்.''

''மணி, ஜான்சனைத்தேடிஒரு பொண்ணு வந்திருக்கு. அவள் ரூம்ல உட்கார வச்சிருக்கேன். போய் விசாரி'' என்றார் மணியின் அப்பா.

ஸ்டெல்லாவாக இருக்குமோ என்று மணி நினைத்தது போல ஸ்டெல்லாதான். ஜான்சன் மொட்டை அடித்துப் பட்டை விபூதியுடன் எடுத்த போட்டோவைப் பார்த்துக் கொண்டே நின்று கொண்டிருந்தாள்.


''வாங்க ஸ்டெல்லா.''

''உங்க நண்பரைப் பார்க்க வந்தேன்.''

''இருங்க, அழைத்து வருகிறேன்.''

காலேஜில் படிக்கிற காலத்திலிருந்தே ஸ்டெல்லாவைப் பற்றி ஜான்சன் அடிக்கடி சொல்வான். அவன் மணக்கப் போவது

க்கு என் தங்கை



ஸ்டெல்லாவைத்தான் என்பது முடிவு செய்யப்பட்ட விஷயம். அதனால் ஸ்டெல்லாவின் நாமஸ்மரணை அவனுக்கு எப்போதும் உண்டு.

''மணி,ஸ்டெல்லாவை உனக்கு அறிமுகப் படுத்தப் போகிறேன். என்கூட நாசரேத்துக்குவா'' என்று மணியை அழைத்துக் கொண்டு போனான்.

ஸ்டெல்லா இயேசுபிரான் படத்துக்குமுன் மண்டியிட்டு ஜெபம் செய்து கொண்டிருந்தாள். கறுப்பு நிறம்தான். ஆனால் அதீதமான கவர்ச்சி. நல்ல வளர்த்தி. கட்டமைப்பான உடற்கட்டு. ஜெபம் முடிந்து அவள் வந்தபோது மிக நேர்த்தியாக இருந்தாள்.

ஸ்டெல்லா டீச்சராக இருந்தாலும் ஜான்சனைக் கண்டதும் புன்சிரிப்பு மூலம் மௌனமாக வரவேற்று நாணித் தலை குனிந்து கொண்டாள். அவன் விழுந்து விழுந்து உபசரித்ததைக் கண்ட மணி ஜான்சனிடம் அவள் எவ்வளவு பிரியம் வைத்திருக்கிறாள் என்பதைப் புரிந்து கொண்டான்.

இன்று ஜான்சனைத் தேடி அவளே வந்திருக்கிறாள். ஜான்சன் என்ன பதில் சொல்லப் போகிறானோ!

''ஸ்டெல்லா....''

ஜான்சன் குரல் கேட்டுத் தலை நிமிர்ந்தாள் ஸ்டெல்லா. அவள் கண்களில் நீர் கோத்து நின்றது.

''நீங்க இந்து மதத்துக்கு மாறிட்டீங்கன்னு.....''

''நம்ம மதத்தை நான் உதறல்லே.அதே நேரத்தில் முருகன் மேலே எனக்குத் தனி பக்தி ஏற்பட்டுடிச்சு.''

''இந்த நிலையில் என்னை நீங்க கல்யாணம் செய்ய முடியுமான்னு யோசித்தீங்களா?''

''ஏன் முடியாது?''

''நான் ஏசுவை விசுவாசிக்கிறேன். என் கணவர் ஒரு சுத்தமான கிறிஸ்தவராகத்தான் இருக்கணும்.''

''உன் மனசுப்படி நான் சர்ச்சுக்கு வருகிறேன். உன்னோடு சேர்ந்து ஜெபம் செய்கிறேன். ஏசு பிரானையும் முருகப் பிரானையும் நான் ஒரே ரூபமாகத்தான் காண்கிறேன்.''

''என்னைக் கைப்பிடிக்கணும்னு நீங்க திருநீறு பூசக் கூடாது. முருகன் கோயிலுக்குப் போகக் கூடாது.''

''இம்பாஸிபிள். முருகனிடம் நான் கொண்டிருக்கும் பக்தியை யாராலும் மாற்ற முடியாது.''

''அப்படின்னு நம்ம கல்யாணம் நடக்காது.''

''என் மன உணர்வுகளுக்குத் தடை போடுவதானால் அந்தக் கல்யாணம் எனக்குத் தேவை இல்லே.''

''யோசித்து முடிவுக்கு வாங்க. சாதகமா நீங்க வரலேன்னு... சொல்லவே வருத்தமா இருக்கு. – என் பெற்றோர் என்னை வேறொருவருக்குக்கல்யாணம் செய்ய...''அதற்கு மேல் சொல்ல முடியாமல் ஸ்டெல்லா அழுது கொண்டே போய்விட்டாள்.

மாதங்கள் ஓடின. ஜான்சன் கொஞ்ச நாட்களாகத் தீவிர சிந்தனையில் உழன்று கொண்டு வந்தான்.

''மணி, எப்போதும் ஸ்டெல்லாவின் நினைப்பே வருகிறது. அவளை மறக்க எவ்வளவோ முயற்சிசெய்கிறேன். நான் ஒரு கல்யாணம் செய்து கொண்டால் அவளை மறந்துவிடலாம். ஸ்டெல்லாவுக்கும் ஒரு பிரச்னை தீர்ந்துவிடும். இந்து மதத்திலேயே ஒரு பெண் பார்த்துக் கல்யாணம் செய்யலாம் என்று நினைக்கிறேன்'' என்றான்.

ஜான்சனை வாழவைக்க வேண்டும் என்ற துடிப்பு மணிக்கு. தன் ஆபீஸ் டைப்பிஸ்ட் லலிதாவின் ஞாபகம் வந்தது. இருபத்தைந்து வயதுக்கும் மேலாயிற்று. வரதட்சணைக் கொடுமையால் அவள் திருமணம் தடைப்பட்டுக் கொண்டிருந்தது.

மணி லலிதாவின் வீட்டுக்குச் சென்றான். அவள் அம்மாவைச் சந்தித்தான்.

''அம்மா நம்ம லலிதா கல்யாணத்துக்கு ஒரு சான்ஸ் வருகிறது. வரதட்சிணை, சீர் ஒரு பைசா வேண்டியதில்லே. கிராஜுவேட். நல்ல சம்பளத்தில் இருக்கிறான்...''

''பையன் என்ன கோத்திரம்?'' லலிதாவின் அம்மா கேட்டாள்.

''ஜாதி மதங்களுக்கே அப்பாற்பட்டவன் அவன். என் சிநேகிதன் ஜான்சன்தான்.''

''கிறிஸ்துவப் பையனா?'' அவள் முகம் சுளித்தாள்.

''இப்போது முருகன்தான் அவனுக்குத் தெய்வம்.''

''மிஸ்டர் என் கல்யாணத்துக்கு வக்கில்லே என்பது உண்மைதான். அதனால் நான் கேவலமாப்போயிட்டேன்னு நினைக்கிறேளா?''

''லலிதா, தவறாக எடுத்துக் கொள்ளக் கூடாது. நம்ம மதத்தை நாடி வந்திருக்கும் ஒருவனுக்கு வாழ்வு கொடுக்கணும். உங்களுக்கும் ஒரு வாழ்வு அமையும் என்று தான் வந்தேன். உங்களுக்கு மனசில்லே. நான் வருகிறேன்.''

மணி பல்லரை அனுகினான். ஜான்சன் தங்கள் மதத்துக்கு வந்ததை வரவேற்றாலும் அவர்கள் பெண் கேட்டதும் பின்வாங்கிவிட்டார்கள்.

மானேஜர்: ''ஒருவாரமாகியும் ஏம்பா அந்த ஃபைலை முடிக்கலே...?''

அவன்: ''நான் என்ன முயன்றும் அந்த ஃபைலின் நாடா முடிச்சை அவிழ்க்கவே முடியலே ஸார்!'' -உ. ராஜாஜி



புத்துணர்ச்சிதரும் தூய சுவாசம்...
உறுதியிக்க, ஆரோக்கியமான பற்கள்



அளித்திடுதே கோல்கேட் டென்டல் க்ரீம்


ஒவ்வொரு சாப்பாட்டிற்குப் பிறகும் கோல்கேட் கொண்டு உங்கள் பற்களைப் பிரஷ் செய்யுங்கள். உலகெங்கும் பல் டாக்டர்கள் சிபாரிசு செய்வதைப் போலவே அது உங்களைப் பாதுகாக்கிறது.

உங்கள் பற்களுக்கிடையே தங்கியுள்ள உணவுத் துணுக்குகளில் பாக்டீரியாக்கள் வளர்கின்றன. இவை வாய் துர்நாற்றத்தையும், பிறகு வலிமிக்க பற்சிதைவையும் உண்டாக்கும்.

எனவே சாப்பிட்டு முடித்தவுடனேயே கோல்கேட் முறையில் பற்களைப் பிரஷ் செய்யுங்கள். அது புத்துணர்ச்சியுடன் இனிய சுவாசத்தைத் தருவதற்கும், பற்களுக்கு வெண்மையளிப்பதற்கும், பற்சிதைவை எதிர்ப்பதற்கும் மிகவும் சக்தி வாய்ந்தது என்று நிரூபணமாகியுள்ளது.

கோல்கேட்டின் புத்துணர்ச்சி தரும், பெப்பர்மின்ட் சுவை பல்துலக்குவதை ஒரு இன்ப அனுபவமாக்குகிறது.

சுலபமான, கோல்கேட்டின் செயல் புரியும் முறை




உணவுத் துணுக்குகள் பற்களுக்கிடையே சிக்கிக் கொள்வதால் துர்நாற்றத்தையும், பற்சிதைவையும் உண்டாக்கும் பாக்டீரியாக்கள் வளருகின்றன.

கோல்கேட்டின் ஒப்பற்ற, செயல்புரியும் நுரை ஆழ ஊடுருவிச் சென்று உபாதை தரும் உணவுத் துணுக்குகளையும் பாக்டீரியாக்களையும் அகற்றி விடுகிறது.

பயன்: கவர்ச்சிமிக்க வெண்மையான பற்கள், தன்னம்பிக்கை தரும் இனிய சுவாசம், பற்சிதைவுக்கெதிராகப் பாதுகாப்பு.


கோல்கேட் டென்டல் க்ரீம்
உபயோகித்து வாய்துர்நாற்றத்தைத்
தடுத்திடுங்கள் பற்சிதைவை
எதிர்த்திடுங்கள்



DC-G-74 TM

யூ.எல்.ஐ.பி. +

பாதுகாப்புக்கு மறு பெயர்



அனைத்தும் அடங்கிய ஒரே சேமிப்புத் திட்டம்

லைஃப் இன்சூரன்ஸ் கார்ப்பொரேஷன், ஜெனரல் இன்சூரன்ஸ் கார்ப்பொரேஷன், யூனிட் ட்ரஸ்ட் ஆஃப் இந்தியா—மூவரும் இணைந்தளிக்கும் இணையற்ற திட்டம் யூ.எல்.ஐ.பி. + உங்களுக்கும் உங்கள் குடும்பத்துக்கும் பாதுகாப்பு அளிக்கும் சேமிப்புத் திட்டம்.

யூ.எல்.ஐ.பி. + ன் நன்மைகள்

- உயர்ந்த வருமானம். உங்கள் சேமிப்புத் தொகை ரூ. 12000 திட்ட முடிவில் (10 ஆண்டில்) ரூ. 18000 மாகவும் (15 ஆண்டில்) ரூ. 22000 மாகவும் உயர்ந்து விடுகிறது.
- வரிச்சலுகை. இத்திட்டத்தில் முதலீடு செய்யும் உங்கள் தொகைக்கு பூரண வருமான வரி விலக்கு உண்டு.
- விபத்து பாதுகாப்பு. நீங்கள் எடுக்கும் திட்டத்தின் மதிப்பு எதுவானாலும், ரூ. 15000 வரை உங்களுக்கு விபத்து பாதுகாப்பு அளிக்கப்படுகிறது.
- ஆயுள் பாதுகாப்பு. நீங்கள் சேரும் திட்டத்தின் தொகைக்கு சமமாக உங்களுக்கு ஆயுள் பாதுகாப்பு அளிக்கப்படுகிறது. மருத்துவ பரிசோதனை தேவையில்லை.
- ரூ. 24000 வரை சேமிக்கலாம் ரூ. 12000க்கு ஒரு திட்டமும் அதிலிருந்து 3 வருடங்கள் கழித்து அதே தொகைக்கு மற்றுமொரு திட்டமும் எடுத்துக் கொள்ளலாம்.

பாதுகாப்பான வாழ்க்கைக்கு இன்றே யூ.எல்.ஐ.பி. திட்டத்தில் சேர்ந்திடுங்கள்.

இதர விபரங்களுக்கு எங்களையோ அல்லது எங்கள் ஏஜெண்டுகள் மற்றும் தலைமை பிரதிநிதிகள் அல்லது உங்களுக்கு அருகிலுள்ள பாங்க் ஆப் பரோடாவின் கிளைகளையோ அணுகுங்கள்.

எங்கள் தலைமை பிரதிநிதிகள் :

ஏ. தனபால், 10 ஜே. ஹுஸைர் ரோடு, கோயம்புத்தூர் 641 018. போன் : 34776 (கோயம்புத்தூர், பெரியார் மாவட்டங்களுக்காக)

எம். ராமமூர்த்தி, 30, எல்.ஐ.சி. காலனி, மதுரை-625 002 (மதுரை மாவட்டத்துக்காக)

கே. முத்துசாமி, 52-ஏ, வ.உ.சி. நகர், தஞ்சாவூர்-613 007. போன் : 1224 (தஞ்சாவூர் மாவட்டத்துக்காக)

யூனிட் டிரஸ்ட் ஆப் இந்தியா

(ஒரு பொதுத்துறை நிதி நிறுவனம்) தலைமை செயலகம் : பம்பாய்-20

தெற்கு பிராந்திய செயலகம் :
ரெஜினு மேன்ஷன், 46, செகண்ட்லைன் பீச், சென்னை-600 001. தொலைபேசி : 27433

உங்கள் சேமிப்பின் தொடக்கம் யூனிட்டுகளாகவே இருக்கட்டும்

UTI-101-81-Tam

“மிஸ்டர் மணி, உங்க நண்பருக்குப் பெண் கிடைச்சுதா?'' என்று கேட்டாள் லலிதா.

பதில் கூற முடியாமல் நின்றான் மணி.

''உங்கள் வீட்டில் ஒரு பெண்ணை வச்சுண்டு ஊரெல்லாம் அலையறேனே! உங்க தங்கை இருக்கிறதை மறந்துட்டேளா?''

நறுக்கென்று ஊசி ஏற்றியது போல் இருந்தது. தன் தங்கையை மணி நினைத்துப் பார்த்ததே இல்லை. தீவிரமாய்ச் சிந்தித்து மனம் குழம்பிப்போய் வீடு திரும்பினான்.

''நம்ம ஜான்சனுக்கு ஒன்றும் சரியான வரன் கிடைக்கவில்லே.''

''படிச்ச வேலே பார்க்கிற பையன். தங்கமான குணம். அவனுக்கா பெண் அமையலே?''

''ஆமாப்பா! அதனாலே... நம்ம லட்சுமியை....''

அவர் திடுக்கிட்டார்.

''நிறுத்து. உனக்கு அறிவிருக்கா? நம்ம வீட்டுப்பெண்ணையே பேச ஆரம்பிக்கிறியா?''

''நம்மோடு வந்தவனை நாம்தானே ஆதரிக்கணும்?''

''இந்தப் பேச்சை இதோடு விட்டு விடு. பிராப்தம் இருந்தா அவன் கல்யாணம் தானே நடக்கும்.''

ஜான்சன் வாசலைக் கடந்து தன் அறைக்குப் போவதைப் பார்த்தான் மணி. அப்பா பேசினதை ஜான்சன் கேட்டிருப்பானோ!

ஜான்சன் மணியைக் கூப்பிட்டான்.

''மணி, எனக்குக் கல்யாணம் பண்றேன்னு நம்ம வீட்டுத் தங்கையையே பேச ஆரம்பிச்சுட்டியா? உன் தங்கை எனக்கும் தங்கைடா முட்டாள்! அது போகட்டும் நான் இண்டர்வ்யூவுக்குப் போன பம்பாய் வேலைக்கு இன்னைக்கு அப்பாய்ண்ட்மெண்ட் ஆர்டர் வந்து விட்டது. இங்குள்ள வேலையை ராஜிநாமா பண்ணிட்டு வந்து விட்டேன்'' என்றான்.

ஜான்சன் பம்பாய் போய்விட்டான். ஆரம்பத்தில் அவனிடமிருந்து கடிதங்கள் வந்தன. இப்போது கடிதமே இல்லை.

எதிர்பாராமல் ஒரு இன்விடேஷன் வந்தது. அந்த அழைப்பைப் பார்த்து வியப்பும் திகைப்பும் அடைந்தான் மணி.

....நாசரேத் பரிசுத்த யோவான் தேவாலயத்தில் 3–2–82 அன்று நிகழவிருக்கும் எங்கள் திருமணத்தில் தாங்கள் கலந்து சிறப்பிக்க வேண்டுகிறோம்.

ஜான்சன் ஸ்டெல்லா மேரி


பம்பாய் நாசரேத்

மனப்பூர்வமாக நமது மதத்துக்கு வந்த ஒரு பக்தனை வாழ்வு கொடுத்து அரவணைக்க நம் மதத்தில் இடமில்லாது துரத்திவிட்டதே என்ற வேதனை மணிக்கு. ஸ்டெல்லாமனம் மாறி இருக்கமாட்டாள். இவன்தான் தன் முருகபக்தியைத் துறந்திருக்கவேண்டும்!

சந்திராவுக்குப் பிரசவ சமயமாதலால் கல்யாணத்தில் மணி கலந்து கொள்ள முடியாது போய்விட்டது.

ஒரு வாரம் கழித்து ஜான்சன் ஸ்டேஷனிலிருந்து போன் செய்தான்.

''மணி, நான் அவசரமாக பம்பாய் போகிறேன். கல்யாணத்துக்கு வருவே சந்



மனைவி: ''நீங்க ஊரில் இல்லாத சமயம் வீட்டுக்காரர் சுண்ணும்பு அடிச்சதுக்கு ஏன் இவ்வளவு கவலைப்படறீங்க?''

கணவன்: ''அசடே! முக்கியமான டெலிபோன் நெம்பர், விலாசங்கள் பால் கணக்கு எல்லாம் சுவரில்தானே எழுதி வச்சிருந்தேன். -லலிதா செல்லப்பா

திக்கலாம்னு நினைச்சேன். உன்னைப் பார்க்கணும். ஸ்டேஷனுக்கு வாயேன்.''

''ஸ்டெல்லா....''

''அவளும் பம்பாய் வருகிறாள். உடனே வா. பேசலாம்.''

மணி விரைந்து ஸ்டேஷன் போய்ச் சேர்ந்தான்.

பிளாட்பாரத்தில் எதிர் பார்த்துக் கொண்டு நிற்பது...

ஜான்சன்தான்.

மணி எதிர்பார்த்ததற்கு மாறாக...

நெற்றியில் முப்பட்டையாகத் திருநீற்றுப் பூச்சு! மத்தியில் வட்டமாய்ச் சந்தனப் பொட்டு!

''ஜான்சன், நீ திருநீறு பூச ஸ்டெல்லா அனுமதித்து விட்டாளா?'' என்று வியப்போடு கேட்டான் மணி.

''இல்லே இல்லே, என் கொள்கையை நானும் என்றுமே விட்டுக் கொடுப்பதில்லே. வா. ஸ்டெல்லாவைப் பார்க்கலாம்.''

மணியை காரியேஜுக்குள் அழைத்துச் சென்றான்.

ஸ்டெல்லா! அவள் பக்கத்தில்...

பாண்ட், பாலியஸ்டர் சட்டை நவநாகரிகத் தோற்றத்தில் ஸ்டெல்லாவோடு ஒட்டி இருக்கும் அந்த வாலிபன்....

''இவர்தான் ஸ்டெல்லாவுக்கு மாலையிட்டவர். ஜான்சன்! என் பெயர்தான், என் பெரியப்பா மகன். பம்பாயில்தான் வேலை பார்க்கிறார்.'' என்று ஜான்சன் அறிமுகப் படுத்தினான்.

அனுதாபத்தோடு ஜான்சனைப் பார்த்தான் மணி. புன்சிரிப்புடன் மணியின் தோள்களைத் தட்டிக் கொடுத்துக் கொண்டிருந்தான் ஜான்சன். மணியை ஆறுதல்படுத்துகிறானா? அல்லது தன்னையே ஆறுதல் படுத்திக் கொள்கிறானா?

டயலாக்: ஆஸ்பத்திரி

அகல்



''ஏம்மா நரசம்மா... ஏழாம் வார்டு எங்கே இரும்மா?''

''ஆறுக்கு அப்பாலே... அடாடா...இந்த விசாரணைங்களுக்குப் பதில் சொல்றதுக்கே உயிர் போகுது.''

''உயிர் போகுதுன்னு அது இந்த ஆஸ்பத்திரி ராசியா இருக்கும்.''

''மிஸ்டர்... இந்த மாதிரி யெல்லாம் கமெண்ட் அடிக்க வேண்டியதில்லே.''

''சிஸ்டர், இந்த மிஸ்டர் ஒரு மாதிரி. கோவிச்சுக்காதீங்க.... டேய், பூபதி வாடா, போய் இட்லியைக் கொடுத்துட்டுப் போவலாம்.''

''ஏன்யா... நாங்கள்ளாம் எந்நேரமா 'கியூ'லே நிக்கறோம்... நேரே உள்ற போவ ஒரு துரை... இன்னாப்பா அவசரம்?''

''யோவ்... நான் உன்னை மாதிரி ஓசி மருந்து வாங்க வரலே. இங்கே வேலே பண்றவன்.''

''யாரும்மா பொம்பளே... குழந்தையைத் தூக்கி இடுப்பிலே வெச்சுக்கோ. போற வர்ற வழியிலே வுட்டுப்பிட்றியே.''

''சிஸ்டர், பெட் நம்பர் 23 டெம்பரேச்சர் பார்த்தீங்களா?''

''நார்மல்தான் ஸார்... அந்த 15ம் நம்பர் பாட்டியம்மாதான் ராத்திரி யெல்லாம் ரொம்ப அவஸ்தைப் பட்டுது. ஒரு ஸ்லீப்பிங் பில் கொடுக்கலாம்னு நினைச்சேன் ..''

''நோ நோ... ஹெட் இன்ஜூரி கேஸ் ஆச்சே... சிஸ்டர், ஹெட் இன்ஜூரி, பாய்ஸனிங் கேஸ் ஆகியவைகளுக்கு நெவர் கிவ் ஸ்லீப்பிங் பில்...''

''ஹலோ... டாக்டர் ராஜன்... என் ஃப்ரண்ட் ஒருத்தர் வர்றார்... ஸ்பெஷல் வார்டுக்கு ஏற்பாடு பண்ண முடியுமா?''

''இல்லே சார்... பொஸிஷன் ரொம்ப டைட்... மினிஸ்டர் ரெகமண்டேஷன்லே வர்றவங்களுக்கே பதில் சொல்லிச் சமாளிக்க முடியலே.''

''ஏங்க... தர்மதுரை... சேர்ந்தாப்பலே ஒரு வாரத்துக்கு மருந்து கொடுத்துடேன். இரண்டு நாளைக்கு ஒரு தபா வந்து போவ



முடியலே. வந்து போறதுக்கு பஸ் சார்ஜ் மூணு ரூபாய் ஆய்டுது.''

''பாட்டி...இந்த மருந்தெல்லாம் வெலே ஜாஸ்தி.ஒரே யடியாக் கொடுக்கக் கூடாதுன்னு சட்டம்.''

''இன்னு சட்டமோ இன்னு ரூலோ... ஏளைங்களுக்கு ஒரு பொரவோஜனமும் இல்லே!''

''வழி விடுப்பா... வழி....''

''அடப்பாவமே!... வயசுப் பிள்ளே. உசிர் இருக்குதா?'''

''ஓடற பஸ்லேருந்து ஸ்டைலா இறங்கிறாராம். பஸ்டி அடிச்சு விழுந்திருக்கார். இதற்குள்ளே பின்னாலே மிலிடிரி டிரக் வந்து ஏத்திப்புடுச்சு.''

''ஒண்ணு மட்டும் சொல்லேன். மிலிடேரி வண்டிக்காரங்க எப்பவும் அசால்டாத்தான் ஓட்டறாங்க வண்டியை....''

''யாருப்பா... கோவிந்தசாமி... டாக்டர் கூப்பிடறார். எங்கே எக்ஸ்ரே போட்டோ... அட வழியை விடுங்கப்பா... அவருக்கு.''

''டாக்டர் உடம்பு ஒரே சிக்கா இருக்குதுங்க.''

''என்ன பண்ணுது?''

''என்ன பண்ணுதுன்னு சரியாத் தெரியலே. சிக்கா இருக்கு. போன தடவை நீல மாத்திரை கொடுத்திங்க. சட்டுனு வாங்கிடுச்சு. அதே மாத்திரை கொடுங்க.''

''நான் சொல்றேன் சார்... நம்ப நாடு உருப்படாது. நான் 6 அவர்லா வெயிட் பண்ணிண்டிருக்கேன். இன்னும் டாக்டர் வந்தபாடில்லே. அமெரிக்காவிலே இப்படி லேட்டா வந்தா டிஸ்மிஸ் பண்ணிடுவாங்க.''

''நீங்க அமெரிக்காவிலே இருந்தீங்களா?''

''இல்லே.... பேப்பர்லேதான் எல்லாம் வருதே.... பொடி இருக்கா?''

''மணி அடிச்சிருச்சு. விசிட்டருங்க போங்க. பெரிய டாக்டரு ரவுண்ட்ஸ் வரப்போறார். அவர் ரொம்பக் கண்டிப்பு. அட.... ஏம்மா உனக்கு ஒரு தடவை பெஷலாச் சொல்லணுமா?''

''சரிடிம்மா ராஜம்... நான் வரேன். இவளுக்கு இப்படி கத்தறான்... டாக்டரைக் கேளு. என்னிக்கு டிஸ்சார்ஜுன்னு. அப்புறம் சார்ஜ் எவ்வளவு ஆகும்னு கேளு...''

''இதோ பாரும்மா... நாளைக்குக் கொஞ்சம் உப்பும் உரைப்புமா மெந்தியக் குழம்பு சாதம் கொண்டு வா.''

''கேட்டியாடி கதையை. பொழைக்கப் போறியான்னு வாயிலே பல்லுலே சுரமில்லாமல் நான் கிடந்து தவிச்சிண்டு இருந்தேன்.... மெந்தியக் குழம்பாம்... உடம்பு நன்னு சரியானப்பாடு எல்லாம் பண்ணிப் போடறேண்டி.''

''இந்தாங்க வடபழனி கோவில் விபூதி... எல்லா வார்டுலேயும் கொடுக்கறோம். இளைஞர் சன்மார்க்க மன்றத்தினர்.''

''சிஸ்டர்... நான் வரேன். என் ரிசீப்ட் வந்தாச்சு...''


8

இனி என்ன வேண்டிக் கிடக்கிறது இனி!

மதியம் உணவுக்கு முன் நாயுடுவும் வந்து விட்டார். அதற்கு முன் இவர்களுக்கு வந்திருப்பவர்கள் பெண் கேட்கத்தான் வந்திருக்கிறார்கள் என்பது ஊர்ஜிதமான அனுமானமாகி விட்டது. கூட வந்திருக்கிற ஜோடி 'பெண் பார்க்க' அல்லது கல்யாணத் தரகர் அம்சமாக இருக்க வேண்டும்.

விருந்து தடபுடலாகப் போனது.

அம்மாவுக்கு இது கொஞ்சம் ஆச்சரியம் தான். செய்ய வேண்டியவைகளைச் சிரத்தையோடு செய்து கொண்டிருக்கும்போதே அவள் ஒரு சந்தர்ப்பத்தில் இப்படி நினைத்துக் கொண்டாள்: அந்தக் காலத்தில் என்றால் பெண் பார்க்க வந்திருப்பவர்கள் பெண் உறுதியானால் ஒழிய வந்த வீட்டில் கை நனைக்க மாட்டார்கள். அதையொரு கேவலமாகக் கருதுவார்கள். எடுத்த எடுப்பிலேயே மாப்பிள்ளைப் பையனும் வீட்டுக்கு வர மாட்டான். ஏன், கடைசிவரை மாப்பிள்ளைப் பையன் வராத காலமும் இருந்தது. அவன் பெண்ணை எங்காவது கோயில் குளத்துக்குப் போகும்போது வைத்துப் பார்த்துக் கொண்டால்தான். பெண்ணுக்கோ அந்தச் சந்தர்ப்பம்கூடக் கிடையாது. இப்போது எல்லாம் தலை கீழாய் மாறிவிட்டது. இப்போது மாப்பிள்ளைப் பையனைப் பெண்ணே வாசலில் நின்று வரவேற்கிறாள். அன்றைக்கு ஜானகி ஏதோ ஒரு கதையில் படித்துவிட்டுச் சொன்னாளே: ஆபீஸ் வேலை பார்க்கிற ஒரு பெண் கல்யாணத் தரகரிடம், முடிஞ்சா அவரை வந்து பொண்ணு பார்க்கச் சொல்லுங்க சார், இல்லாட்டி நான் வந்து அவரை மாப்பிள்ளை பார்க்கிறேன் என்று தமாஷ் பேசுகிறாள் என்று; அந்த மாதிரிதான் காரியங்கள் நடக்கின்றன.



சாப்பாடு முடிந்து எல்லோரும் பழைய படி வந்து வெற்றிலைத் தட்டின் முன் உட்கார்ந்ததும், சரி, இனி வந்த விஷயத்தைப் பேசலாம் என்பது போல் அங்கே கொஞ்சம் மௌனம் நிலவியது.

கூட வந்திருந்த ஜோடியில் ஆண், புன்னகையுடன், ரெங்கையாவிடம், ''நீங்க தம்பியைக் கூட்டிக்கிட்டு மேலே போயிப் பேசிக்கிட்டு இருங்களேன்'' என்றார்.

புரிந்துகொண்டு அவர்கள் எழுந்ததும், ஞானியும் சுலோசனாவும் கூட மெல்ல அங்கிருந்து அகன்றார்கள்.

அவர்கள் சென்றதும் வந்தவர் சொன்னார்: ''நாங்க ஒரு சந்தோஷமான விஷயமாய்த்தான் வந்தோம். ' இவங்க பையனுக்கு ஓங்க வீட்ல பொண்ணு கேட்டு வந்திருக்கோம்.''

இதற்கு மரபுப்படியாகக் காட்ட வேண்டிய எதிர்வினையாக நாயுடு 'சந்தோஷம்' என்றார்.

இவர்கள் எந்தப் பெண்
ணைக் கேட்டு வந்திருக்
கிறார்கள் என்று கேட்க
வேண்டிய அவசியம்
இருக்கவில்லை. ஏனென்
றால், 'பையன்' ஏற்
கனவே சுலோசனா

வைத்தான் விரும்புகிறான் என்பது தெரிந்திருந்ததோடு, ஞானிக்கு ஒரு வாரம் முன்புதான் இடம் உறுதியானது என்ற விஷயமும் இதுவரை நடந்த உரையாடலில் வெளிப்பட்டிருந்தது.

''நல்லதுங்க. அப்ப நாம மத்த விஷயங்களைப் பின்னாடிப் பேசிக்கலாம். ரெண்டு பக்கத்து மன சம்மதம்தான் முக்கியம்.''

''ஜாதகம் இருக்குல்ல?''

''இருக்கு.''

கொண்டு வந்து கொடுத்ததும் தரகர் அதைப் பிரித்து லேசாகப் பார்த்தார். பின்பு, ''ராசிப் பொருத்தம் என்னாங்க, மனப் பொருத்தம் இருந்தா எல்லாப் பொருத்தமும் மாறிக்கிடும்'' என்று அதை மடித்துப் பையில் வைத்துக் கொண்டார். ''நம்ம ஜோசியர் கிட்டக் கொடுப்போம்.''

பிறகு, '''நீங்களும் பாருங்க'' என்று பையிலிருந்து வரத ராஜுலு ஜாதகத்தை எடுத்து இவர்களிடம் கொடுத்தார்.

''நீங்கள்ளாம் எப்ப மதுரைக்கு வர்றீங்க?''

''வர்றோம்.''

அன்றிலிருந்து நடக்க வேண்டிய காரியங்கள் எல்லாம் முறைப்படி போக ஆரம்பித்தன.

அவர்கள் சென்று ஜாதகம் பார்த்துப் 'பொருத்தம்' என்று எழுதினார்கள்.



இங்கே இவர்களும் அதைச் சரி பார்த்துக் கொண்டார்கள்.

அப்புறம் இவர்கள் 'மாப்பிள்ளை வீட்டைப்' பார்த்துக் கொள்ள மதுரை போய் வந்தார்கள்.

இரு தரப்புத் தரகர்களும் பேசினார்கள்.

ஆனால் தரகர்கள் அதிகம் பேசிக்கொள்ள நேரவில்லை. முதல் மாப்பிள்ளை விஷயமாக என்ன பேசப்பட்டிருக்கிறதோ அதேதான் அடுத்த பெண்கள் வரனுக்கும் என்பது சம்பிரதாயச் சட்டமாக இருப்பதால் அதில் கூட்டிக் குறைக்க ஒன்றுமில்லை. அதே ஏற்பாடுகளுக்கே இவர்கள் சம்மதம் தெரிவித்து விட்டார்கள்.

ஆனால் கடைசிக் கட்டத்தில்தான் ஒரு சிக்கல். பணச் சிக்கல். இந்தக் கல்யாணங்களின் செலவுக்காக, அம்மாவின் சீதனமாக வந்திருந்த கிராமத்தில் இருந்த இரண்டரை ஏக்கரை விற்பதாக இருந்தது. ஆனால் அந்த நிலத்தை வாங்கும் வசதி படைத்த ஒருவர், இவர்கள் விவரத்தைத் தெரிந்து கொண்டு ஒன்றுக்குப் பாதியாகத் தட்டிவிடலாம் என்று நினைத்தபோது எழுந்தது அந்தச் சிக்கல். அதை அப்படித் தூக்கி எறிகிற விலைக்குத் தந்துவிட இவர்களுக்கு மனமில்லை. இப்போதும் இருப்பதைப் புரட்டி எடுத்துச் செய்தால் ஜானகி கல்யாணத்தை முடித்துவிட முடியும். சுலோசனாவுக்குத்தான் பத்துப் பன்னிரண்டு பவுன் குறைவுபடும். இதற்காகப் போய்த் தங்கமான நிலத்தை அடிமாடு விலைக்குக் கொடுப்பதற்குப் பதிலாக இப்போது ஜானகி கல்யாணத்தை முடித்துவிட்டு ஒரு நான்கு மாதங்கள் கழித்து சுலோசனா கல்யாணத்தை வைத்துக்கொண்டால் என்னவென்று நாயனு நினைத்தார். இவர்கள் அவசரப்படவில்லையென்று தெரிந்தால் நிலத்தைக் கோருகிறவர்கள் நியாயமான விலை கேட்கலாம்.

இதை இவர்கள் சொன்னபோது அந்தத் தரப்புத் தரகர்களில் ஒருவர் கேட்டார்,

''அப்பிடி எத்தினி பவுனு செரமப்படும்?''

''அதுவும் ஒரு பத்துப் பன்னிரண்டு பவுனுனாலும் சிக்கலாவும்.''

இந்த விவரம் வரதராஜுலு வீட்டுக்குப் போனபோது அவர்கள் ஒரு பெரிய மந்திராலோசனைக்குப் பிறகு ''சரி, இப்ப என்ன, நாலு மாசந்தானே தள்ளியேநடக்கட்டுமே'' என்று சொல்லி விட்டார்கள்.

இந்த முடிவைக் கொண்டு வந்த ஆள், இவர்களைச் சிலாகிக்கும் முகமாகவும் ''அதெல்லாம் மாப்ள நாலு மாசம் என்ன, நாலு வருஷமானாலும் அந்தப் பெண்ணைத்தான் கட்றதுன்னு சொல்லிட்டாரு'' என்றான்.

இதைக் கேட்ட சுலோசனாவுக்கு மீண்டும் புத்திருந்த காதலையும் மீறிக்கொண்டு, 'ஐயே' என்று வந்தது. அந்தப் பத்துப் பவுனை வேண்டுமானால் நாலு மாசம் கழித்துத்தான் போடுங்களேன் என்று சொல்ல முடியாமல் கல்யாணத்தை நாலு மாதம் தள்ளிப் போடுகிற இவருக்குப் பெண்ணின் மேல் பெருமை வேறுக்கும்!

இதன் காரணமாகவே திருமணம் நடந்து முதல் இரவில் முதல் சொல்லாக மிகவும் அழகும் கனமுமான சொல் இருக்க வேண்டுமென்று வரதராஜுலு, இனி என்று அர்த்தம் கொடுக்கிற 'சிலகா' என்கிற தெலுங்கு வார்த்தையால் இவளை விளித்தபோது இவள் மனம் ஒரு லேசான எரிச்சலுடன், இனி என்ன வேண்டிக் கிடக்கிறது இனி, அதற்குக் கொண்டுவர வேண்டியதைக் குறைக்காமல் கொண்டு வந்து விட்ட இனியே என்றாவது சரியாக இருக்கும் என்று எண்ணியது.


வரதராஜுலுகுடும்பத்தில் ஒரு காலத்தில் இவர்களது தாய்மொழியாகத் தெலுங்கு இருந்ததன் சரித்திரச் சின்னமாக ஒன்றிரண்டு தெலுங்கு வார்த்தைகள் உண்டு. நாயனு, வதனெ, ரா, லேயி என்கிற மாதிரி. அவைகளிலே கொஞ்சம் கனமான சொல் இந்த 'சிலகா'. அதுவும் கூட நியாயமாக 'சிலுகா' என்று இருக்க வேண்டும். பேச்சு வழக்கில் அப்படியாகி யிருந்தது. இது தாய்மார்கள் மதலைகளைக் கொஞ்சுகிற காரியத்தில் நிலைத்து வந்திருந்தது. மற்றபடி தெலுங்கில் தொடர்ந்தாற்போல் நாலு வாக்கியம் பேச முடியாதபடி அங்கே அது வழக்கற்றுப் போயிருந்தது.

அடுத்த மாதம் ஜானகி கல்யாணம் முடிந்து அதை அடுத்து நான்காவது மாதத்தில் சொன்னபடியே சுலோசனா — வரதராஜுலு திருமணம் நடந்தேறியது.

திருமணத்துக்கு மறுநாள் மாலை எல்லாரும் சினிமாவுக்குப் போவதாக இருந்தது. மணி நாலு நாலரை வாக்கில் சுலோசனா தங்கள் அறையில் அலங்காரம் செய்து கொண்டிருந்தாள். நினைவு நேற்றைய இரவுக் களியில் இருந்தது.

'அது' பூரணமாக இருந்தது. அவளுக்கு ரொம்ப சந்தோஷம். அதோடு பெரிய நிம்மதியும் கூட. ஒரு பெரிய பயம் ஒழிந்து போயிருந்ததே. அவளது கடந்த காலத்தின் செயல்களும் நிகழ்வுகளும் நிகழ்கால நடவடிக்கைகளில் குறுக்கிட்டுக் குறுக்கிட்டு ஊறு செய்யுமோ என்று அவள் பயந்து போயிருந்தது இல்லை என்றாகியிருந்தது. இவன் தொடும்போது ரகு தொட்டதும், இவனது உறவின்போது ரகுவின் உறவும் வந்து முதுகில் குத்திக் காயப்படுத்துமோ

''சே... எங்க வீட்டில் டி.வி. வாங்கியதால் குழந்தைகள் கெட்டு விட்டார்கள்....''
''பரவாயில்லையே... எங்க வீட்டுக் குழந்தைகளால் டி.வி. கெட்டு விட்டது...''
-சுதா



என்று பயந்த அபத்தமெல்லாம் எவ்வளவு அரைவேக்காட்டு அறிவின் காரியங்கள்!

ஆனால் இந்த ரகு மோசக்காரன் மட்டுமில்லாது ஒரு sadistம் கூடவா? குதிரை மேலிருந்து தள்ளியதுமல்லாமல் குழியும் பறித்த கதையாக, மேலும் தன்னைத் துன்புறுத்த நினைக்கிறானா? ஒரே முடிவாக ஓர் உதறலில் உதறி முடித்தவன் இப்போது எதற்காகக் கல்யாணப் பரிசென்று ஓவியமொன்றை அனுப்பி வைத்திருக்கிறான்? அதிலும் அதனடியில் வாக்கியம் வேறு.

We cannot change events – But we can change our approach to events.

(நாம் நிகழ்ச்சிகளையே மாற்றிவிட முடியாது—ஆனால் நிகழ்ச்சிகளை நோக்கிய நமது அணுகுமுறைகளை மாற்ற முடியும்)

அந்தப் படம் தபாலில் வந்து யாரோ பிரிக்க அங்கு ஒரு கூட்டமே கூடிவிட்டது. ஆஹா, ஹஹா" என்ற பாராட்டுக்கள்.

யாரோ ஒரு பெண், 'ஆர்ட்டிஸ்ட் பேரு 'ரகு'ன்னு போட்டிருக்கு' என்றாள். இவளுக்குள்ளே ஒரு உதறிய நடுக்கம். அதோடு இவளுக்குத் தலை சுற்றிக்கொண்டு வரும்படியாக ஒரு குரல் 'கீழே என்னமோ எழுதியிருக்கே' என்று கேட்டது. நல்ல வேளையாக இந்த வாசகத்தை ஒருவன் உரக்கப் படித்தபோதுதான் இவளுக்குப் போன உயிர் திரும்பி வந்தது. இவன் ஏதாவது ஒன்று கிடக்க ஒன்றை எழுதிவைத்துத் தொலைத்திருந்தானானால்?

இப்போது வரதராஜுலுவின் அக்காள் கமலநாயகி, இது புதுமண மக்களுக்கு ஒதுக்கப்பட்ட தனி அறை என்றுகூட இல்லாது திடுதிடுவென்று உள்ளே வந்தாள்.

''எங்க, தம்பி இல்லே?''

''இல்ல வதனே''

''எங்கே போயிருக்கான்?''

''அந்த ஹைதராபாத் பொண்ணை வழியனுப்ப ஸ்டேஷனுக்குப் போயிருக்காரு.''

''ஏன் அவளுக்குப் போகத் தெரியாதா? இல்லேன்னா, இவன் யாரையும் கூட அனுப்பி வைக்க முடியாதா?''

''அது மரியாதையா இருக்குமா வதனே? நம்ம கல்யாணத்துக்குன்னு இவ்வளவு தூரம் வந்தவங்களை, சரி போங்கனு வாசல்ல இருந்தே அனுப்பிட முடியுமா?''

கமலநாயகி இதைச் சொல்லப் போகிறாளே என்று ஜாக்கிரதையோ குரலில் இறக்கமோ எதுவும் இல்லாமல் ரொம்ப சாதாரணமாக ''என்னமோ மரியாதை. அவ ஒண்ணும் மரியாதை உள்ளவளா எனக்குத் தெரியல'' என்றாள்.

கலோசனா வியப்புடன், ''ஏன் வதனே அப்பிடிச் சொல்றீங்க?'' என்று கேட்டாள்.

கமலநாயகி படுக்கையில் உட்கார்ந்தபடியே சொன்னாள்: ''அதென்னமோ சில பேத்தப் பார்த்த ஒடனேயே எனக்கு எதுனாச்சும் தோணும். அது அப்பிடியே சரியாத்தான் இருக்கும்.''

''அப்பிடியெல்லாம் ஒருத்தரைப் பத்தி ஆதாரமில்லாமக் குத்து மதிப்புப் போடலாமா—வதனே?''

''ஆமா, நீ பெரிய பாட்டி பாரு.''



''மாப்பிள்ளைக்கு ரேஸ்பைத்தியம் என்றார்கள் அது உண்மைதான்!''

''எப்படிச் சொல்கிறாய்?''

''இப்ப பாருங்க கல்யாண வீட்டார் வரப் போற நாலு குதிரை வண்டியில் எந்தக் குதிரை முன்னால்வரும் என்று பந்தயம் கட்டி இருக்கிறார்!''

-லலிதா செல்லப்பா

''நீங்க மட்டும் பாட்டியாக்கும்?''

''சொன்னாலும் சொல்லாட்டியும் இன்னும் நாலு வருஷம் போனா பாட்டிதான்.''

''அது சரி என்ன விஷயம்?''

''என்ன விஷயம்னா?''

''தம்பியைத் தேடிக்கிட்டு வந்தீங்களே!''

''ம், ஒண்ணுமில்லே, ஆமா, நேத்து கல்யாணப் பரிசா ஒரு லெஷ்மி படம் வந்துச்சே அது எங்கே?''

கலோசனாவுக்குச் சுருக்கென்றது.

''ஏன் வதனே?''

''அதை நான் எடுத்துக்கிட்டுப் போறேன். வீட்ல ஒரு லெட்சுமி படம் கூட இல்ல. நேத்தே தம்பியைக் கேட்டேன். சரி அக்கானு சொன்னான்.''

அந்தப் படம் இப்போது எங்கே இருக்கிறது? அதை நளினா எடுத்துப் போயிருந்தாள். அது பிரிக்கப்பட்டபோது கலோசனாவுக்கு ஏற்பட்ட அதிர்ச்சிக்குக் கொஞ்சமும் குறைந்ததல்ல நளினாவுக்கு ஏற்பட்ட அதிர்ச்சியும். இந்தப் படம் இப்போதில்லாவிட்டாலும் நாளாவட்டத்திலாவது பிரச்னையாகலாம் என்று அவள் பயந்தாள். யார் இந்த ரகு? அல்லது இந்தப் படத்தை அனுப்பியது என்ற கேள்வி எவ்வளவு நாட்களுக்கு எழாமல் இருக்கும்? தவிர கலோசனாவின் மனத்தில் மட்டுமல்ல, அவளைச் சுற்றிலும்கூட எங்கும் ரகுவின் தடம் எதுவும் இருக்கக் கூடாது என்பது அவள் எண்ணம். இது அவள் வீட்டில் இருப்பது இப்படியோ, அப்படியோ, அடிக்கடி அவளை நினைவுபடுத்திக் கொண்டிருக்கும். இது எதற்கு? அவள் நேற்றே கலோசனாவை இரண்டு நிமிஷம் தனியாகக் கூப்பிட்டு விஷயத்தைச் சுருக்கமாக விளக்கி, தான் அந்த ஓவியத்தை எடுத்துக் கொண்டு போய் விடுவதாகவும், தான் அதிகம் விரும்பியதால் அதைத் தன் அன்பளிப்பாகத் தோழிக்குக் கொடுத்து விட்டதாகச் சொல்லி விடும்படியும் சொன்னாள்.

இவளுக்கும் இது சரியென்றும் நிம்மதியென்றும் படவே, அந்தப் படம் நேற்று

மாலேயே நளினியோடு ரயிலேறியிருந்தது. இவன் பேசாமல் இருக்கவே, கமலநாயகி, 'என்னு?' என்று திரும்பக் கேட்டாள்.

''அது இப்ப இல்லியே வதன. ஒரு பிரண்டு கேட்டாள்னு நேத்தே கொடுத்துட்டேனே.''

கமலநாயகி திடீரென்று வெடித்துக் கொண்டு கேட்டாள். ''யாரோ பிரண்டு கேட்டானு கொடுத்திட்டியா? யாரைக் கேட்டுக்கிட்டுக் குடுத்தே?''

இது சுலோசனுவின் 'நான்'-ஐ நேரடியாக வெட்ட அது சினந்து எழுந்தது.

''யாரைக் கேட்டுக்கிட்டுக் கொடுக்கணும்?''

''எல்லாரையும்தான். இல்லேனு புருஷனாலும் கேட்டுக்கிட்டுக் கொடுக்கணும்.''

''இதுக்கு அவரு கேட்டா நான் பதில் சொல்லிக்கிறேன்.''

அவ்வளவுதான். கமலநாயகி விருட்டென வெளியேறி மூட்டை முடிச்சுகளைக் கட்ட ஆரம்பித்து விட்டாள்.

''இனிமே இங்கே இருந்தா அவ்வளவுதான். மானம் போயிடும். இன்னிக்கே அவனையும் என்னையும் பிரிச்சுட்டா. நீ யாரு கேக்கறதுக்குன்னு கேட்டுட்டா!''

வீடே அவளைத் தாங்கு தாங்கென்று தாங்கியது. ஊகூம். அது எப்படித்தான் வந்ததோ அம்மாவுக்கும் மகளுக்கும் கண்ணீர் தாரை தாரையாக வழிந்தது.

வரதராஜுலு ரயில் நிலையத்திலிருந்து திரும்பியதும் முழு நிலைமையையும் புரிந்து கொண்டு. இப்போதைய நிலையில் சரியோ, தப்போ இவளைத்தான் கொஞ்சம் கண்டித்து வைக்க வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டான். இல்லாவிட்டால் ஒரே நாளில் பெண்டாட்டிதாசன் பட்டம் வந்துவிடுமே?

''யூ ஆர் ராங் சுலோசனு. திருமணப் பரிசா வந்ததை எப்படி இன்னொருத்திக்குக் கொடுத்தே?''

''அவ ஆசைப்பட்டா.''

''அவ எப்படி இன்னொருத்திக்கு வந்த பரிசுப் பொருளுக்கு ஆசைப்பட்டா?''

இவன் இப்படி அக்காள் பக்கம் சரிவான் என்று எதிர்பார்க்காததால் சுலோசனு வந்த எரிச்சலில் சரிக்குச் சரி அடித்தாள்.

''ஒங்க அக்கா ஆசைப்பட்ட மாதிரி தான்.''

''அப்ப அவளும் இவளும் ஒண்ணு'' என்று குறுக்கிட்டாள் வரதராஜுலுவின் அம்மா.

''ஏன் இப்படிக் கம்பேர் பண்றீங்க? ஒவ்வொருத்தருக்கும் ஒரு முக்கியத்துவம் இருக்கு. ஒரு கோணத்துல அவ எனக்கு ஒரு அக்கா மாதிரிதான்.''

'ஓகோ' என்று உறுமினான் வரதராஜுலு. பின்பு ஆங்கிலத்தில் சொன்னான்: ''எப்படி இருந்தாலும் திருமணப் பரிசாக வந்துவிட்ட பிறகு அது நம் இருவருக்கும் சொந்தம். நீ என்னுடைய அனுமதியைப் பெற்றிருக்க வேண்டும்.''

''அப்படியா? அப்படியானால் நீங்கள் என்னுடைய அனுமதியைப் பெற்றுத்தானா உங்கள் சகோதரிக்குக் கொடுப்பதாகச் சொன்னீர்கள்?'' — இவளும் ஆங்கிலத்திலேயே கேட்டாள்.

வரதராஜுலு பார்த்தான். வாதத்திலோ தன் கட்சி பலமிழந்து நின்றது. வேறு வழியில்லை. ''யூ சட் அப்.''

''இது ஒரு போலீஸ் ஆபீசரின் குரல். அதட்டல்.''

''ஊரில் அதட்டுகிறவன் எல்லாம் போலீஸ்காரனல்ல.''

'அது சரி' என்று தனக்குள் சொல்லிக் கொண்டாள் சுலோசனு. போலீஸ் தோன்றி என்ன, மிஞ்சிப்போனால் ஆயிரம் வருஷம் இருக்குமா? புருஷன் அந்த அநாதி காலத்திலேயே தோன்றிய அவதாரமாயிற்றே! இது புருஷனின் குரல்!

அன்றிரவு வரதராஜுலு தனியறையில் மீண்டும் இவளை 'ஸிலகா' என்று விளித்த போது இவள் வந்த கோபத்தையும் எரிச்சலையும் குரலில் காட்டாமல் ஆனால் அவைகளை வார்த்தைகளின் மேல் ரொம்ப நாகரிகமாக ஏற்றி நிதானமாகச் சொன்னாள்: ''வெல். 'ஸிலகா' ரொம்பப் பொருத்தமான வார்த்தைதான். நான் மட்டுமில்லே. எல்லாப் பெண்களுமே கிளி தான். ஆண்களுக்குத் தேவைப்படுறப்பக் கொஞ்சிக்கலாம். வேலை இருக்கறப்போ வீடுங்கிற கூண்டுலே போட்டு அழகாத் தொங்க விட்டு display பண்ணலாம். சோத்தப் போட்டு நாதா நாதான்னு பேச வைக்கலாம். பறந்து போயிடாம அப்பப்ப, 'யூ சட் அப்' சொல்லி, இல்லேன்னு ரெண்டு அறைச்சுவிட்டு, ரெக்கையைக் கொஞ்சம் கொஞ்சம் கத்தரிக்க விட்டுக்கலாம். இல்லியா?''

(தொடரும்)

புதிய

கோல்கேட் ஃப்ளோரிகார்ட் டூத்பேஸ்ட்



குழந்தைகளுடைய பற்களின் மென்மையான எனாமல் எளிதில் துவாரங்களுக்கும் சிதைவுக்கும் உள்ளாகிறது. பெரியவர்களுக்கும் பற்சிதைவுக்கு எதிராக பாதுகாப்பு தேவை.

புதிய ஃப்ளோரிகார்ட் டூத் பேஸ்ட் பல் துவாரங்களுக்கும், பற்சிதைவுக்கும் எதிராக உங்கள் குடும்பத்திற்கு நிச்சயமான பாதுகாப்பைத் தருகிறது. துவாரங்களையும், பற்சிதைவையும் உண்டாக்கும் வாய் அமிலங்களுக்கு எதிராகப் பற்களை உறுதிப்படுத்துவதற்கென பல் எனாமலுடன் இணைந்து செயல்படும் விசேஷ கோல்கேட் எம்.எஃப்.பி ஃப்ளோரைட் அதில் உள்ளது.

கோல்கேட் ஃப்ளோரிகார்ட் புல்லரிக்கும் புதுச்சுவை கொண்டது. உங்கள் குடும்பத்திற்கு இன்றே வாங்குவீர்.

MFP FLUORIDE

உலகெங்கும் உள்ள ஆராய்ச்சிசாலைகளில் சோதிக்கப்பட்டுள்ள எம்.எஃப்.பி ஃப்ளோரைட் துவாரங்களுக்கும், சிதைவுக்கும் எதிராகப் பற்களை உறுதிப்படுத்துகிறது என்பது மருத்துவ ரீதியாக நிரூபணமாகியுள்ளது. கோல்கேட்டின் நீண்ட ஆராய்ச்சி மற்றும் இந்த தனிப்பட்ட எம்.எஃப்.பி ஃப்ளோரைடை உங்களுக்கு வழங்க முடிகிறது.



ஃப்ளோரிகார்டில் உள்ள எம்

எஃப்பி ஃப்ளோரைட் எனாமலுடன் இணைந்து துவாரங்களுக்கும், சிதைவுக்கும் எதிராக உங்கள் பற்களை உறுதிப்படுத்துகிறது.

தமிழ்நாடு, கேரள மாநிலங்களிலும், கர்நாடகத்தில் குறிப்பிட்ட சில மார்க்கெட்டுகளிலும் இப்போது கிடைக்கும்.

CFT.G.3 TM


நினைவெல்லாம் நித்யா 8
கதை: அபர்ணா நாயுடு
மாலினி! உண்மையாவே நான் யாருன்னு உனக்குப் புரியலையா?
சார்... அது... அது... என் பேரு உங்களுக்குத் தெரிஞ்சிருக்கு... உங்க குரல்... அது எங்கேயோ கேட்ட மாதிரி, பழக்கப்பட்ட மாதிரி இருக்கு...
மாலினி! நான் குறிப்பா உன்னைத் தேடி வந்ததுக்குக் காரணமே, எனக்கு நம்பிக்கையான ஒருத்தரோட உதவி தேவை. அதனாலே தான். எனக்கு உதவி செய்வியா?
நீங்க யாருங்கறதே குழப்பமா இருக்கு. அந்த நிலைமையிலே...
நீ தயங்கறது நியாயம் தான். எனக்காக வேண்டாம். உன்னோட க்ளோஸ் ஃப்ரண்டு நித்யாவுக்காக இதைச் செய்வியா?
கடவுளே! நித்யாவுக்கு என்ன ஆச்சு? அவ இப்போ எங்கே? சொல்லுங்க.. நீங்க யாரா இருந்தாலும் சரி, அவளுக்காக எது வேணாலும் செய்யறேன். ம்... சொல்லுங்க...
இது ரொம்ப ஜாக்கிரதையாச் செய்ய வேண்டிய காரியம். ரகசியமாவும் இருக்கணும். இன்னும் சொல்லப் போனா... கொஞ்சம் ஆபத்தான சமாசாரமும் கூட...


அது எப்படி இருந்தாலும் சரி. அவளுக்கு உதவுற விஷயத்திலே நான் எந்த லிமிட்டுக்கும் போகத் தயார்!
நிச்சயம் தானே? ... சரி, மனசைத் திடப்படுத்திக்கோ. ரெடியா... ஷி இஸ் நோ மோர்...
நோ... நோ... நோ... நான் நம்ப மாட்டேன். நீங்க பொய் சொல்றீங்க. என்னை ஏமாத்தி வேற எதுக்கோ பயன்படுத்தப் பார்க்கறீங்க. நான் நம்பவே மாட்டேன்...
நான் யாருன்னு தெரிஞ்சதுன்னு நீ நம்பிடுவே, மாலினி! உன்னை நம்பி உண்மையைச் சொல்லிடறேன். உதவுறதா — வேண்டாமான்னு முடிவு செய்யறது உன் விருப்பம் போல...
ரமேஷ்! நீங்களா?
ஆமாம். நானே தான்.
சொல்லுங்க ரமேஷ்... இதெல்லாம் என்ன?
அதுக்கு முன்னாடி ஒரு விஷயம்... கொஞ்ச நேரமாவே, ஒரு கார் நம்மை ஃபாலோ பண்ணிக் கிட்டு வருது. போலீஸா? இல்லே...
தொடரும்

அதிர்ஷ்டத்தின் நிறமும் சிவப்புதான்!

தூடாகம் பஸ் ஸ்டாண்ட்.

காலை எட்டு மணி.

வந்து நின்ற ஒவ்வொரு டவுன் பஸ்ஸிலும் பாய்ந்து ஏறினான் அந்தச் சிறுவன். வயது பத்திலிருந்து பன்னிரண்டுக்குள் இருக்கலாம். சற்றுச் சோனியான உடம்பு. பெரிய சைஸ் விழிகள். அழுக்கேறிய வெள்ளைச் சட்டை. நைந்துபோன காக்கி டிராயர். போனஸாய்ச் சில கிழிசல்கள்: கையில் பல மாநில லாட்டரி வண்ணச் சீட்டுக்கள்.

"லட்சங்களை லட்சியத்தோடு வழங்குகின்ற மாநிலம் அண்ணா இது! இன்னிக்குக் காலைல பத்து மணிக்குக் குலுக்கல் அண்ணா... இன்னும் ரெண்டே மணி நேரத்தில் நீங்கள் லட்சாதிபதியாகக் கூடிய வாய்ப்பு... விழுந்தால் உங்க வீட்டுக்கு. விழாவிட்டால் நம் நாட்டுக்கு...."

பையன் கணீரென்ற குரலில் கத்திக் கொண்டே பயணிகளிடம் லாட்டரிச் சீட்டுகளை நீட்டுகிறான். லாட்டரி சீட்டின் கைராசி ஏஜண்ட் காதர் பாட்சா சொல்லிக்கொடுத்த வசனங்களை அட்சரம் பிசகாமல் சொல்லிக் கொண்டே சில அப்பாவி கிராம வாசிகளின் தலையில் சீட்டைக் கட்டினான் அந்தச் சிறுவன், பத்து மணி வரையிலும்.

லாட்டரிச் சீட்டுக்களை எண்ணிப் பார்த்தார் ஏஜண்டு காதர் பாட்சா. முகம் மாறினார்.

"என்னடா ஒரு சீட்டுக் குறையுது கோணாவிலே...!"

"சரியாத்தான் இருக்கு ஸார்."

"எங்கடா சரியா இருக்கு? மூணு தபா எண்ணிட்டேன். கேரளாவில ஒரு சீட்டுக் குறையுது. திருட்டுத்தனமா வித்துட்டியா?

காதர் பாட்சாவின் விழிகள் சிவப்பேறின.

"ஸார்... ஸார்... அப்படியெல்லாம் நான் திருட்டுத்தனமா வித்துக் காசு எடுத்துக்க மாட்டேன் ஸார்...."

பையன் விழிகளில் கண்ணீர் வழிந்தது.

"அப்போ ஒரு சீட்டை எங்கியாச்சும் கோட்டை விட்டிருப்பே... ராஸ்கல்!" என்று அவனே எதிர்பார்க்காத ஒரு நேரத்தில் பிடரியில் பளீரென்று வைத்தான்.

"அம்மா....ஆ!"

"திருட்டு ராஸ்கல். சீட்டைத் திருடி வித்துட்டுப் பாசாங்குத்தனமா பண்ணறே? இனிமே உனக்குச் சீட்டுத் தரமாட்டேன். எங்கியாச்சும் போய்ப் பிச்சை எடு! அப்பத்தான் உனக்குப் புத்தி வரும்! இந்தா உன்னுடைய கமிஷன் காசு. இருபது சீட்டு வித்திருக்கே. ரெண்டு ரூபாவரும். தொலைச்ச சீட்டோட விலை ஒரு ரூபா போனா மிச்சம் ஒரு ரூபா! இந்தா எடுத்துட்டு ஓடு..." காதர் பாட்சா ஒரு ரூபாய் நோட்டை அவன் முகத்தின் மேல் விசிறி அடித்தான்.

"ஸார்!"

"மேலே ஏதாச்சும் பேசினே ஒதைச்சுக் கொன்னுடுவேன்.... போடா!"

பையன் பணத்தை எடுத்துக் கொண்டு விசும்பிக் கொண்டே போனான்.

"என்னடா ஒரு ரூபாயைக் கொண்டாந்து தர்றே?"

அம்மாக்காரி அதட்டலாகக் கேட்க—

பையனின் அழுகை அதிகமாகியது. "அம்மா சீட்டு ஒன்னை எப்படியோ தொலைச்சிட்டேனம்மா. முதலாளி காசைப் புடிச்சுகிட்டு மீதிக் கமிஷன் கொடுத்தார்."

"அட! கட்டையில போறவனே! இன்னிக்குச் சாப்பாட்டிலே மண்ணைப் போட்டுட்டியேடா... ஒடம்புல ஜாக்கிரதைத்தனம் வேண்டாம்?"

பையனின் முன்னுச்சி மயிரை எட்டிப் பிடித்தாள் அம்மாக்காரி.

"பளீர்!"

"அம்மா....அம்மா....ஆ... அடிக்காதேம்மா." — பையன் அலறித் துடித்தான்.

பொன்னம்மா பையனை விட்டாள். "உங்கப்பன் செத்தொழிஞ்ச மாதிரி நீயும் செத்தொழிடா! என்னை யாரும் காப்பாத்த-வேணாம். நாலு வீடு ஏறி இறங்கினா ஒரு கவளம் சோறு கிடைக்காமலா போயிடும்? போடா... நீயும் போ...."

ஆங்காரமாய்க் கத்தினாள்.

பையன் சில விநாடிகள் வரை அவளையே பார்த்தான்.

பிறகு— விருட்டென்று எதிர்த் திசையை நோக்கி நடக்க ஆரம்பித்தான்.

திரும்பவும் குடிசைக்குள் நுழைந்தாள் பொன்னம்மா. பையனை அடித்ததில் கையெல்லாம் எரிந்தது.

உள்ளே நுழைந்தவளின் பார்வையில் — அந்தப் பழைய டிரெங்க் பெட்டிக்கும் மண் சுவருக்கும் இடையில் இருந்த இடுக்கில் காற்றில் படபடத்த லாட்டரிச் சீட்டு பட்டது. அவள் குனிந்து எடுத்தாள்.

"அடப் பாவிப் புள்ளே! சீட்டு இங்கியே விட்டுட்டுப் போயிருக்கு." காலையில் பையன் பழையதைச்சாப்பிட்டுக் கொண்டிருக்கையில் கையிலிருந்த லாட்டிரிச் சீட்டுக்களை ட்ரெங்க் பெட்டியின் மேல்வைத்திருந்தது அவளுடைய ஞாபகத்துக்கு வந்தது.

லாட்டரிச் சீட்டை எடுத்துக் கொண்டு வெளியே வந்தாள். இந்தச் சீட்டை காதர் பாட்சாவிடம் கொடுத்து ஒரு ரூபாயைவாங்கிக்கொள்ளலாம்.

குடிசையைப் பூட்டிக் கொண்டு கையில் லாட்டரிச் சீட்டோடு நடை போட்டவளை எதிரே வந்த பாலதண்டாயுதபாணி கோயில் அர்ச்சகர் கையில் பேப்பரோடு மறித்தார்

''என்ன பொன்னம்மா... கையில லாட்டரிச் சீட்டை வெச்சுக்கிட்டு வேகமாப் போறே?''

பொன்னம்மாள் நின்றாள். அவரிடம் விஷயத்தைச் சொன்னாள்.

''ஆமா...கையில என்ன லாட்டரிச்சீட்டு? கொண்டா பார்க்கலாம்.''அர்ச்சகர் கையை நீட்ட, பொன்னம்மா சீட்டைக் கொடுத்தாள்.

''அட! கேரளா ஸ்டேட் லாட்டரி! இன்னைக்குத்தான் ரிஸல்டு! கொஞ்சம் இரு பொன்னம்மா!உன் சீட்டுக்கு ஏதாச்சும் பரிசு விழுந்திருக்கான்னு பார்த்துட்டு அப்புறம் ஏஜண்ட் கிட்டே தரலாம்...''

அர்ச்சகர் பேப்பரை விரித்து வைத்துக் கொண்டு....

பரிசு விழுந்த எண்ணையும் லாட்டரிச்சீட்டு எண்ணையும் ஒப்பிட்டுப் பார்த்தார்.

ஒப்பிட்டவர் சரேலென உடம்பில் மின்சாரம் பாய்ந்தாற்போல் அதிர்ந்தார். கண்களை இடுக்கிக் கொண்டு பார்த்தார்.

சந்தேகமில்லை. பேப்பரிலும் ஏ.ஜே. 759976 கையிலிருந்த லாட்டரிச் சீட்டிலும் அதே ஏ.ஜே. 759976.

''பொன்னம்மா!''''உன் கையிலிருந்த சீட்டுக்கு ஒரு லட்சம் ரூபாய் விழுந்திருக்கு...''

''சாமி!'' மகிழ்ச்சியால் குழம்பினாள் பொன்னம்மா.

''வழியில யார்கிட்டயும் எதையும் இப்போதைக்குச் சொல்லாதே. பேசாமே என் கூட வா! முதல்லே இந்தச் சீட்டை பாங்க்ல டெபாசிட் பண்ணிடலாம்... எனக்குத் தெரிஞ்ச பாங்க் மானேஜர் வீடு—பக்கத்தில் தான். வா, போகலாம்.''

''சா....சா....சாமி! நி...நி... நிஜம் மாவா!'' — மகிழ்ச்சியால் பொன்னம்மா வாய் குழறினாள்.

அர்ச்சகர் பதற்றப்பட்டார். ''உம் வா. அந்த முருகன்தான் கையில பேப்பரோட என்னை உன்கிட்ட அனுப்பிச்சு வெச்சிருக்கான்.''

நகர்ந்தாள்.

எதிரே—

பொன்னம்மாள் பக்கத்துக் குடிசைக்காரி செல்லா முகத்தில் வியர்வை வழியத் தலைவிரி கோலமாய் ஓடி வந்தாள்.

''பொன்னம்மா... ஆ! மோசம்போயிட்டியே பொன்னம்மா...! நான் என்னத்தைச் சொல்லுவேன்... நீ கோபத்திலே பேசின பேச்சு பொறுக்காம ஒம் புள்ளை கூட்ஸ் ரயிலுக்குத் தலையைக் குடுத்திட்டானும்.... நம்ம ஆட்டோ டிரைவரு நாயக்கரு பார்த்துட்டு வந்து சொல்றாண்டி...''

திகைத்துப் போன பொன்னம்மாவின் கையிலிருந்த அந்த லாட்டரிச் சீட்டு அவளையுமறியாமல் நழுவிக் கீழே விழுந்தது!



“தலைமுறை தலைமுறையாக
மக்கள் பயன்படுத்திவரும்
இந்திய மருந்துகளின்
சக்தியே தனி...

அவற்றுள்
தனிச்சிறப்பு
வாய்ந்தது
அமிர்தாஞ்சன்.”



தலைமுறை தலைமுறையாக மக்கள் நம்பிக்கையோடு பயன்படுத்திவரும் அமிர்தாஞ்சன் பத்து மருந்துப்பொருள்கள் அடங்கியது. இவை பத்தும் இயற்கையின் அற்புதமான சக்திவாய்ந்த மருந்துகள். அதனுல்தான் அமிர்தர்ஞ்சன் ஒரு சக்திமிக்க வலி நிவாரணியாக விளங்குகிறது.

இதன் பயனுக தலைவலி, ஜலதோஷம், உடல்வலி, சுளுக்கு இவை எல்லாவற்றுக்குமே அமிர்தாஞ்சன் விரைவாக நிச்சயமாக நிவாரணம் அளிக்கிறது. அமிர்தாஞ்சன் உபயோகிப்பதால் ஆபத்து இல்லை. இதனுல் வேறு தீய விளைவுகள் எதுவும் ஏற்படாது.

அமிர்தாஞ்சன் — 80 ஆண்டுகளுக்கும் மேலாகப் பல குடும்பங்களில் பயன் பட்டுவரும் நம்பகமான மருந்து.




அமிர்தாஞ்சன்

தலைவலி. ஜலதோஷம். உடல்வலி. சுளுக்கு — அனைத்தையும் போக்க அருமையான மருந்து.

AM-2148

கணவன்: "எங்க ஆபீஸ் மானேஜருக்கு ஹார்ட் அட்டாக்காம்."
மனைவி: "சுத்தப் புளுகு!"
கணவன்: "எப்படி அவ்வளவு தீர்மானமாய்ச் சொல்லறே!"
மனைவி: "அவருக்குத்தான் இதயமே இல்லேன்னு பலதடவை நீங்க சொல்லி இருக்கீங்களே!" - லலிதா செல்லப்பா



புதுப்படிமத்தைப் பழசாக்குகிறார்கள்

நின்றுகொண்டிருக்கிற அர்த்தநாரீஸ்வரர் சிலைகளைத்தான் பெரும்பாலும் பார்க்க முடியும். அண்மையில் ராஜாஜி ஹாலில் 'பூம்புகார்' நிறுவனம் நடத்திய படிமக் கண்காட்சியில் காலைத் தூக்கி நின்று ஆடிய கோலத்தில் ஓர் அர்த்தநாரியைக் கண்டது வித்தியாசமாக இருந்தது.

காளிங்க நர்த்தனம், மீனாட்சி திருக் கல்யாணம், வல்லப கணபதி, சிவதாண்டவக் கோலங்கள் என்று ஏராளமான அற்புதச் சிலை வடிவங்கள் பூம்புகார் கலைக் கூடங்களிலேயே தயாரானவை என்று அறிந்தபோது பிரமிப்பாகவே இருந்தது.

இந்தக் கண்காட்சியில் பத்து ரூபாய் முதல் முப்பதாயிரம் ரூபாய் வரை வெண்கலச் சிலைகள் விற்பனைக்காகக் கொலுவிருந்தன. எண்பதாயிரம் ரூபாய் மதிப்பில் நடராஜர் சிலை ஒன்றும் காட்சிக்கு வருகிறது என்று சொன்னார்கள். (520 கிலோ எடை).

இவ்வளவு விலை கொடுத்துச் சென்னையில் யார் வாங்குகிறார்கள் என்று யோசித்த வேளையில், 'ஏன், என்னை வாங்கிவிட்டார்களே' என்று அறிவித்துக் கொண்டிருந்தார் வல்லப கணபதி. இருபத்திரண்டாயிரம் ரூபாய்க்கு இவரை வாங்கியது பாபு கிருஷ்ணசுவாமி.

சுவாமி மலை, சேலம் மையங்களில் படிமக் கலை பயிலும் நாற்பது மாணவர்களுக்கு அரசு உபகாரச் சம்பளம் தந்து, சில்ப சாஸ்திரத்தில் மூன்று ஆண்டுகள் பயிற்சி தருகிறது. கிரந்தம் உட்படப் பழைய மொழியறிவுடன் சிற்ப வடிவமைப்புக்கான அடிப்படை அறிவும் ஊட்டப்படுகிறது.

இந்த வண்ணமாக்கலை அழிந்துவிடாமல் காப்பதில் பூம்புகார் அக்கறை காட்டுகிறது என்கிறார்கள். பழைமையான கோவில் படிமங்களை நகலெடுத்த மாதிரி தயாராகியுள்ள இந்த வெண்கலப் படிமங்களின் அணி வகுப்பு மெய்சிலிர்ப்பு.

பழைமை மெருகோடிய சிலைகளுக்கு நடுவே அங்கொன்றும் இங்கொன்றுமாய்ப் புது மெருகு குலையாத படிமங்கள். எல்லாமே 'பூம்புகார்' தயாரிப்புகள்தான். புத்தம் புதுச் சிலைகளுக்கு ரசாயனப் பூச்சு, மூலிகைப் பூச்சு, இண்டியன் இங்க் பூச்சு... என்னவெல்லாமோ செய்து 'ஆண்டிக் லுக்' தருகிறார்கள். பளபளப்புச் சிலைகளை விடப் 'பழமை' மெருகேறிய சிலைகள் கூடுதல் விலை போகிறதாம். ஹவாய், யு. எஸ். ஜெர்மனி இங்கெல்லாம் நல்ல மார்க்கெட் பெற்றவை பூம்புகார் படிமங்கள்.


அரங்கில் காட்சிக்கு நின்றிருந்த சுமார் 2300 விக்கிரகங்களின் மதிப்பு முப்பது லட்ச ரூபாய் என்றார்கள். ஐந்து நாள் கண்காட்சியில் ஐந்து லட்சத்துக்குக் குறையாமல் இந்தக் கலைப் பொருட்கள் விற்பனையாகும் என்று எதிர்பார்க்கிறார்கள். முதல் நாள் விற்பனையே ஒரு லட்சத்தைத் தாண்டிவிட்டது.

— சுப்ர பாலன்





The fragrance of choice coconuts in every drop.
Yendelux
coconut oil
என்டீலக்ஸ்
தேங்காய் எண்ணை
15, 4 கிலோ டின்களிலும் 1 கிலோ 500, 200 கிராம் பாலிதீன் பாட்டில்களிலும் கிடைக்கிறது.
மு. மு. நாகலிங்க நாடார் சன்ஸ்
உரிமையாளர்கள் :
ஸ்ரீ நாகலிங்க விலாஸ் ஆயில் மில்ஸ்
கொல்லம்—கோனா
போன் : ஆபீஸ் : 2244, 4484, மில்ஸ் : 2266, 4611
Trade Enquiries Solicited from wholesale dealers only



ஊருக்குத்தான் உபதேசமா?

● 'திருச்செந்தூரில் சில அசுரர்கள்' என்ற கே. டி. கோசல்ராம் பேட்டியைக் கல்கியில் படித்துவிட்டுத் தினசரிப் பேப்பரைப்புரட்டினால் பாங்கு அதிகாரியை அதே திருச்செந்தூரில் கே. டி. கோசல்ராம் தாக்கியதாகச் செய்தி வந்திருக்கிறது. ஊருக்குத்தான் உபதேசமா?

திருவனந்தபுரம் எஸ். எஸ். மணி

● 14–2–82 அன்று திருச்செந்தூரில் கனரா வங்கிக் கிளை மானேஜர் திரு சுப்பிரமணியம் அவர்கள், திருச்செந்தூர் நாடாளுமன்ற உறுப்பினர் திரு கே.டி. கோசல்ராம் அவர்களால் தாக்கப்பட்டார். பாராளுமன்ற உறுப்பினரின் இத்தகைய முறையற்ற செயலைக் கண்டிக்கிறோம்.

திருநெல்வேலி ப. கல்யாணி சுந்தரம் (பொதுச் செயலாளர், திருநெல்வேலி மாவட்ட வங்கி ஊழியர் சங்கம்)

● 'அந்தரங்கம் புரிவதில்லை' என் மனத்தினை மிகவும் உருக்கி விட்டது. அது கதையல்ல; காவியம்! ராஜாராமனுக்கு என் ஆழ்ந்த அனுதாபங்கள், அனுராதா ரமணனுக்கு என் பாராட்டுக்கள்.

மேலக்கட்டளை ஆர். ஜெயராமன்

● உறுதி செய்யப்பட்ட மாப்பிள்ளையிடம் தன் மனத்தைப் பறிகொடுத்து — அகால மரணத்தால் மாற்றான் ஒருவனுக்கு மனைவியாகிய சியாமளாவின் அடி மனத்தில் எழும் எண்ண அலைகளைப் பேரிரைச்சலுடன் என் இதயத்தில் மோத விட்டு விட்டார் அனுராதா ரமணன்.

மதுரை-1 பி. எல். பரமசிவம்

● 'திருச்செந்தூரில் சில அசுரர்கள்' படித்தேன். போலீசாரின் செயல்கள் வெட்கத்துக்குரியதாக இருக்கிறது. பீகாரில் கைதிகளின் கண்ணைத் தோண்டிய போலீசார்களை நம்மவர்கள் 'மிஞ்சி' விடுவதற்கு வழி விடாமல், தமிழக அரசு சம்பந்தப்பட்டவர்களின் மீது நடவடிக்கை எடுப்பதுதான் நல்லது.

பெங்களூர்-21 பாபு குமார்

● விருந்தோம்பலில் நீங்கள் தலைசிறந்தவர் தான். சோழவரம் கார் ரேஸில் கலந்து கொண்ட அயல் நாட்டவர்களைப் பற்றிய பேட்டி ரொம்ப ஜோர்!

சென்னை-5 கீழாம்பூர் சங்கரசுப்பிரமணியன்

● தெற்கே வாங் டூர் போகும் போது நமக்கு ரைட் ஹாண்ட் கைடாக, தொடர்ந்து வெளிவரும் 'திருத்தலம் கண்டேன்'' கட்டுரைப் பகுதிகள் உதவி புரியும் என்பது நிச்சயம்.

வியாசர்நகர் திருமதி நாராயண ராவ்

● 'சாதாரண மனிதன்' தொடருக்கு அசாதாரண மனிதர்கள் வாய்த்தது எங்கள் அதிர்ஷ்டம். இவ்வார 'மாருதி'யின் படம் ஸுபர்ப்! லக்ஷ்மியின் உருக்கமான எழுத்துக்களில் மனம் கிடந்து அடித்துக்கொள்கிறது. பேனாவும், தூரிகையும் போட்டி போட்டுக் கொண்டு மனத்தைக் கவர்கின்றன.

ஸ்ரீரங்கம் ரோஹிணி ஸ்ரீனிவாசன்

● கல்கி என்ன சினிமாப் பத்திரிகையாக மாறப் போகிறதா? நாலு பக்கங்களை சினிமாவுக்காக ஒதுக்கியிருக்கிறீர்களே!

தக்கலை உ. சங்கரசுப்பு

● ''அஞ்சலியின் அதிசய சாதனை!'' என்ற தலைப்பில் 14–2–82 தேதிய கல்கியில் வெளிவந்த அட்டைப் படக் கட்டுரையில் சென்னைப் பல்கலைக் கழக பி. ஏ. தேர்வில் நான்கு தங்கப் பதக்கங்களைக் கடந்த முப்பதாண்டுகளில் யாரும் பெறவில்லை என்று குறிப்பிடப்பட்டிருப்பது சரியல்ல. என் இளைய சகோதரர் திரு பி. எஸ். சுந்தரம் (தற்பொழுது டெல்லியில் உயர்மட்ட ஐ.ஏ.எஸ். அதிகாரியாக மத்திய அரசாங்கப் பிரிவில் பணியாற்றி வருகிறார்) 1964ம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழக பி. ஏ. தேர்வில் மூன்று பிரிவுகளிலும் மாகாணத்தில் முதன்மையாகத் தேறியதுடன் நான்கு தங்கப் பதக்கங்களுடன் சேர்ந்து ஐந்து பரிசுகளைப் பெற்றார்.

வேலூர் பி.எஸ். சுப்பிரமணியன்



✖ ஏ. வி. எம். சரவணன்



✖ வள்ளியப்பா



✖ காணிக்கராஜ்



✖ அரங்க சீனிவாசன்



● ஏ. வி. எம். சரவணன் படத் தயாரிப்பாளர் மட்டுமல்ல: சிறந்த நிர்வாக ஆசிரியருங்கூட என்பதை நிரூபித்துக் கொண்டிருக்கிறார். இவர் ஆசிரியர் பொறுப்பேற்று அண்மையில் வெளிவந்துள்ள ஆங்கிலப் புத்தகம் ஏ.வி.எம். நிறுவன வெளியீடான Guide to South India.

ஒவ்வோர் ஊரிலும் பார்க்க வேண்டிய கோயில்கள்; காட்சிகள், தங்குவதற்கான ஓட்டல்கள், ஒவ்வோர் இடத்துக்கும் உள்ள தூரம் பயண வசதி, கிடைக்கும் பொருட்கள் ஷாப்பிங் சென்டர் போன்ற சகல விவரங்களையும் தருகிறது. அற்புதமாக அச்சான பல வண்ணப் படங்களை உள்ளடக்கியது. தமிழ் நாட்டைப் பற்றியே நிறையவும், மற்ற தென்னிந்திய மாநிலங்களைக் குறித்துக் குறைவாகவும் விஷயங்கள் கொடுத்திருக்கிறார்களோ என்று தோன்றுகிறது.

'புடவை கட்டிக் கொள்வது எப்படி?' என்பதைப் படத்துடன் விளக்கியதோடல்லாமல் 'எனக்கு டாக்ஸி தேவை' போன்ற அவசியமான வாக்கியங்களைத் தென்னிந்திய மொழிகளில் எவ்விதம் சொல்வது என்பதையும் தெரிவித்துள்ளார்கள்!

தயாரிப்புக்கு உதவியவர்கள்: எழுத்தாளர் சோமலெ, ஓவியர் உகி.

அயல் நாட்டு டூரிஸ்டுகள் மட்டுமல்ல, நமது பண்பாடு, விவசாயம், மதங்கள், திருவிழாக்கள், இசை, நடனம், சிற்பம்,ஓவியம் போன்ற கலைகள் பற்றி யெல்லாம் நாமே தெரிந்துகொள்ள வேண்டியது எவ்வளவோ இருக்கிறதென்பதை நூலைப் படிக்கும் எவரும் உணரலாம். விலை குறிப்பிடப்படவில்லை. விலை மதிப்பிட முடியாத சிறந்த தயாரிப்பு என்பதாலோ?

கிடைக்குமிடம்: வடபழனி அச்சகம், சென்னை-26.

- தமயந்தி

● வள்ளியப்பாவின் 'மலரும் உள்ளம்' நூலுக்கு மத்திய அரசின் அங்கீகாரமும், பரிசும் கிடைத்தபோது ராஜாஜி வள்ளியப்பாவுக்கு எழுதினார்:

''பெரிய இடத்துப் பாராட்டு கிடைத்ததில் வியப்பும் மகிழ்ச்சியும்!''

மகிழ்ச்சி சரி, வியப்பு எதற்கு?

வள்ளியப்பா நேரில் சென்று, 'கடிதம் கிடைத்தது. எல்லாம் தங்கள் ஆசி' என்று வணங்கியபோது ராஜாஜியே விளக்கினார்:

கிடைக்க வேண்டியதற்குப் பெரிய இடத்தின் (மத்திய அரசின்) பாராட்டுக் கிடைத்தது வியப்பு!

ராஜாஜியின் வாழ்த்து பெற்றுவிட்ட வள்ளியப்பாவுக்கு வாழ்க்கையில் வேறு ஏதும் தேவையில்லைதான். ஆனாலும் கிடைத்திருக்கிறது, மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தின் விருது: ''தமிழ்ப் பேரவைச்செம்மல்''.

- குட்டி கிருஷ்ணன்

● ஊட்டியில் வசிக்கும் யாரைக் கேட்டாலும் சரியாகச் சொல்வார்கள், டாக்டர் காணிக்கராஜின் முகவரியை. ஏகப்பட்ட பொதுநல சேவை ஸ்தாபனங்களிலும், ராணுவ வீரர்களின் வாரியத்திலும் முக்கிய பொறுப்புகள் வகிக்கும் டாக்டர் காணிக்கராஜுக்கு மற்றொரு பெயர் ''நிபந்தனை மனிதன்''. ஆம்! அவரை எந்தக் கூட்டத்தில் பேச அழைத்தாலும் நிபந்தனைகள் உண்டு. துண்டுகளும் மாலைகளும் போடக் கூடாது. இத்தனை குழந்தைகளுக்குச் சீருடை வாங்கித்தர வேண்டும். சில விதவைகளுக்கு தையல் மிஷின் வாங்கித்தரவேண்டும். இப்படிப் பல நிபந்தனைகள் உள்ளன. இதன் மூலம் ஏராளமான மக்களுக்கு நல்லது செய்து பிரசித்தமாகி இருக்கிறார் இந்த டாக்டர். இவரின் இன்னொரு சாதனை: ஹோமியோபதி மருந்துகள் தயாரிப்பதற்கான மூலிகைப் பண்ணையை நீலகிரியில் ஏற்படுத்தியது.

—இல்லப்பா

படம்: **ஜெய்மோகன்**

● பாரதீய வித்யாபவன் தொடங்கிய ராஜாஜி நூற்றாண்டு நினைவுப் பரிசு ரூபாய் பத்தாயிரம் முதன் முதலில் அரங்க சீனிவாசன் எழுதிய ''மனித தெய்வம் காந்தி காதை'' என்ற பெருங் காப்பியத்துக்குக் கிடைத்துள்ளது.

- டி. சாந்தகுமாரி

8

பழையாறை நகரம் திருவிழாக் கோலம் பூண்டிருந்தது. வீட்டு வாசல்களை மாவிலைத் தோரணங்களும் தென்னங் குருத்துக்களும் அலங்கரித்தன. பெரிதாகக் கோலம் போட்டுப் பெண்கள் செம்மண் இட்டு மகிழ்ந்தனர். வீதிகளெங்கும் புலிக் கொடியும் சிம்மக் கொடியும் அருகருகே பட்டொளி வீசிப் பறந்தன. எங்கு நோக்கினும் மக்கள் புத்தாடை புனைந்து காட்சி தந்தனர். பெண்கள் தங்களை அலங்கரித்துக் கொள்வதில் தங்களது முழு ஆற்றலையும் காட்டினர். பல்லக்குகளும் தேர்களும் ஒரே இடத்தை நோக்கிச் சென்றன. பாதசாரிகளும் தாம்பூலம் தரித்துச் சிவந்த வாயால் சுவாரஸ்யமாகப் பேசியபடி அதே திசையில் நடந்தனர். அவர்களிடையே அடிக்கடி எழுந்த சிரிப்பொலி அளவற்ற உற்சாகத்தை உணர்த்துவதாக இருந்தது.


மகிழ்ச்சிக்குக் காரணம் என்னவென்றால் இளவல் விஜயாலயனும் பல்லவ மாதண்ட நாயகர் பாராசிரயனும் ஒரு நாட்டிய அரங்கையும் ஓர் ஆதுர சாலையையும் திறந்து வைக்கப் போகிறார்கள் என்பதுதான். விஜயாலயனின் திட்டம் சோழ தேச மக்களிடையே பெரும் வரவேற்பையும் ஆதரவையும் பெற்றிருந்தது. தங்கள் தேக ஆரோக்கியத்துக்கும், மன ஆரோக்கியத்துக்கும் உதவுகின்ற எந்தத் திட்டம்தான் மக்களின் ஆமோதிப்பைப் பெறாது?

பழையாறையில் ஓர் ஆதுர சாலையையும் ஓர் அரங்கையும் இளவலும் மாதண்ட நாயகரும் திறந்து வைக்க, அதே சமயத்தில் நாடெங்கும் பலப்பல அரங்குகளும் ஆதுர சாலைகளும் அந்தந்தக் கிராம அல்லது நகரத் தலைவர்களால் தொடங்கி வைக்கப்படவிருந்தன. ஆடற்கலை வல்லுனர்களும் மருத்துவ நிபுணர்களும் அவற்றை நிர்வகிக்க நியமிக்கப்பட்டிருந்தனர்.

நாட்டிய நாடக அரங்குகள் வீராதி வீரர்களான பண்டைய சோழ சக்கரவர்த்திகளின் பெயர்களைப் பெற்றிருந்தன. ஆதுர சாலைகளோ பல்லவ சக்கரவர்த்திகளின் பெயராலும் மாதண்ட நாயகர் பெயராலும் இயங்கின. நிருபதுங்கன் ஆதுரசாலை, பாராசிரயன் ஆதுரசாலை என்பன தவிர காஞ்சி ஆதுரசாலை, மல்லை ஆதுர சாலை என்றெல்லாம் பல்லவ நகரங்களின் பெயர்களையும் தாங்கி நின்றன.

இதனையெல்லாம் மிகவும் மகிழ்ந்த பாராசிரயன், இளவல் விஜயாலயனின் ஆற்றலை மட்டுமின்றி, பல்லவ சக்கரவர்த்தியிடம் அவனுக்கிருந்த விசுவாசத்தையும் மதிப்பையும் திறப்பு விழாவின்போது வாயார, மனமாரப் புகழ்ந்து பேசினார். இடி முழக்கம் போன்ற குரலில் அவர் உரையாற்றி முடிக்கவும் குழுமியிருந்த ஆயிரக் கணக்கான மக்கள் ''ரவிகுல திலகன் வாழ்க! வாழ்க!'' என்று ஆரவாரம் செய்ததுடன் நில்லாது, ''பல்லவ சக்கரவர்த்தி, வாழ்க!'' என்றும், ''பாராசிரயர், வாழ்க!'' என்றும் முழங்கித் தங்கள் ஆனந்தத்தை வெளியிட்டனர்.

பல்லவ மன்னர் பெயராலும் மாதண்ட நாயகர் பெயராலும் காஞ்சி மல்லை போன்ற நகரங்களின் பெயராலும் உருவாகியிருந்த ஆதுரசாலைகளில் உடலுக்கு மட்டுமல்ல உள்ளத்துக்கும் வைத்தியம் நடக்க இருந்தது என்பதையும், தேகத்தை வாட்டிய நோயை மட்டுமின்றி உள்ளத்தை நலியச் செய்த அடிமைத்தனம் எனும் நோய்க்கும் அங்கே ஔடதம் வழங்கப்பட இருந்தது என்பதையும் அறிந்திருந்தால் அவ்வளவு ஆர்வத்துடன் பாராசிரயன் ஓர் ஆதுரசாலையைத்



ரவிகுல திலகன்

செம்பியன்

தாமே துவக்கி வைக்க இசைந்திருக்க மாட்டார்!

ஒவ்வொரு ஆதுரசாலையிலும் ஒவ்வொரு நடன அரங்கிலும் பிரதம நிர்வாகப் பொறுப்பை ஏற்றிருந்த நபர் விஜயாலயன் அல்லது குவளையின் பூரண நம்பிக்கைக்குப் பாத்திரமானவராக இருந்தார். இவர்கள் அங்கு வருகின்ற மக்களிடம் மிகச் சாதுர்யமாகப் பேசிப் பார்த்து அவர்கள் ஆற்றலையும், தேசப் பற்றையும் எடை போட்டுத் தகுதியானவர்களைத் தேர்ந்தெடுத்து சுதந்திர உணர்ச்சியை ஊட்டினார்கள். ரகசியம் காப்பதாக அவர்களிடம் சத்தியப் பிரமாணம் பெற்றுக் கொண்டார்கள். பிறகு அவர்களைக் கானகத்தில் குவளையும் அவளைச் சேர்ந்தவர்களும் வாழ்ந்து வந்த பகுதிக்கு அனுப்பி வைத்தார்கள். அவர்களுக்கு வழி காட்டி அழைத்துப் போகச் சிலர் நியமிக்கப்பட்டார்கள்.

தனது நான்கு படை வீடுகளிலிருந்தும் மிகச் சிறந்த வீரர்களைத் தேர்ந்தெடுத்துக் கானகத்துக்கு அனுப்பினான் விஜயாலயன். இவர்கள் சோழ நாட்டின் சிறப்புக்காக எந்தத் தியாகத்துக்கும் துணிந்தவர்கள். மன்னரின் ஆணையைச் சிரமேற் கொண்டவர்கள். அதை நிறைவேற்ற முடியாது



ஆன்றோர் வாக்கு...



நாம் சாப்பிடும் பொருள்களைப் பகவானுக்கு அர்ப்பணம் செய்துவிட்டு எடுத்துக் கொள்ள வேண்டும். ஏனென்றால் இயற்கையின் சக்தியில்லாமல் நாம் அவைகளைப் பெற முடியாது. நாம் அவ்வாறு செய்யாமல் அவைகளைச் சாப்பிட்டால் அவைகளை நாம் திருடியவர்கள் ஆவோம். முன்பெல்லாம் கோவிலில் மணி அடித்த பிறகுதான் — கோயிலில் பூஜை ஆன பிறகுதான் — வீட்டில் சாப்பிடுவது என்று வழக்கத்தைப் பலர் வைத்துக் கொண்டிருந்தார்கள். நாம் இயற்கையின் உதவி இல்லாமல் ஒரு மழையைப் பெய்விக்க முடியுமா? ஒரு பருத்திக் கொட்டையையோ ஒரு வாழை இலையையோ கூட நாம் செய்ய முடியாது. ஆகவே நாம் சாப்பிடும் பொருள்களை அப்பேர்ப்பட்ட சக்திக்கு நிவேதனம் செய்துவிட்டுச் சாப்பிட வேண்டும்.

—ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சந்திர சேகரேந்திர சரஸ்வதி சங்கராசாரிய சுவாமிகள்

உலகத்தில் உள்ள நாகரிகங்கள் எல்லாவற்றிலும் நம்முடைய நாகரிகம் அதிக சக்தியுடையது. இது மற்றெந்த நாகரிகத்தையும் விழுங்கி ஜீரணித்துக் கொள்ளும் திறன் வாய்ந்தது. ஆதலால் ஐரோப்பிய நாகரிகத்தின் கலப்பிலிருந்து ஹிந்து தர்மம் தன் உண்மை இயல்பு மாறாதிருப்பது மட்டுமேயன்றி முன்னைக் காட்டிலும் அதிக சக்தியும் ஒளியும் பெற்று விளங்குகிறது. இந்த விஷயத்தை நம்முடைய மாதர்கள் நன்றாக உணர்ந்து கொண்டாலன்றி இவர்களுடைய ஸ்வதர்ம ரக்ஷணம் நன்கு நடைபெறாது.

பாரதியார்

இந்த வாழ்க்கையில் வேதாந்த அறிவுப் போக்கிலேயும் தமிழ் மறை என்ற அன்புப் போக்கிலேயும் கலந்து குலாவுவதைக் காண்கிறோம். ஸ்ரீ வைணவர்களை உபய வேதாந்திகள் என்று கூறுவதுண்டு. வேதாந்தமாகிய உயிர் ஒன்று: அதற்கு உடல் இரண்டு— வடமொழி மறையும் தமிழ் மறையும். இது வைஷ்ணவர் கொள்கை. ராமானுஜ சித்தாந்தம்.

—பி. ஸ்ரீ.

போனால் சிரத்தையே கொடுப்பதாய்ச் சபதமெடுத்த வேளக்காரப் படைத்தலைவர்கள். அதுவரை பாட்டும் கூத்தும் மட்டுமே ஒலித்த காட்டில் இப்போது வீரர்களின் வாள்களும், வேல்களும் 'டணல், டணல்' என்று ஒன்றோடொன்று மோதும் ஒலிகளும், ''வெற்றி வேல்! வீர வேல்!'' என்ற முழக்கங்களும் முரசுகளின் ''தம்தம்'' என்ற அதிரும் ஓசையும் எழுந்தன. ஒரு பக்கம் வாள் வீச்சு, இன்னொரு பக்கம் வேலெறிதல், மற்றொரு திக்கில் மல் யுத்தம், வேறு ஒரு திசையில் உடல் பயிற்சிகள். இங்கே குறி பார்த்து அம்பு எய்வதில் வல்லவர்கள், அங்கே குத்துவாளை வீசுவதில் தேர்ந்தவர்கள்! மான்கள் மிரண்டு துள்ளின; குரங்குகள் கலவரமடைந்து கிளைக்குக் கிளை தாவின; ஓநாய்கள் ஊளையிட்டு ஒதுங்கின. சிறுத்தைகள் உறுமிச் சீறியபடியே இடம் பெயர்ந்தன.

கானகத்தின் அமைதி குலைந்தாலும் எவ்வித இடையூறுமின்றிப் பயிற்சி முகாம் செயல்பட்டது. பத்துப் பதினைந்து தினங்கள் சென்ற பின் அங்கே சில யானைகளும் குதிரைகளும் வந்து சேர்ந்தன. அவற்றின் மீதிருந்தபடியே போர் புரிவதில் பயிற்சி தொடர்ந்தது.

பகுதி பகுதியாக வீரர்கள் வருவதும் பயிற்சிக் காலம் முடிந்ததும் நாடு திரும்புவதும் வேறு ஒரு கூட்டம் காட்டுக்கு வருவதுமாக இருந்தபோதிலும் அவர்கள் வருவதும் தெரியவில்லை, போவதும் தெரியவில்லை. அப்படியொரு கட்டுப்பாடு, அமைதி!

வாள் பிடிக்கச் சக்தியற்று இருந்தாலும் மன உறுதி கொண்டிருந்த பல ஆண்களும், பூவுடலாய் இருந்தாலும் உள்ளத்தில் வைரம் பாய்ந்த மரமாயிருந்த சில பாவையரும் மருத்துவத்தில் பயிற்சி பெற்றனர். போர்க்களத்திலேயே முதலுதவி அளிப்பது தவிர வைத்தியர்களின் முகாமுக்குக் காயமுற்றோரைத் தூக்கி வருதல், அங்கே விரிவான சிகிச்சை தருதல் போன்றவற்றையும் மருத்துவரிடம் கற்றுக் கொண்டனர்.

நெஞ்சிலே தைத்த அம்பை வெளியே எடுக்க ரண சிகிச்சை, விஷம் தோய்ந்த ஈட்டி முனை குத்தினால் அதற்கு விஷ முறிவு போன்றவையும் போதிக்கப்பட்டன.

ஆதுரசாலைகளும் நாடக அரங்குகளும் இறந்து சில காலம் வரை விஜயாலயனுக்கும் குவளைக்கும் நிரம்ப வேலைகள் இருந்தன. ஒருவரையொருவர் அடிக்கடி சந்திக்கக் கூட முடியவில்லை. ஆனால் வெளித் தோற்ற நாடகங்கள், அந்தரங்க நடவடிக்கைகள் எல்லாமே ஒரு நடைமுறைப் பழக்கத்துக்கு வந்த பிறகு அவர்களுக்குத் தங்களைப் பற்றியே எண்ணிப் பார்த்துக் கொள்ள ஓரளவு அவகாசம் இருந்தது. 'அடுத்ததாக என்ன செய்ய வேண்டும்?' என்று யோசிக்கவும் வேண்டியிருந்தது.

பாம்பு கடித்து நீலம் பரவி வந்த ஓர் இளம் பெண்ணுக்குக் குவளையும் பிரதம


லக்மே அறிமுகப்படைப்பு: பரதநாட்டின் முதன்முதல்:
புரதச்சத்துக் கண்டிஷனர் அடங்கிய ஷாம்பூ.
அழுக்குத் தூய்மையளிக்கும், உமது கூந்தலின் குறைதிருத்தும் பளபள புதுவளக் கட்டமைப்பைப் பண்படுத்தும்.
பியூட்டி & எக்
60 மிலி & 120 மிலி
Lakmé
SHAMPOO & CONDITIONER
Beauty
Lakmé
SHAMPOO & CONDITIONER
Egg
Lakmé
மயிரிழைகளைத் தூக்கித் துவண்டு போக வைக்கும் சாதா ஷாம்பூக்கள் இனி எதற்கு ? உமது கூந்தலைப் பண்படுத்த இதோ விஞ்ஞான முறைப்படி வளமூட்டிய லக்மே விசேஷ ஷாம்பூ.
வாடி ஒடித்த மயிரிழைக்கு உயிரூட்டும் புரதச் சத்து, லக்மே ஷாம்பூவிலுள்ள கண்டிஷனர். இது மயிரிழைகளின் குறை திருத்துகிறது.
சரிவிகிதப் பொருத்த முடைய அதன் உள்ள மைப்பு கேச நலம்
ஓங்கவைத்திடும் :
ஷாம்பூவின் காரப்பங்கும் அமிலப் பங்கும் சரிக்குச்சரி பொருந்தியிருப் பது (pH சரிவிகிதநிலை) ஒரு சிறப்பாகும்.
இயல்பான சரிவிகித குணநிறைவு பெற்ற ஷாம்பூ:
சாதா ஷாம்பூக்கள் பெரும்பாலும் காரகுணம் மிகுந்தவை. ஆதலால் மயிரிழை பிளந்து வாடிவிடும். மாறாக அதிக காரம், அதிக அமிலம் இல்லாத நல்லுசித நிலையில் உள்ளது லக்மே ஷாம்பூ. எனவே கூந்தலுக்கு அதிக வலிமை, நெகிழ்வுத்தன்மை...சிக்கல் விழாக சீர்நிலை. நீடித்த நறுமணம். இனியும் உமக்கேன் சிகைச் சேதம்? உபயோகிப்பீர் வேறொதவருமல் லக்மே ஷாம்பூ.
daCunha/L-Sham./127/T.

வைத்தியரும் சிகிச்சை அளிப்பதைப் பார்த்துக் கொண்டிருந்தான் விஜயாலயன். தீப்பிழம்பிலே கூரிய கத்தியைக் காட்டித் தூய்மைப்படுத்தி அதனால் பாம்பின் பற்கள் பதிந்த இடத்தை வெட்டி ரத்தம் பெருகச் செய்தார் வைத்தியர். விஷம் முறிய மூலிகைச் சாற்றை வாய்க்குள் பலவந்தமாய் ஊட்டினாள் குவளை. ரணத்தில் பச்சிலைகளை வைத்துக் கட்டுப் போட்டாள். புதிய ரத்தம் ஊற, பின்னால் மருந்து கொடுக்கலாம் என்றாள். கைகளைக் கழுவித் துடைத்துக் கொண்டு, விஜயாலயனை நோக்கி வந்தாள்.

அவள் நெற்றியில் அரும்பியிருந்த வியர்வையைத் தன் மேல் உத்தரீயத்தால் ஒற்றி எடுத்தான் விஜயாலயன். "குவளை! இப்படி முடிவின்றி உழைத்துக் கொண்டே இருந்தால்...? ஓய்வு வேண்டாமா?" என்று கேட்டான், ஆதுரசாலையின் பின்கட்டில் அவர்கள் தனித்திருக்கையில்.

"உங்கள் கனவுகள் நினைவாகும்வரை எனக்கெதற்கு ஓய்வு?"

"களைத்துப் போகிறாயே?"

"ஆதரவான இந்த ஒரு கேள்வி போதுமே; களைப்பு இருந்த இடம் தெரியாமல் ஓடி விட்டதே!"

"குவளை! நாம் சாவகாசமாகச் சந்தித்துப் பேசி எத்தனை காலமாயிற்று?"

"சாவகாசம் சோம்பேறிகளுக்கு! பேச்சு, செயல் திறன் அற்றவர்களுக்கு! காலத்தைக் கணக்கிடவே எனக்கு நேரமில்லையே!"

அவன் பொறுமை இழந்தான். "குவளை! நான் என்ன சொன்னால் நாம் தனியே சந்தித்துச் சல்லாபிக்கச் சம்மதிப்பாய்?" என்று கேட்டான்.

"சுற்றி வளைக்காமல், 'குவளை நாம் தனியே சந்தித்துச் சல்லாபிக்க வேண்டும்' என்று சொன்னால் சம்மதிப்பேன்" என்றாள் அவள். விஜயாலயன் சிரிக்க, அவள் புன்னகை அவனைப் பித்தாக்கியது.

"சுற்றித்தான் வளைப்பேன்" என்று நெருங்கினான்! "இது அந்தப்புரமல்ல; ஆதுரசாலை!" என்று ஒதுங்கினாள் அவள்.

"இன்றிரவு உன்னை அரண்மனைக்கு அழைத்து வர சிவிகை அனுப்புகிறேன்" என்ற விஜயாலயன், பதிலுக்குக் காத்திராமல், தனது மேற்பார்வைப் பணியை முடித்துவிட்டது போல நடந்து, ஆதுரசாலையின் வாசலை அடைந்து, பரவி மீது தாவி ஏறினான். அது மின்னலெனப் பாயவும் ஒரே ஒரு முறை திரும்பிக் குவளையை நோக்கித் தன் ஆர்வத்தை வெளியிட்டான். ஒரு நெடுமூச்சுடன் தன் பணிகளைத் தொடர உள்ளே திரும்பினாள் குவளை.

அன்று இரவு அவள் மருத்துவ மனையின் நெடி போக மணக்கமணக்க வாசனைப்பொடிகளை உடலெங்கும் தடவிக் குளித்தாள். இப்போது அவள் தோலினாலான ஆடைகளை அணிவதில்லை. பருத்தி ஆடைகள்தாம். ஆனால் இப்போது இந்த அரிய சந்தர்ப்பத்துக்கு அவள் பட்டாடை உடுத்தத் தீர்மானித்தாள். முதன் முதலாக அரண்மனைக்குள் புகும் வேளையில் தான் ஓர் அரசகுமாரி போலவே இருக்க வேண்டும் என்று எண்ணினாள். அதற்கு வசதியாக விஜயாலயனும் அவளுக்குப் பரிசுகளைக் கொட்டிக் குவித்திருந்தான். ஆசையாக அவன் பொன் விழைகள் ஓடிய மஞ்சள் நிறப் பட்டை எடுத்துக் கச்சணிந்தாள். பின்னர் அதே நிறத்தில் பட்டுச் சேலையும் உடுத்தாள். அகில் புகையால் கேசத்துக்கு மணமூட்டி அதனைச் சிங்காரக் கொண்டையிட்டு மலர்களாலும் ஆபரணங்களாலும் அலங்கரித்தாள். கழுத்திலே முத்து மாலைகளும் கரங்களிலே பொன்னாலான வங்கிகளும் கங்கணங்களும் தரித்தாள். கால்களில் மெலிதாக ஒலி எழுப்பும் சிலம்புகளைப் பூண்டாள். கண்களுக்கு மைதீட்டினாள். பாதங்களில் செம்பஞ்சுக் குழம்பினால் கோலமிட்டாள். காதுகளை வைரத் தோடுகளும் குண்டலங்களும் அலங்கரித்தன. நெற்றித் திலகமும் அதன் கீழே பிறை வடிவில் செஞ்சாந்தும் இட்டாள். மேகலாபரணத்தை இடையைச் சுற்றி அணிந்தபோதுதான் அவளுக்கு அந்தக் கருத்துத் தோன்றி நாணச் சிரிப்பையும் உருவாக்கியது. 'இத்தனை யோசித்து யோசித்துச் சிரமப்பட்டு ஒரு பெண் ஆடை அணிமணிகளால் தன்னை அலங்கரித்துக் கொள்வது எதற்காக? காதலனால் அத்தனையும் களைந்து கலைக்கப்படுவதற்காக!' இப்படி எண்ணிய போது சிரிப்புடன் சிலிர்ப்பும் கொஞ்சம் பயமும் கூட அவளுக்கு ஏற்பட்டது.

விளக்கு ஏற்றி நீண்ட நேரமாகிவிட்டது. சந்திரன் உச்சிக்கு வந்து விட்ட நடுநிசி பொழுது. அவள் தங்கியிருந்த இல்லத்தின் வாசல் பக்கம் குதிரைக் குளம்படிச் சத்தம் கேட்க, சாளரத்தின் வழியே பார்த்தாள். குதிரையில் ஆரோகணித்து வந்திருந்த சீனன் அருகே ஒரு பல்லக்கு. அதைச் சுமந்த நால்வர். தனக்குத் துணையிருந்த ஒரு மூதாட்டியை எழுப்பி வாசல் கதவைத் தாளிட்டுக் கொள்ளச் சொல்லிவிட்டு, தரையில் இறக்கி வைத்திருந்த பல்லக்கில் ஏறி அமர்ந்தாள். அந்தக் கணமே அதன் வசதிகளையும், செல்வச் செழிப்பையும் உணர்ந்தாள். ஒரு பல்லக்கிலேயே இத்தனை சௌகரியங்கள் என்றால் அந்தப்புரத்தில் ஓர் அரச



குமாரி எத்தகைய சுகபோகங்களை அனுபவிக்க இயலும்! இலவம் பஞ்சு மெத்தை மேல் பட்டு விரித்திருந்தது. அதன் மேல் அமர்ந்து சாய்ந்தபோது பஞ்சணைகள் முதுகுக்கு அணைப்பாக இருந்தன. மலர்ச் சரங்கள் நாலாபுறமும் தொங்கி இனிய மணம் பரப்பின. பல்லக்கின் சுவர்களெல்லாமும் உட்புறம் மிருதுவாக இருந்தன. ஆடி அசையும்போது உடல் பட்டாலும் பட்டது தெரியாத மென்மை. பல்லக்கின் நுழைவாயிலை மறைக்க விரும்பினுல் அதற்கான திரைச்சீலைகள்! இத்தனையையும் ரசித்தபடி, இந்தப் புதிய அனுபவங்களில் கிறங்கியவாறு இருந்த அவளுக்கு அரண்மனையை வெகு சீக்கிரத்தில் அடைந்து விட்டது போலிருந்தது. பல்லக்கு இறக்கப்பட்டது.

வெளியேறி வந்து நின்ற அவளுக்குப் பெரிய ஏமாற்றம்! சோழ மாளிகையா இது? அதன் புறப் பகுதியில் ஒரு குதிரை லாயமல்லவா! சீனன் அவளைத் தன் பின்னே வருமாறு சைகை காட்டிவிட்டு நடந்தான். அவளுக்குச் சற்றே தயக்கமாக இருந்தது. ஆனல் 'சீனனை அனுப்புகிறேன். உன்னை அழைத்து வர' என்று விஜயாலயன் தன்னிடமே கூறியிருந்ததால் இவனை நம்பலாம் என்று தன்னைத் தேற்றிக் கொண்டு தொடர்ந்தாள். தனது குதிரையின் கடிவாளத்தைப் பற்றி நடத்திச் சென்ற சீனன், அது அடைக்கப்பட வேண்டிய பகுதியை நெருங்கியதும் உள்ளே தரையில் மேடிட்டுப் பரவிக்கிடந்த புல்லைக் கரங்களால் திரட்டிச் சேகரித்து இழுத்து அப்பால் போட்டான். தரையோடு தரையாக இருந்த ஒரு கதவைத் திறந்தான். உள்ளே இறங்கிச் செல்லுமாறு சைகை காட்டினன். சுவரில் செருகப்பட்டிருந்த ஒரு தீப்பந்தத்தை எடுத்து அவள் கரத்தில் தந்தான். என்னதான் அஞ்சா நெஞ்சத்தினளென்றாலும் அவளுக்கு இப்போது இதயம் திக் திக்கென்று அடித்துக் கொள்ளத்தான் செய்தது. அரண்மனை வாசலில் காத்திருந்து காதலன் அழைத்துப் போவார் என்று எதிர்பார்த்திருந்ததற்கும் இங்கு நடப்பதற்கும் எவ்வளவு வித்தியாசம்!

ஆனாலும் சற்று யோசித்தால் உடனே விடை கிடைத்தது. தங்களிடையே உள்ள அந்தரங்க உறவை இன்னும் சில காலம் ரகசியமாகவே வைத்திருக்க விஜயாலயன் முடிவு செய்ததில் என்ன தவறு? அதற்கு அவசியமும் இருக்கிறதல்லவா? இவ்வாறு எண்ணி அவள் துணிந்து அந்தச் சுரங்கப் பாதையுள் இறங்கினள். முதலில் குறுகலான கிணற்றுக்குள் இறங்குவது போல் இருந்தாலும் பிறகு ஆளுயரச் சுரங்கப்பாதை தெரிந்தது. நடப்பது சிரமமாக இல்லை. மறுபடி ஒரு குறுகலான படிக்கட்டு. ஒரு கதவு. தொட்டாள். திறந்துகொண்டது. அப்பால் விஜயாலயன்!

மன்மத சொரூபனை விஜயாலயன்! 'இந்த எழிலரசனையா அந்த அகம்பாவம் பிடித்த அசடு நிராகரித்தாள்!'— முதலில் ஏற்பட்ட எண்ணம். 'நான் எவ்வளவு பாக்கியசாலி!' அடுத்ததாக ஓர் நினைவோட்டம்.

அவனும் சற்று முன்தான் நீராடி முடித்து புத்தாடை புனைந்திருந்தான் என்பது தெரிந்தது. பொன் இழைக் கரையுடன் வெண் பட்டை இடைக்குக் கீழே தரித்திருந்தான். அகன்று பரந்த மார்பிலே சிவந்த பட்டாடையும் அதன் மேல் நவரத்தினுபரணங்களும் பளபளத்தன. அவனது தலைப்பாகை அவன் முகத்தின் சுந்தரமான பகுதிகளை மட்டுமே வெளிக் காண்பித்துக்கொண்டிருந்ததால் முறுக்கி விடப்பட்ட மீசையின் கீழே தவழ்ந்த ஆனந்தப் புன்னகை அவளை அள்ளிக் கொண்டு எங்கோ சஞ்சரிக்கத் தொடங்கியது. வலது கண்ணைச் சதுரமாய் மறைத்த கருநிறப் பட்டுக்கூட அவனுடைய ஆண்மையை ஏதோ ஒரு விதத்தில் அதிகரித்துக் காட்டவே உதவியது. நெடிதுயர்ந்த தோற்றமும் திரண்டு திண்ணென்றிருந்த புஜங்களும் உயர்ந்த தோள்களும் அவளைக் கவர்ந்து முழுமையாகக் கவனத்தை ஈர்த்துக்கொள்ளும் ஆளுமையுடன் விளங்கின. அந்தக் கரங்கள் இப்போது நீண்டு அவள் கடைசிப் படியேறி மேலே வர உதவின. அவன் சுரங்கப் பாதை விளிம்பிலே நின்றதால் அவனும் கை கொடுத்துத் தூக்கி விடப்பட்டவளுக்கு நிற்க மிக மிகச் சிறி

டாக்டருக்கு மருந்து!

''வாயு உபத்திரவம் கொஞ்சம் இருக்கிறது என்ன செய்யலாம்?'' என்று ரங்கா நர்ஸிங் ஹோம் டாக்டர் வேங்கடராமனைக் கேட்டார் பத்மா சுப்பிரமணியம்.

''எனக்குக்கூடத்தான் காஸ் டிரபிள் இருக்கிறது'' என்றார் டாக்டர், ஒரு சின்ன விஷயத்தைப் பெரிதுபடுத்த விரும்பாதவராக.

மறு நாள் டாக்டருக்கு ஒரு பிரிஸ்கிருப்ஷன் வந்தது பத்மா சுப்பிரமணியத்திடமிருந்து:

இந்து காந்த கஷாயம்
5 ml with 8 ml Warm water
தந்வந்த்ர மாத்திரை 1 twice daily
பொடி செய்து சாப்பிடவும்.

பத்மா சுப்பிரமணியம்
19–1–82

''மருந்துச் சீட்டில் இருப்பதைச் சாப்பிட்டீர்களா? குணம் தெரிந்ததா?'' என்று டாக்டரை வினவினுல்,

''ஓ! யெஸ்!'' என்கிருர்!

-குட்டி கிருஷ்ணன்

தனவே இடம் இருந்தது. அதைச் சாக்கிட்டுச் செயல்படுவது போல அவன் அவன் மீது சாய்ந்தாள். சாய்ந்தவள், அவன் அப்பால் சற்று நகர்ந்து இடம் ஏற்படுத்தித் தந்த பிறகும் தன் நிலையிலிருந்து மாறவில்லை. அதற்குப் பதில் அவள் கரங்கள் அசாதாரணத் துணிவோடு அவன் புறங்களை ஸ்பரிசித்தபடி மேலேறித் தோள்களிலே மாலையாகத் தொங்கின. அவன் பரந்த மார்பிலே ஆபரணங்கள் மறைக்காத இடங்களைத் தேடிப் பிடித்து அங்கே மாற்றி மாற்றித் தன் கன்னங்களை ஒற்றி எடுத்து ஓர் அவசரத்தைப் புலப்படுத்தினாள். அது அவனுக்கு மட்டுமல்ல, அவளுக்கே கூட வியப்பாயிருந்தது. இத்தனை காலம் காத்திருந்ததால் ஏற்பட்ட பரபரப்பா, வரும் வழியெல்லாம் பல்லக்கின் சாளரத்தின் வழியே சந்திரனைப் பார்த்தவாறே அமர்ந்திருந்ததில் ஏற்பட்ட மோக மயக்கமா? அல்லது அவனது கம்பீரமேதான் அவளைக் கட்டுப்பாடு இழக்கச் செய்ததா?

''சற்றுப் பேசுவோம்'' என்றான்.

''அவசியமென்ன?'' என்றாள் பொறுமை இன்றி.

''பாராசிரயன் நம்மை எவ்வளவு தூரம் புரிந்து கொண்டிருக்கிறான் என்று எண்ணுகிறாய்?''

''அவனுக்கு ஒன்றும் தெரியாது'' என்று கூறியபடியே அவன் கன்னத்தை வருடினாள்.

''பாராசிரயனை எனது ஒற்றர் தலைவன் ஆகவமல்லன் பல்லவ மாளிகையில் சென்று சந்தித்திருக்கிறான்.''


''சந்திக்கட்டுமே? ஆகவமல்லனுக்கு மட்டும் நமது உள் நோக்கங்கள் என்ன தெரிந்திருக்கப் போகிறது?'' என்று கேட்டபடியே அவனுடைய இரு கரங்களையும் தூக்க முடியாமல் தூக்கித் தன்னைச் சுற்றி வளைக்கச் செய்தாள். அவன் முகத்தைப் பார்க்கத் தன் முகத்தை நிமிர்த்திக் குதிகாலை உயர்த்தி எம்பினாள்.


மூடிய கண்களும் குவிந்து சிவந்த உதடுகளும் விடுத்த அழைப்பை ஏற்கவும் முடியாமல் நிராகரிக்கவும் முடியாமல் தவித்தபடி அவன் தொடர்ந்து பேசினான்: ''அப்படிச் சொல்வதற்கில்லை; என் ஒற்றர் படைத் தலைவன் மகா சாமர்த்தியசாலி!''

அவள் கண்களைத் திறந்து இமைகள் படபடக்க விழித்தாள். ''உங்களிடம் கற்றவன் வேறு எப்படி இருப்பான்?'' என்று கூறியபோது புருவங்கள் நெரிந்து கேள்விக் குறி எழுப்பின.

''இப்போது கூட அவன் நாம் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்தால் வியப்பதற்கில்லை.'' என்றான் விஜயாலயன். ''இதோ இந்தத் திரைச் சீலைக்குப் பின்னால் கூட ஒளிந்திருக்கலாம்!''

''அப்படியானால் இடையில் உள்ள உங்கள் வாளை உருவி இந்தத் திரையையும் கூடவே அவனையும் குத்திக் கிழித்துவிட வேண்டியதுதானே!'' என்றாள்குவளை. (தொடரும்)





கழுகு தொழு வேதகிரி

பி.வி. கிரி

திருத்தலம் கண்டேன்

அன்றுடம் ஆண்டவனைப் பாடி, ஆனந்தக் கண்ணீர் வடித்த அவள், அன்று மட்டும் அவலக் கண்ணீர் வடிக்கக் காரணம் என்ன?

புயல் காரணமாய் இறைவன் சன்னிதிக்குச் சென்று வழிபட இயலவில்லையே என்று மனம் நொந்த அவள், 'இறைவனே இவ்வீட்டு முற்றத்தில் எழுந்தருளினால் எத்தனை மகிழ்ச்சியாய் இருக்கும்?' என்று பேராசை கொள்கிறாள்.

உடனே ''முற்றத்திலே வந்து முன் நிற்கிலோ'' என வரும் ஒரு செய்யுளை மனமுருகப் பாடுகிறாள். என்ன விந்தை! இனிய தமிழ் கேட்டு இறைவன் அங்கு வந்து காட்சி யளித்தாரே!

பாடல் பாடியவள் ஒரு கணிகை. அவள் பெயர் நாச்சிமுத்து. பாடலுக்குக் காட்சி யளித்தவர் திருக்கழுக்குன்றத்து வேதகிரீஸ்வரர்.

திருக்கழுக்குன்றம் என்ற பெயர் எப்படி வந்தது?

இம்மலையில் நாள்தோறும் உச்சிக்காலத்தில் இரண்டு கழுகுகள், தமக்குக் கொடுக்கப்படும் உணவை உண்டு—செல்வதைக் காணலாம். அவை இரண்டும் இறைவனை வழிபட்டமையால் திருக்கழுக்குன்றம் எனும் பெயர் வந்தது. 'கழுகு தொழு வேதகிரி' என்று அருணகிரிநாதர் பாடியிருப்பது நினைவு கூரத்தக்கது. இதன் காரணமாகவே இது 'பட்சி தீர்த்தம்' எனப் பெயர் பெறுகிறது. பல ஆண்டுகளுக்கு முன்பு இத்தலத்துக்கு அருகில் உள்ள சதுரங்கபட்டணத்தில் இருந்த டச்சுக்காரரும், மேலை நாட்டினர் பலரும் இந்தக் கழுகுகளைப் பற்றிக் குறிப்புக்கள் எழுதி வைத்துள்ளனராம். நினைப்புக்கெட்டாத நெடுங்காலமாய் இந்த அற்புத நிகழ்ச்சி நடந்து வருகிறது.

இவையன்றி உருத்திரக்கோடி எனவும், கதலிவனமெனவும், சிவகைலாசமெனவும், தருமகோடியெனவும் தென்கயிலை தட்சிண கைலாசம் எனவும் இத் திருத்தலத்துக்குத் தான் எத்தனை எத்தனை பெயர்கள்! ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு சுவையான கதையும் கூறப்படுகிறது.



இத்தலத்தின் அடிவாரத்தில் ஓரிடத்தில் உள்ள மண்ணை எடுத்து மருந்து போல்உட்கொண்டால், மேனியில் பூசிக்கொண்டால் நோய் நீங்கும் என்பர். ஆகவே, இம்மண் 'மலை மருந்து' எனக் கூறப்படுகிறது. அனுமான் சஞ்சீவி மலையைக் கொணருகையில் அதன் ஒரு பகுதி இத்தலத்தில் விழுந்தது என்றும் ஒரு கர்ண பரம்பரைச் செய்தி கூறுகிறது. ஆகவே, இம்மலையின் ஒரு பகுதியை 'சஞ்சீவி மலை' என வழங்குகின்றனர்.

இத்திருத்தலத்தில் 12 தீர்த்தங்கள் உள்ளன. அவற்றுள் 'சங்கு தீர்த்தம்' என்னும் திருக்குளம் மிகவும் புகழ் பெற்றதாகும். 20 ஏக்கர் பரப்பளவுள்ள இத்திருக்குளத்தில் 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை சங்கு பிறக்கின்ற அற்புதம் நிகழ்கின்றது. இவ்வாறு பிறந்த அந்த அற்புதச் சங்குகளை இன்று கூட இங்கே காணலாம். பொதுவாக, சங்கு உவர் நிறைந்த கடலில்தான் பிறப்பது வழக்

கம். ஆனால் தூய நன்னீரில் — இத்திருக் குளத்தில் பிறப்பது அபூர்வமாகக் கருதப் படுகிறது.

மந்திரம் ஓத, மேளதாளங்கள் முழங்க அந்த அரிய சங்கினை ஊர்வலமாக எடுத்து வந்து, அதனால் இறைவனுக்கு அபிஷேகம் செய்வார்கள்.

தாழக் கோயில் பக்தவத்சலர் சன்னிதியில் ஓர் அறை நீண்ட காலமாகத் திறக்கப்படா மல் இருந்ததாம். நான்கு பக்கமும் கருங் கற்களால் ஆன அந்த அறையினுள் என்ன இருக்கிறது?

9—6—1967ஆம் ஆண்டு அந்த அறை யைத் திறந்து பார்ப்பதென தேவஸ்தானத் தினர் முடிவு செய்தனர். அதன்படி முக்கிய பிரமுகர்கள் முன்னிலையில் அறைக் கதவு—அதாவது அந்தச் சுவரின் கல் நீக்கப்பட்டது. அங்கே ஒரு சுரங்கப் பாதை தெரிந்தது. அந்தச் சுரங்க அறையும் திறக்கப்பட்டது. அங்கே அழகிய சிற்ப வேலைப்பாடுகள் அமைந்த பழங்காலச் சிலைகள் இருந்தன. நீண்ட நெடுங்காலமாகத் திறக்கப்படாமல் இருந்த அந்த ரகசிய அறையில், இந்தச் சிலைகள் எப்படி வந்தன? அது பற்றிய ஆய்வுகள் நடத்தப்பட்டு உள்ளனவாம்.

இத்திருத்தலத்தில் 'சங்கு தீர்த்த புஷ்கர மேளா — இலட்சத் தீபப் பெருவிழா' 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை, குரு ராசி கன்னியா ராசிக்குப் பிரவேசிக்கும் வேளை யில் நடப்பதாகும். வடக்கே கும்ப மேளா தெற்கே மகாமகம், இங்கே 'இலட்சத் தீபம்'. இவ்விழாவில் தமிழக மக்கள் மட்டுமின்றிப் பிற மாநிலத்தவரும் வந்து கலந்துகொண்டு இறைவன் அருளைப் பெறுவது, ஒருமைப் பாட்டை உணர்த்தவில்லையா?

ஒரு சங்கீத வித்வான் சினிமா ஹீரோவாகிறார்!



★ ''என்னசார், ஹீரோவா நடிக்கிறவர் தம்பூராவையும்எடுத்துக்கிட்டு ஷூட் டிங்குக்குப் போகிறாரே!''

''அதுவா? சுருதியில்லாமே டயலாக் கூடப் பேசமாட்டாராம், அவர்!''

★ ''சண்டைக்காட்சியை எடுக்கணும்னு ஹீரோ சொல்றபடிதான் கேக்கணு மாம்!''

''எப்படி?''

''வில்லனுக்கு அவர் குடுக்கற 'டிஷூம், டிஷூம்' ஆதிதாளத்திலே தான் இருக்கணும்கறாரே!''

டைரக்டர்: (ஹீரோவிடம்):

★ ''..நீங்க சங்கீத வித்வானா இருக்க லாம்; அதுக்காக உங்க காதலியோட டூயட் பாடறச்சே அவ பாட்டுக்கு சபாஷ், பலே, அபாரம், ச்சு!.ன் னெல்லாம் சொல்றது நியாயமா சார்?''

★ ''அங்கே என்ன தகராறு?''

''எல்லாம் அந்த வித்வான் ஹீரோ தான். பின் பாட்டுக்கு ஒரு சிஷ்யனா வது இருந்தாகணும்னு காதல் சீன்லே கூட அடம் பிடிக்கிறாரே!''

-ஜி. நடராஜன்

திரைஞானி

சினிமா

மூன்றாம் பிறை



விபத்து ஒன்றில் தன் நினைவுகளை இழக்கிறாள் விஜி. ஆஸ்பத்திரியிலிருந்து தப்பிச் சென்ற அவளை விபசார விடுதியில் சந்திக்கிறான் சீனு. அவளது குழந்தை உள்ளத்தால் ஈர்க்கப்பட்டு அவளை அங்கிருந்து விடுவித்துத் தன்னுடன் ஊட்டிக்கு அழைத்துச் செல்கிறான்.

கதைக்கு முன்னுரை இது. பின்னுரை:

அவளுடன் அவன் எப்படியெல்லாம் பழகுகிறான் எத்தகைய அன்பு செலுத்துகிறான்; எப்படித் தன் மனத்தைப் பறிகொடுக்கிறான் என்னும் நிகழ்ச்சிகளின் கோர்வைதான். அது ஒரு காவியம்.

கடைசியில் அவளுக்குப் பச்சிலை வைத்தியம் செய்து குணமடைந்து பழைய நினைவுகளைத் திரும்பப் பெற்றபோது...

அவளது நினைவிலிருந்து அவன் மறக்கப் படுகிறான். பெற்றோர்கள் வந்து அவளை அழைத்துச் சென்று விடுகின்றனர்.

'கேத்தி' ரயில் நிலையத்தில் விஜியைச் சுமந்து கொண்டு அந்தப் பாழாய்ப் போன ரயில் புறப்படுவதற்கு முன்னும் பின்னும் அவன் தன்னை ஞாபகப் படுத்திக் கொள்ள சீனு குரங்கு போல் சேஷ்டைகள் புரிவதும், குட்டிக்கரணம் போடுவதும்.... அடடா... அற்புதமான நெகிழ்ச்சி. கமல் தனது வழக்கமான திறமைகளிலிருந்து ஒரு படி உயர்ந்து நிற்பது இங்கே-தான்.

கமல் நடித்த படங்களில் கதாநாயகிகள் தலைநிமிர்ந்தது கிடையாது. இதில்? ஸ்ரீதேவியின் தலை அவர் படத்தில் உச்சரிக்கும் 'ஒட்டகம்' மாதிரி நிமிர்ந்து நிற்கிறது. அடேயப்பா! இத்தனை திறமைகளை இத்தனை நாள் இவர் எங்கே ஒளித்து வைத்திருந்தார்?

சுப்ரமணி.... சுப்ரமணி என்று இவர் தன் நாயுடன் கொஞ்சுவதும், வாயின் ஒரு பக்கத்தை மட்டும் அசைத்து 'சரி' என்பதும் கமல் உணவைப் பிசைந்த போது தலையைச் சாய்த்து 'ஊட்டிவிடு' எனக் குழைவதும்... கோபம் வரும் போது 'ூ' சொல்கின்ற குழந்தைத்தனமும் புடவை கட்டத் தெரியாமல் சுற்றிக் கொண்டு வந்து நிற்கும் அவலமும்... மற்றொரு மூன்றெழுத்து நடிகையின் பெயரைப் பரிசுப் பட்டியலில் இருந்து ரப்பர் போட்டு அழித்து விடுவாரோ என எண்ண வைக்கிறது.

சீனுவை மயக்கித் தன் வசப்படுத்துவதில் ஸ்மிதாவுக்கு பேண்ட் எய்ட் உதவி செய்வது போல் அந்தக் கண்களும் உதடுகளும்... ஜெயமாலினியே உஷார்!

நரிக் கதைப் பாட்டும் அதைப் படமாக்கிய விதமும் படம் பார்ப்பவர்களை உற்சாகப்படுத்துகிறது.

காமிராவுக்கு முத்தம் கொடுக்கலாம் போல இருக்கிறது. மார்வலெஸ் போட்டோ கிராபி.

பாலு மகேந்திராவின் தலையில் இருக்கும் தொப்பியைப் பிடுங்கி அவருக்கே 'ஹேட்ஸ் ஆஃப்' செய்யலாம்.

மூன்றாம் பிறையா அது? முழு நிலவு!



அமிதாப்பைச் சிக்கவைத்த நடிகை



அமிதாப்பின் அபிமான ரசிகை சுவர்ணா. சென்னையில் நடிக்கவந்த அவரைச் சந்தித்து எப்படியாவது பேசிவிடுவது என்ற முடிவுடன் அவரது செயலாளர் பப்பன்லாலைச் சந்தித்துப் போராடி அனுமதியும் பெற்று விட்டார் இவர்.

சந்திப்பு நிகழ்ந்தது.

''நான் உங்கள் விசிறி'' என்றவாறே பேச்சைத் துவக்கினார் ஸ்வர்ணா.

உடனே அமிதாப் தம் இரு காதுகளையும் பொத்திக் கொண்டாராம்.

''இதெல்லாம் கேட்டுப் புளித்துப் போயிற்று'' என்று கூறிவிட்டு அவரைப் பற்றிய முழு விவரங்களையும் தெரிந்து கொண்டார். குழந்தை மாதிரி பழகினாராம்.

'லாவாரிஸ்' படத்தில் அமிதாப் மிகச் சிறப்பாகத் தெலுங்கு பேசியதை சுவர்ணா பாராட்டியபொழுது 'தனக்குத் தெலுங்கே தெரியாது' என்றவர் ''எனக்குத் தெலுங்கு சொல்லிக் கொடுக்கிறாயா?'' என்று தமாஷாகக் கேட்டிருக்கிறார்.

குறும்புக்கார ஸ்வர்ணா தெலுங்கில் ஒரு வாக்கியத்தைச் சொல்ல அமிதாப் அதைத் திருப்பித் திருப்பிச் சொல்லி நினைவில் நிறுத்திக் கொண்டார். பிறகு ''இதன் பொருள் என்ன?'' என்று கேட்க ''நமஸ்தே சௌக்கியமாக இருக்கிறீர்களா? என்று அர்த்தம்'' என்று தமாஷாகப் பொய்சொல்லி விட்டுப் புறப்பட்டுவிட்டார்.

அமிதாப் அந்தத் தெலுங்கு வார்த்தையை யாரிடமாவது பயன்படுத்த நினைத்து மற்றொரு நாள் வஹிதா ரெஹ்மானிடம் போனார். அவர் சொல்லிக் கொடுத்ததை அப்படியே ஒப்புவித்துக் கையைக் குவித்து வணங்கியிருக்கிறார்.


வஹிதாவுக்குத் தெலுங்கு தெரியும். முதலில் அவர் திடுக்கிட்டாலும் பிறகு யாரோ இவருக்குத் தவறாக அர்த்தம் கூறியிருக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொண்டு விட்டார். நடந்த விஷயத்தைக் கேட்டுத் தெரிந்து கொண்டு அந்த வார்த்தைக்குச்சரியான அர்த்தத்தையும் கூறி விளக்கியபோது அமிதாப், ''அப்படியா அர்த்தம்? அந்தப் பெண் மறுபடியும் வரட்டும் பேசிக்கொள்கிறேன்'' என்றாராம்.

அடுத்த முறை அவர் சென்னை வந்தபோது மீண்டும் அவரைச் சந்தித்தார் சுவர்ணா. அப்பொழுது ''போக்கிரி என்னை ஏமாற்றி விட்டாயே'' என்று செல்லமாகச் சிரித்தவாறே கடிந்து கொண்டு நடந்த விபரீதங்களையும் சொல்லியிருக்கிறார்.

இத்தனை விவரங்களையும் என்னிடம் கூறிய சுவர்ணா அந்தத் தெலுங்கு வார்த்தையை என்னிடம் எப்படிச் சொல்வதென்று தயங்கியவாறே சொன்னார்:

''நேனு நின்னு பிரேமின்ஸ்தானு. ப்ரண்டே நாகு சால ப்ரியா.''

பொருள்: நான் உன்னை நேசிக்கிறேன். உன்மீது எனக்கு அதிகப் பிரியம்.''





✕ தேவி பிரசாத்



மேஜர் கோபம்!



✕ வியட்நாம் வீடு சுந்தரம்

யாருக்கும் கிட்டாத வாய்ப்பு

'நலந்தானா' படப்பிடிப்பில் ஒளிப் பதிவாளர் தேவி பிரசாத்தைச் சந்தித்தேன். சிவாஜி கணேசனின் மகன் பிரபுவைப் பல கோணங்களில் படம் எடுத்துக் கொண்டிருந்தவர் என்னிடம் வந்து ''இதுவரை யாருக்கும் கிடைக்காத வாய்ப்பு எனக்குக் கிடைத்திருக்கிறது'' என்றார்.

''எதைச் சொல்கிறீர்கள்?'' என்றேன்.

''ரொம்பப் பேருக்குத் தெரியாது.. நான் ஒரு நடிகன் என்று. 'மோட்டார் சுந்தரம் பிள்ளை' படத்தில்சிவாஜி கணேசனின் மகனாக நடித்திருக்கிறேன் நான். இன்று அவரது மகனைப் படம் பிடித்துக் கொண்டிருக்கிறேன். அவருக்கு மகனாக நடித்தபோது இப்படி அவருடைய மகன் நடிக்கும் படத்துக்கே ஒளிப் பதிவு செய்வேன் என்று நினைத்திருப்பேனா? இந்த வாய்ப்பு அனைவருக்கும் கிடைக்குமா?'' என்றார்.

அப்பொழுது ''இதோ நான் இருக்கிறேன்'' என்றவாறே ஒருவர் வந்தார். அவர்தான் வியட்நாம் வீடு சுந்தரம்.

''அப்பாவுக்கும் கதை வசனம் எழுதியிருக்கிறேன். இப்பொழுது மகனுக்கும் எழுதியிருக்கிறேன்''என்றார் அவர்.

● மேஜருக்குக் கோபம் வந்து நான் பார்த்ததில்லை. அன்றுதான் பார்த்தேன்.

ஃப்ளோருக்கு வெளியே ''ஊரும் உறவும்'' படத்திற்கான காட்சி ஒன்றைப் படமாக்கிக் கொண்டிருந்தார். மருத்துவக் கல்லூரிக் காதலனைத் தேடி வந்த ஒரு பெண்ணை மாணவர்களெல்லாம் சூழ்ந்து கொண்டு கலாட்டா செய்வது போன்ற காட்சி. மாணவியாக நடித்த புது முகம் ரஞ்சனி பயந்துபோய், அங்கிருந்த காரின் முன் பகுதியில் ஏறி அமர, சுமார் இருபது இளைஞர்கள் திபுதிபுவென ஓடிச் சென்று அதே கார்மீது ஏறிக்கொள்ள வேண்டும்.

முதல் டேக் எடுத்தபோதுதான் அந்தத் தவறு நடந்து விட்டது. இளைஞர்களுள் ஒருவர் ஓடிவந்த வேகத்தில் ரஞ்சனியின் மடி மீது கை ஊன்றி விட்டார். வந்ததே கோபம் மேஜருக்கு!

''டோன்ட் டச் த கேர்ள். நாளைக்குப் படம் ரிலீஸாரப்போ நாங்க காலேஜ் ஸ்டு-டண்ட்ஸ் இப்படியா நடந்துக்குவோம்னு என் கிட்ட சண்டைக்கு வந்துடுவாங்கோ... ஏன் போய் மேலே விழறீங்க?'' என்று சற்றுக் கோபமாகவே பேசிவிட்டார். அடுத்த டேக்கில் காட்சி ஓகே ஆயிற்று.

மாணவர்களுள் ஒருவராக நடித்த மகேந்திரன் நேராக என்னிடம் வந்து ''ஒரு மகிழ்ச்சியான செய்தி'' என்றார்.

''தெலுங்குப் பத்திரிகையான 'சிதாரா' வாசகர்கள் என்னைச் சிறந்த தெலுங்குப் பட சிரிப்பு நடிகராகத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். இத்தனைக்கும் நான் இரண்டே இரண்டு தெலுங்குப் படங்களில் மட்டுமே நடித்திருக்கிறேன். ஒன்று 'குரு' மற்றொன்று 'அமாவாசை சந்துருடு'. 'ராஜபார்வை' கதை இது'' என்றார்.

''கங்ராஜுலேஷன்ஸ்'' என்று கூறிவிட்டு ''தெலுங்குப் படங்களில் லட்ச ரூபாய்வரை வாங்கிய ராஜ் பாபுவுக்கு இப்போது மார்க்கெட் இல்லை. வேறு யார் அந்த இடத்தைப் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள்?'' என்று கேட்டேன்.

என் கேள்விக்கான பதிலை மகேந்திரன், எதிரில் நின்று கொண்டிருந்த 'சிதாரா' நிருபர் 'பியாஸ் சந்'தைக் கேட்க அவர் கூறிய பதில் எனக்குப் பெரிய நியூஸாகப் பட்டது.

பின்னணிப் பாடகர் எஸ். பி. பாலசுப்பிரமணியமும் இசையமைப்பாளர் சக்கரவர்த்தியும்தான் இன்றைய தெலுங்குப்பட வுலகக் காமெடியன்களாம்! எஸ். பி. பாலசுப்பிரமணியம் காமெடியனா? கேட்கும் போதே எனக்குச் சிரிப்பு வந்தது!

அஸ்திவாரம்



மோதல்.... மோதல்... மோதல்...

அண்ணன் — தம்பி; அக்கா — தங்கை; அப்பா - அம்மா. படம் முழுக்க மோதல்தான். பாசத்திற்கும் பூசலுக்கும் குறைவில்லைதான். என்றாலும் நிறைவில்லையே!

அக்காவும் தங்கையும் ஒரே குடும்பத்தில் வாழ்க்கைப்படுகிறார்கள். தங்கைக்காரி சொத்துக்கு ஆசைப்பட்டு அக் குடும்பத்தையே சின்னா பின்னப் படுத்துகிறாள். கடைசியில் அவள் திருந்தும்போது அக்காவின் உயிர் பிரிந்து விடுகிறது.

கதாநாயகியே வில்லியாக இருக்கும்போது இன்னொரு வில்லனைச் சம்பந்தமில்லாமல் புகுத்தியிருப்பது 'இடைஞ்சல்'தான்.

அண்ணி. அண்ணியாக வரும் ஜெயசங்கரும் விஜயாவும் நடிப்பில் நிறைவைத் தருகிறார்கள். வனிதா தங்கை.

தம்பியாக வருகிறார் (சங்கர்) கணேஷ். தெரிந்த தொழிலை விட்டு விட்டு அடுத்த தொழில் தேவை தானா? சிந்திக்க வைக்கிறார்.


கைவிரல்களை வைத்துக் கொண்டு கதாபாத்திரங்களின் குணாதிசயங்களுக்கு அவைகளை ஒப்பிடும் நயத்தில் வசனகர்த்தா முத்து பாரதி சோபிக்கிறார்.

எடிட்டரே டைரக்டரானால் கத்தரிக்கோலைப் பயன்படுத்த மனம் வராதோ?

எல்லாக் காட்சிகளுமே நீண்டு நம் பொறுமையைச் சோதிக்கின்றன.

அஸ்தி'பாரம்'!


கசக்குங்கள் மூளையை!



படங்கள் அனைத்தும் இடமாறி இருக்கிறது. அவற்றைச் சரியாக வரிசைப்படுத்த முயலுங்கள்.

விடை: 1-D, 2-C, 3-A, 4-B.

பொக்கிஷம்



PHONE: 41881
GRAMS: SOUNDS
POST BOX No 2284
MADRAS-26

A.V.Meiyappan
PROPRIETOR A.V.M. STUDIOS

28th Octr. 1965

Sri K. Balachander,
9 III Street,
Gopalapuram,
Madras-6

Dear Mr. Balachander,

I had the pleasure of seeing your picture "Neerkkumizhi" only day before yesterday. I hasten to congratulate you on your success in your first directorial venture.


You are a good dramatist and you have proved equally a good Director also in your first assignment itself by handling this subject and added your name to the list of the existing few good Directors.

With best wishes,

Yours sincerely,

/A.V. MEIYAPPAN/





''என்னுடைய பி.எஸ்ஸி டிகிரி சர்ட்டிஃபிகேட்டைக் கூட அவ்வளவு பத்திரமாய் பாதுகாக்கவில்லை. ஆனால் இதை நான் பொக்கிஷமாய்க் கருதிப் பாது காத்து வருகிறேன் தெரியுமா?'' என்று காட்டுகிறார் **டைரக்டர் கே. பாலசந்தர்** ஒரு ஃபிரேம் போட்ட கடிதத்தை. அதை எழுதியவர் திரையுலக மேதை, திரு. ஏ.வி.எம். அவர்கள். ''1965 அக்டோபரில், முதன் முதலாக நான் டைரக்ட் செய்த படமான 'நீர்க்குமிழி' வெளியான சமயம். அதைப்பார்த்து விட்டு ஏ.வி.எம் என்னைப் பாராட்டி, இதை எழுதினார். அவர் ஒரு சிறந்த கலா ரசிகர். நல்லது எங்கே இருந்தாலும், அதைத் தேடிச் சென்று, கண்டு, பாராட்டும் பரந்த மனம் கொண்ட நல்ல மனிதர். என் நாடகங்களுக்கெல்லாம் வந்து, ரசித்திருக்கிறார். கடிதம் கிடைப்பதற்கு முன்பு இரண்டே தடவைகள் தான் அவரைப் பார்த்திருக்கிறேன். எனக்கு அவர் எழுதிய இந்தக் கடிதத்தைப் பார்த் ததும், எனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவே கிடையாது. திரை உலகமே என்னை வாழ்த்தி வரவேற்பதாய் நினைத்து மகிழ்ந்தேன்'' என்றார்.

பேட்டி : **எஸ். சந்திரமௌலி**

அன்புள்ள பாலசந்தர்,

முந்தாநாள்தான் தங்களுடைய நீர்க்குமிழி திரைப்படம் பார்த்து மகிழ்ந்தேன். டைரக்ஷன் துறையில் முதல் முயற்சியிலேயே தாங்கள் அடைந்துள்ள வெற்றிக்கு எனது வாழ்த்துக்கள்.

நீங்கள் நல்ல நாடக கர்த்தா. இப்போது, பொறுப்பேற்ற முதல் படத்திலேயே நல்ல இயக்குனர் என்றும் நிரூபித்துள்ளீர்கள். இன்றுள்ள நல்ல இயக்குனர்கள் பட்டியலில் தங்கள் பெயரையும் சேர்த்துக் கொண்டு விட்டீர்கள்!

வாழ்த்துக்களுடன்,

தங்கள் உண்மையுள்ள
ஏவி. மெய்யப்பன்


Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd, at the Bharathan Press Race Course Road Guindy Madras-600 032. (Phone: 431543)
Assistant Editor: P.S. Mani   Layout Artist: Nambi   Editor: K. Rajendran



புதுப்படிமத்தைப் பழசாக்குகிறார்கள்

(கட்டுரை உள்ளே)

'பூம்புகார்' தயாரித்துள்ள காளிங்க நர்த்தனம் சிலை


காந்தமென அலங்காரம் கவர்ந்திழுக்க
சாந்தமுள்ள பொட்டிடுவீர் நெற்றியிலே.
கவிபாடுதே உங்கள்
கண்கள்... கவர்ச்சி காட்டு
ரோஜா இதழ்கள். கட்டழகு
மலருதே. நெற்றி கொண்ட
சிங்கார் குங்குமத்தால்.
சிங்கார்... உன்னத
பொருட்களால் உருவானது.
உங்கள் உள்ள நிலைக்கும்
உடை அழகுக்கும் ஏற்ற
வண்ணங்களிலே.
சிங்கார்
குங்குமப் பொட்டு
இந்தியாவின்
ஒப்பற்ற
அழகுதிலகம்.
Shingar